
வெண்ணிலவு
நீ எனக்கு
ரமணிசந்திரன்

# வெண்ணிலவு நீ எனக்கு

## 1

சென்னை மாநகரச் சாலைகளில் கூடச் சம தரையில் செல்வது போல வழுக்கி ஓடிய கார்ச் சவாரியை ரசித்த படியே, தனஞ்சயன், தன் டயோட்டாவை ஓட்டினான்.

ஒரு கார் நிறுவனத்தின் விளம்பரத்தில் வருவது போலப் பின் சீட்டில் அமர்ந்திருந்தது, காரோட்டிதான். அலுவலகக் கட்டிடத்தின் வெளி வாயில் தாண்டி, உள் நுழைவாயிலை முதலாளி காரை விட்டு இறங்கிய பிறகுதான். அவனது பணி தொடங்கும். அது வரை, கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பது தான் அவனது வேலை.

சொல்லப் போனால் டிரைவரைக் காரோட்டச் சொல்லிவிட்டு, இந்த அரை மணி நேரப் பயணத்தில்

தனஞ்சயன் தொழில் தொடர்பான பல வேலைகளைக் கவனிக்கலாம்தான். ஆனால், அவனே உழைத்து, உயர் நிலைக்கு வந்து, வாங்கிய, விலையும் உயர்ந்த கார், அதில் சவாரி செய்வதை அவனே ரசிக்காவிட்டால் எப்படி?

ஒரு தரம், பாண்டிச்சேரி அன்னையுடைய பக்தரான ஒரு நண்பரோடு, மதர் சென்டருக்குச் சென்றிருந்தான்.

அன்னையின் பல அறிவுரைகளை அழகாக எழுதி ப்ரேம் செய்து, அங்கங்கே தொங்க விட்டிருந்தார்கள். அவற்றில் ஒன்று அவனை ரொம்பவும் கவர்ந்தது.

'அதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டம் என்று அறிந்தவன்தான் அதிருஷ்டசாலி.'

உண்மைதானே? வசதியான சோபாவை வாங்கிப் போட்டால் போதுமா? உட்காரும் வேளையில் அதன் சுகத்தை உணர்ந்து ரசிக்கும்போதுதானே அதை வாங்கியதே ஒரு சாதனையாகும்?

நல்ல 'வ்யூ பாயிண்டு'டன் சிலுசிலுக்கும் கடல் காற்று வீசும்படியான ப்ளாட்டை வாங்கினால், காற்றையும் காட்சியையும் ரசித்து மகிழ்ந்தால் தானே, அது அதிர்ஷ்டக் கணக்கில் சேரும்?

இப்படி ரசிக்கத் தொடங்கியதில்தான், இந்தக் கார் ஓட்டுவதும் சேர்ந்து கொண்டது.

அதுவரையுமே நன்றாகப் படித்தது, வேலை பார்த்தது, வேலை பார்க்கும்போதே தொழிலைத் தொடங்கியது. அது வெற்றிகரமாக நடக்கத் தொடங்கியதும், வேலையை விட்டு விட்டுத் தொழிலையே முழு நேரமாகப் பார்த்து வருமானத்தை வேகமாகப் பெருக்கத் தொடங்கியது...

தனஞ்சயன் ஆசையோடும் மகிழ்ச்சியோடும் செய்தது, எதுவுமே கிடையாது. அவனது வேகம், உழைப்பின் அடிப்படையில் இருந்தது. வெறும் வெறுப்பு மட்டும் தான்.

அவன் அப்படியென்ன தப்பு செய்தான், இவன் வேண்டாம் என்று உதறிவிட்டுப் போவதற்கு?

தாத்தா பாட்டி, பிரியமாகத்தான் இருந்தார்கள் தாயற்ற பிள்ளை என்று பரிவும்தான். ஆனால் ''உன் அம்மா...'' என்று பாட்டி கண் கலங்கும்போது, தன் தப்புப் போலத் தனஞ்சயனுக்கு, அது இன்னமும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

அத்தோடு, அந்த வீட்டில் அவன் மட்டும் பேரனல்ல, தாய்மாமன் பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்களுள் என்ன பேச்சு நடந்ததோ? தங்கள் சோற்றை திருட வந்தவனாகவே அவர்கள் தனஞ்சயனைப் பார்த்தார் கள்.

பிள்ளையைப் பார்க்கும்போது, அதன் தாய் முகம் நினைவு வருவதைத் தாள முடியாமல், மருமகன் பிள் ளையை இங்கே கொண்டு வந்து விட்டு விட்டதாகப் பாட்டி சொன்னாள்.

ஆனால் ''ஆம்பிளைப் பிள்ளை, படிப்புச் செலவு கொஞ்ச மாகவா ஆகும்? அதற்குப் பயந்து மாமனார் வீட்டில் பிள்ளையைத் தள்ளிவிட்டு, இவன் அப்பா சவாரி விட்டு விட்டார்'' என்று அத்தை சொன்னாள். ''போட்டோ எடுக்கிற தொழிலில் அப்படி என்ன வருமானம் வரும்?''

தாடையைத் தடவி யோசித்துவிட்டு ''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நம் வீட்டுப் பிள்ளைகளின்

படிப்புச் செலவை நினைக்கும்போதே, மலைப்பாக இருக்கிறது. இதில் மூன்றாவதாக இன்னொன்றும் சேர்ந்து விட்டது!'' என்று அலுத்துக் கொண்டார் மாமன்.

அம்மாவோடு ஒரு தரம் வந்தபோது, தலைக்கு மேலே தூக்கிப் போட்டு விளையாடியவர்தான். ''பிள்ளைக்கு என்ன வேண்டுமானாலும், என்னிடம் சொல் சீதா!'' என்றவர்தான்.

ஆனால் இப்போது அந்த சீதாவே இல்லாதபோது, அவள் பெற்ற பிள்ளை சுமையாகத் தோன்றியது போலும்.

ஆனால், அப்படிச் சொல்வதற்கும் இலலை. அம்மா கடவுளிடம் போனபோது, அங்கே வந்து அழுதுவிட்டு ''தனாவைத் தனியாக எப்படி வளர்ப்பீர்கள்? எங்களோடு கூட்டிப் போகவா?'' என்று கேட்டார்களே!

ஆனால் அன்றைய ஆறு வயது சிறுவனுக்கு இதெல் லாம் சரியாகப் புரியாவிட்டாலும், அன்பாக வரவேற்ற தாத்தா வீடு இது இல்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்து போயிற்று.

காரணம், அவனுடைய தந்தை, அவனை இவர் களிடம் தள்ளிவிட்டுக் கண் காணாமல் போய்விட்டார் என்பதே!

அதனாலேயே எல்லோருக்கும், அவன் இப்படி வேண் டாதவனாகப் போய் விட்டான்?

இந்தப் பேச்சு வார்த்தைகள் எதிலும் அதிகம் கலந்து கொள்ளாத தாத்தா மட்டும், அவனை அருகமர்த்தி மெல் லப் பேசுவார். அடிக்கடி அவர் சொன்னது, படிப்பு தான், அவனைப் பெரிய ஆளாக்கப் போகிறது என்பது தான்.

மாமா மக்கள் இருவரையும் கான்வென்டில் படிக்க வைத்தபோதும், அவனைக் கார்ப்பரேஷன் பள்ளியில் தான் சேர்த்தார்கள்.

முதலில் சற்றுத் தரையிறக்கமாக உணர்ந்தாலும், தாத்தாவின் அமைதியான வழிகாட்டுதலில் நல்ல மதிப் பெண்கள் வாங்கவும், ஆசிரியப் பெருமக்கள், அவனைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடினர். அவர்களது ஆதரவில் உபகாரச் சம்பளங்கள் கிடைத்தன!

ஆனால் இத்தனை வெற்றிகளின் பின்னேயும், அவனைத் தாத்தா வீட்டில் விட்டுவிட்டுத் திரும்பிப் பாராமல் சென்ற தந்தையின் தோற்றம், அவ்வப்போது தோன்றி, அவனை ஆத்திரப்பட வைக்கும்.

நீங்கள் கைகழுவிவிட்டுப் போனதால் நான் அழிந்தா போனேன்? நீங்கள் கூடவே இருந்து வளர்த்திருந்தால் கூட, நான் இவ்வளவு வளர்ந்திருக்க மாட்டேனே என்று, எதிரே அவர் நிற்பது போலப் பாவித்துப் பெருமை பேசுவான்.

பெருமைதான். பெருமைப் படத்தக்க தகுதியை அடைந்த பிறகு, அது பற்றிப் பெருமையடிப்பதில் என்ன தப்பு?

அதுவும், எங்கே போனார், என்ன ஆனார் என்றே தெரிந்திராத... அதை விடவும், பெற்ற பிள்ளைகளுக்குக் கூட, அந்த விவரங்களைத் தெரிவித்திராத ஒரு மனிதரிடம், என்னதான் சொல்லக் கூடாது?

வாயாரத் திட்டவே செய்யலாம். ஆனால், கண் முன்னே இல்லாத மனிதரைத் திட்டி, எரிச்சலைத் தணித்துக் கொள்வது, சற்றுத் தரக்குறைவு, வேண்டாம்.

அதைவிடத் தன் சாதனைகளைப் பற்றிச் சொல்லிக் கொள்வது, அவனது மனதுக்கும் நிறைவு தரும்.

அன்று காரை ஓட்டும்போது, பாதியிலேயே மனம் தந்தையிடம் தாவி, ஓட்டுதல் ரசனை குறைந்து போயிற்று.

எதற்கு? மகனைப் பற்றிய அக்கறையே இல்லாமல், இருபது ஆண்டுகளுக்கும் முன்பாகக் கை கழுவிவிட்டுப் போன மனிதர், அவரைப் பற்றிய நினைவுகள், இப்போது ஏன் அடிக்கடி வருகின்றன?

ஒருவேளை... ஒருவேளை, மகனுக்குச் செய்த அநியாயம் குறித்து, காலம் கடந்து இப்போது வருத்தப் படுகிறாரோ? மகனைப் பார்க்கத் துடிக்கிறாரா?

டெலிபதி மாதிரி, அந்த எண்ண அலை, அவனைத் தாக்குகிறதோ?

அப்படி ஏதும் என்றால், நேரடியாக அவனைத் தொடர்பு கொள்ள வேண்டியதுதானே?

தனஞ்சயன் என்ன, அவரைப் போலக் கண் காணா மலா போய்விட்டான்?

பிய்ந்துபோன பழைய செருப்பு போல, அவனை, அவர் உதறிவிட்டுப் போன இடம், அவனுடைய தாய் வழித் தாத்தா வீடு. தாய்மாமன் குடும்பத்தோடு மும்பைக்குக் குடி பெயர்ந்தபோது, அவரிடமிருந்து அந்த வீட்டை வாங்கி, கவனிப்பதற்கு ஆள் போட்டும் வைத்திருக் கிறானே! வீட்டையும் பேரனையும் பிரிய மனம் இல் லாமல், பாட்டியும் தாத்தாவும் பேரன் ஆதரவிலேயே தங்கி விட்டனர்!

இப்போதும் அந்த வீட்டில்தான். மகனிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், அந்த வீட்டுக்கு வந்தாலே... அல்லது, அந்த முகவரிக்கு கடிதம் எழுதினாலே போதுமே!

அப்படி எதுவும் செய்யாதபோது, எண்ண அலையாவது, இன்னொன்றாவது? சும்மா வெறும் கற்பனை!

அலுவலகக் கட்டிடத்தின் உள் வாயிலில் காரை நிறுத்திவிட்டு, காரை விட்டு இறங்கியதும், ஓர் இனிய புன்னகையோடு 'இனி உன் பொறுப்பு' என்பது போலக் கைகாட்டிவிட்டு, உள்ளே செல்லும் முதலாளி, அன்று அவனைக் கண்டு கொள்வதாகவே இல்லாமல், நேராகச் செல்வதை வியந்து பார்த்துவிட்டுக் காரில் ஏறி அமர்ந்தான் காரோட்டி.

காரை, அதன் பார்க்கிங் இடத்தில் கொண்டு நிறுத்துவது, அவன் பொறுப்பாயிற்றே!

சற்று அமைதியற்ற மனதுடனேயே தன் அறையை அடைந்து, இருக்கையில் அமர்ந்தான் தனஞ்சயன்.

ஈமெயிலை ஓபன் பண்ணுமுன், செயலாளர் பிரித்து அடுக்கி வைத்திருந்த அன்றையத் தபாலைத் தனஞ்சயன் ஒரு நோட்டம் விட்டான்.

பர்சனல் என்று ஆங்கிலத்திலும், சொந்த விஷயம் என்று தமிழிலும் எழுதி அடிக் கோடிட்டிருந்த கடித உறை கவனத்தைக் கவர, அவசரமாக அதை எடுத்துப் பார்த்தால், சுவரின் இடது பக்க ஓரமாக எழுதப்பட்டிருந்த அனுப்புனரின் பெயர், அவனுடைய தந்தையுடையது!

சில வினாடி தனஞ்சயனுக்கு ஒன்றும் புரியவில்லை.

கடித உறையைத் திரும்பவும் பார்த்தான்.

அது, திருச்சி விலாசத்துக்குப் போய் திருப்பி அனுப்பப்பட்டு, இங்கே வரவில்லை!

அப்படியானால், அவனுடைய தந்தை தில்லைநாதனுக்கு மகனின் இந்த முகவரி தெரியும். அவனது வளர்ச்சியும், இங்கே அவனது உரிமையும் கூட! அது தான், எம்டி என்று தெளிவாக எழுதியிருக்கிறாரே!

தெரிந்தும் இத்தனை காலம் ஏன் தொடர்பு கொள்ளவில்லை? அல்லது, இப்போதுதான் தெரியுமா? தெரிந்ததும், பற்றிக் கொள்ள முயற்சிக்கிறாரா?

சிறு வெறுப்புடன் கவரை உடைத்துக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

கடிதம் ரத்தினச் சுருக்கமாக இருந்தது.

''காலம் குறுகிக் கொண்டிருக்கிறது. ஒரு பெரும் சுமையை இறக்கி வைக்க விரும்புகிறேன். உடனே வா'' என்று அதிகாரம் காட்டி, அழைத்த போதும், அப்படியில்லை என்று காட்டுவதற்காகத் 'தயவு செய்து' என்ற ஒரு வார்த்தை தனியே சேர்க்கப்பட்டு இருந்தது.

இந்த வார்த்தையைச் சேர்க்காமல் விட்டிருந்தாலும், பெற்ற தந்தை என்பதற்காகவே, தனஞ்சயன் அவரைப் போய்ப் பார்த்துதான் இருப்பான். அவரைப் போலக் கடமை மறப்பவன், அவன் அல்ல.

அதிலும் 'காலம் குறுகிக் கொண்டிருக்கிறது' என்றால்?

தானாடாவிட்டாலும் சதையாடும் என்பதற்கு இணங்க நெஞ்சு தடதடத்தபோதும், அவரது 'பெரும் சுமை'

அவருடைய இன்னொரு குடும்பமாக இருந்தால், அந்தச் சுமையை ஏற்க அவன் ஆளில்லை!

இந்த வயதில், அவனுக்கு ஒரு சிற்றன்னை! அவள் பெற்ற குஞ்சு குளுவான்கள், அவனை அண்ணா என்று அழைப்பது... சேச்சே!

அவனுடைய தந்தை, நல்லகாலமாக அப்படிப்பட்ட சிக்கல்கள் எதையும் உருவாக்கி வைத்திருக்கவில்லை. ஆனால் அவர் தங்கியிருந்த லைன் வீட்டையும், அதன் சுற்று வட்டாரத்தையும் பார்க்கையில் அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

நாடாக் கட்டிலில் 'என்பு தோல் போர்த்திய உடம் பா'ய்ப் படுத்துக் கிடந்தவருக்கு, மகனைப் பார்த்ததும், கண்களில் பிரகாசம் வந்தது. மெல்ல எழுந்து அமர்ந்து ''தனா, நீதானா கண்ணா? எப்படி வளர்ந்து விட்டாய்!'' என்றார் பிரமிப்புடன்.

இருபது ஆண்டுகளில் ஆறேழு வயதுப் பையன் வளராமல் அப்படியேவா இருப்பான் என்ற சிடுசிடுப்பு, வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, அவனை மறுபடியும் அவர் பார்த்த விதத்தில் மறந்தது.

இந்த பாசத்தை வைத்துக் கொண்டு, இவர் ஏன் இத்தனை ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் செய்ய வேண் டும்?

எட்டிப் பார்த்த ஒரு சிறுவனிடம், மகனுக்கு நாற்காலி எடுத்துப் போடும்படி, தில்லைநாதன் இந்தியில் சொன் னார்.

நாற்காலி வந்ததும், இரண்டு ஸ்பெஷல் டீ கொண்டு வருமாறு பணித்தார்.

தனக்கு வேண்டாம் என்று மறுத்தான் மகன்.

செல்லும்படி பையனிடம் கை காட்டிவிட்டு, ''மறுக் காதேப்பா. இந்த டீ நன்றாக இருக்கும். எனக்கு என்றால், சுத்தமாகவும் போட்டு அனுப்புவார்கள். என்னென்னமோ செய்திருக்க வேண்டியவன், செய்யாமல் விட்டுவிட் டேன்... இதையாவது, தருகிறேனே!'' என்று வருத்தத் துடன் கூறினார்.

காலம் கடந்த ஞானோதயம் என்று எண்ணினாலும், அதைச் சொல்லாமல் தனஞ்சயன் நாற்காலியில் அமர்ந் தான்.

இரும்பு நாற்காலி, மட்டையாய் நின்றது.

வசதியாய் அமுக்கிக் கொடுக்கும் வீட்டு சோபா நினைவு வர ''அதெல்லாம் போகட்டும். என் நிலைமை தெரியும்தானே? இப்படி கிடக்காமல், அங்கே என்னிடம் வந்திருக்கலாம்தானே? நீங்கள் என்னதான் என்னை வேண்டாம் என்று தூக்கிப் போட்டு விட்டுப் போனா லும், உங்களை நான் விட்டு விடுவேனா?'' என்று கோபமும், குறையுமாகக் கேட்டான்.

''ஐயோ இல்லைப்பா'' என்று அவசரமாக மறுத்தார் பெற்றவர். ''உன்னைத் தூக்கிப் போட்டு விட்டு வரவில் லைப்பா. பாதுகாப்பாக உன் தாத்தா பாட்டியிடம் விட்டு வந்தேன். நான் எப்படி, உன்னைப் போய் வேண்டாம் என்று எ... எண்ணுவேன்? அ... அது, அப்படி இல்லை க... கண்ணா. ஏற்கனவே, எனக்குத் தண்டனையாக, உன் தங்கையையும் தாயையும் இழந்ததே, தாங்க முடியாத சோகம், அதற்கும் மேல், நான் செய்த பாவம் உன் னையும் தொட்டுவிடக் கூடாது என்றுதான்... என்று

தான், உன்னை அங்கே விட்டுவிட்டு, இவ்வளவு தூரம் ஓடி வந்தேன்!'' என்று வேகவேகமாக விளக்கம் கூறி முடிக்குமுன், அவருக்கு மூச்சு வாங்கியது.

''சரி சரி. பேசியது போதும். மூச்சு வாங்குகிறது. எல்லாம், பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று அவரது பேச்சைத் தடுத்து நிறுத்தினான், தனஞ்சயன்.

''முதலில் ஒரு டாக்டரிடம் போகலாம். மூச்சு இப்படி வாங்குகிறதே!'' என்று தந்தையின் நெஞ்சை நீவி விட்டபடி, வாயிலைப் பார்த்தான்.

டீயுடன் அந்தச் சிறுவன் வந்து கொண்டிருந்தான்.

''டீயை வைத்துவிட்டு, இங்கே பக்கத்திலே டாக்டர் யாராவது இருந்தால், உடனே கூட்டி வா! சீக்கிரமாக வந்தால் நிறையப் பணம் தருகிறேன், ஜல்தி!'' என்று ஹிந்தியில் கூறினான்.

ஆனால் ''வேண்டாம்'' என்று அவனைத் தடுத்து நிறுத்தினார் தந்தை.

படுக்கையின் ஒரு பக்கமாக டீயை அவன் வைத்ததும் செல்லும்படி சைகை செய்து, அவனை அனுப்பிவிட்டு, ஒரு டீக்கப்பை எடுத்துக் கொண்டு, மகனைப் பார்த்தார்.

அவனது சுளித்த புருவம் மாறாதது கண்டு, மிக மெல்லிய குரலில், மெதுவாகப் பேசினார். ''நம்பு தனம். மருத்துவர் வந்து செய்யக் கூடியது, இனி ஒன்றும் இல்லை. வலி, வேதனைகளைக் குறைப்பதற்கு மாத்திரைகள் இருக்கின்றன, அவ்வளவுதான், அவர்களால் ஆனது! வாழும் காலம், இனி விரல் விட்டு எண்ணி விடக்கூடிய நாட்களே என்ற அறிந்ததும்தான், உனக்கு

எழுதினேன்... குடிம்மா, ப்ளீஸ்!'' என்று ஆறிக் கொண்டிருந்த டீயைக் காட்டினார்.

மறுக்காமல் அவன் டீயை எடுத்துக் கொள்ளவும், ஒரு பெருமூச்சுடன், தானும் டீயை இரண்டு வாய் அருந்தினார்.

அது தந்த பலத்தில் ''என்... என் பாவம், உ... உன் னையும் பீடித்து விடக்கூடாது. அதற்கு எப்படியாவது பரிகாரம் செய்...ய முடிந்தால்...'' என்றவரின் குரல் தேய்ந்தது.

பெற்றவரின் கை சோர்வதைக் கண்டதும், அவரது கையில், இருந்த கப்பை வாங்கித் தன்னதையும் சேர்த்துக் கீழே வைத்தான், மகன்.

நிமிர்ந்தால், தந்தையின் அரைக் கண் மூடியிருந்த நிலை, அவனைப் பதற வைத்தது.

தலையணையை எடுத்து, பின்னே கொடுத்து, சாய்ந்தாற்போல அமர வைத்தான். ''எவ்வளவு குறுகியது என்றாலும், இருக்கிற காலத்தைச் சற்று வசதியாகக் கழிக்கலாம். இப்போது நீங்கள் என்னோடு வரப் போகிறீர்கள். முதலில் உங்கள் டாக்டரை...'' என்றவனின் பேச்சு காதிலேயே விழாதவரைப் போல, அவன் எடுத்த தலையணையின் அடியில் இருந்த சற்றுப் பெரிய, தடிமனான கவரைக் காட்டினார் ''முதலில், அதைப் பிரித்து... படித்துப் பா...ர்'' என்றார்.

அவன் கையை நீட்டிக் கவரை எடுத்துப் பிரித்தான்.

''எ... எல்...ல்லாம் எழுதியிருக்கிறேன். ஏ... ஏதாவது செய். நீயாவது தப்ப வேண்டும்... கடவுள் உன்னை... காப்பாற்ற...''

வேகமாகப் படித்து முடித்துவிட்டு, அருவருப்புடன் பார்த்தால், மகனின் முகச் சுளிப்பைப் பாராமலே நல்ல வேளையாகத் தில்லைநாதன் போய்ச் சேர்ந்து விட்டிருந்தார்.

# 2

அடிமேல் அடி வைத்து, சத்தமின்றி மாடிப்படியை அடைந்த சிவநந்தன், மெதுவாகத் தலையை நீட்டிக் கீழே எட்டிப் பார்த்தான்.

அங்கே கண்ட காட்சியில், உடனே தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு, நாலடி பின்னே நகர்ந்தான்.

அங்கே காத்திருந்த தமக்கையிடம், உதட்டைப் பிதுக்கிக் கட்டை விரலை தரையை நோக்கிக் காட்டினான் ''சர்வாதிகாரி ஹாலுக்கு எழுந்தருளி, சிம்மாசனத்தில் சட்டமாய் உட்கார்ந்தும் ஆயிற்று!'' என்றான் எரிச்சலோடு.

''உட்காருகிற இடத்தைப் பாரேன். அவர்கள் பார்வைக்குத் தப்பி, வீட்டுக்கு வெளியே போக முடியாது, வெளியிலிருந்து உள்ளே வரவும் முடியாது. ராணி தர்பார் குறுக்கு விசாரணை செய்த பிறகுதானே, அடுத்த அடி எடுத்து வைத்து உள்ளே வர முடியும்?'' என்றாள் நிரஞ்சனி, அவனை மிஞ்சிய சலிப்புடன்.

''மக்கு மக்கு! யாரேனும் உள்ளே வருவதைப் பற்றி, நமக்கு என்ன வந்தது? இப்போது நாம் வெளியே

போவதல்லவா, பிரச்சினை! லொட்டு லொசுக்கு நொட்டு நொசுக்கு என்று கேள்விக்குள் கேள்வியாக எத்தனை வருமோ? ஒரு பத்து நிமிஷம் சீக்கிரமாகக் கிளம்பி இருக்கக் கூடாது?''

''ஆமாம், என்னைச் சொல்லு. மீசையை 'ட்ரிம்' பண்ணப் போவதாக அரை மணி நேரம் வீணாக்கியது, யாராம்? அப்புறமும் கண்ணாடியைப் பார்த்துப் பார்த்து...''

முகத்தில் அசடு வழிய, ''என்னக்கா செய்வது? இரண்டு பக்க மீசையும் ஒரே மாதிரி இருக்க வேண் டாமா? இல்லாவிட்டால், நண்பர்கள் கிண்டலடித்துத் தீர்த்து விடுவார்களே! ஆணாகப் பிறந்திருந்தால் அல் லவா, அந்தக் கஷ்டம் தெரியும்? உனக்கென்ன ஜாலி. குளித்து முடித்து, ஒரு சுடி அல்லது சல்வார் செட்டை எடுத்து மாட்டிக் கொண்டால் தீர்ந்தது. தலையைக் கூட... எல்லா முடியையும் பின்னே இழுத்து, ஒரு பாண்டைப் போட்டால், வேலை முடிந்தது. எனக்குப் பார்! தலையை வாரவும் வேண்டும்... வாராதது போல இருக்கவும் வேண்டும். ஆண் பிள்ளையாக இருப்பது, எவ்வளவு கொடுமை தெரியுமா?'' என்று புலம்பினான் தம்பி.

தன்னை மீறிப் பீறிட்ட சிரிப்பைக் கைகளால் வாயைப் பொத்தி, நிரஞ்சனி அடக்கினாள். இப்போது சிரிப்புச் சத்தம் கீழே கேட்டால் எல்லாம் பாழாகிப் போகும்.

சிரிப்புணர்ச்சி ஓரளவு கட்டுக்குள் வரவும், ''என்ன நந்து, வழக்கம் போலத்தானே?'' என்று உடன் பிறந் தானை வினவினாள்.

''வேறே வழி?'' என்று தோளைக் குலுக்கினான் அவன்.

இருவருமாக ஒரு பெரிய மூச்சை எடுத்துவிட்டுக் கீழே செல்லக் கிளம்பினர்.

மாடிப்படி இறங்கும்போதே, அக்கா தம்பி இருவரின் குரல்களும் உரக்கக் கேட்க, அவர்களுடைய பாட்டி தையல்நாயகி, பார்வையை உயர்த்திப் பேரப் பிள்ளை களைப் பார்த்தாள்.

கார்ச் சாவி பேத்தி நிரஞ்சனாவின் கையில் இருந்தது. ''ஊகூம். அதெல்லாம் சாவிய நான் தரமாட்டேன். எனக் கும்தான் கார் ஓட்டத் தெரியும். என் தோழி வீட்டுக்கு, இன்று கட்டாயம் வருவதாக சொல்லியிருக்கிறேன். அதனால், எனக்குத்தான் கார்!'' என்றாள் அவள் பிடி வாதக் குரலில்.

''முடியாது என்றால், முடியாதுடீ! காரில் வருவதாக, கருண்கிட்டே நான் நேற்றே சொல்லிவிட்டேன். இப் போது ஆட்டோவில், பைக்கில் போனால் எனக்குக் கேவலம். எல்லோரும் சேர்ந்து லைப்ரரிக்குப் போக வேண்டும். சாவியைக் கொடு'' என்றான் சிவநந்தன் அதட்டலாக.

''முடியாது. முடியாது... முடியாது, போடா...'' என்று நிரஞ்சனி மறுத்துக் கொண்டிருக்கும்போதே, ''சூ கத்தாதே!'' என்று அதட்டினாள் பாட்டியம்மாள். ''பெண் பிள்ளையாய், லட்சணமாய் அடக்க ஒடுக்கமாக இரா மல், என்னடீ, காட்டுக் கத்தல்? அதுவும், ஓர் ஆண் பிள்ளையோடு மல்லுக் கட்டிக் கொண்டு! பார்க்கிற வர்கள் என்ன எண்ணுவார்கள்?

இந்தத் தையல்நாயகி வளர்த்த பெண் தறுதலை என் பார்களே தவிர, உன் புத்தி, தானாகப் போகிற போக்கு என்றா சொல்லுவார்கள்?''

இருவரும் வாய் மூடி நிற்கவும், ''சொல்லு இப்போது என்ன பிரச்சினை? இருப்பது, இரண்டே இரண்டு. இருபது பேரை ஒன்றாக அடைத்த மாதிரி, எப்போதும், சண்டை! அப்போதே கேட்டேனில்லையா? சொல்லு என்ன சண்டை?'' என்று அதட்டிக் கேட்டாள்.

தரையைப் பார்த்தபடி ''பெரியவர்கள் பேசும்போது குறுக்கே பேசக்கூடாது என்று, சும்மா இருந்தேன், பாட்டி என் தோழி வீட்டில் திருமணம். பெண்ணுக்குச் சேலை வாங்குவதற்குக் கூட வரச் சொன்னாள். நானும் சரி யென்று சொல்லிவிட்டேன்'' என்று பணிவான குரலில், பதவிசாகச் சொன்னாள் பேத்தி.

''ம்ம்ம்'' என்று அவளை ஏற இறங்கப் பார்த்தாள், தையல்நாயகி ''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. இந்தக் கேமிரா எதற்காக? நிஜத்தைச் சொல்லு. உன் தோழிக்கு அண்ணன் இருக்கிறான் தானே? அவனை ரகசியமாக போட்டோ எடுத்து, பார்த்து ரசிக்கத்தானே, இப்படி வேக வேகமாகப் பார்க்கிறாய்?'' என்று அவள் கேட்கவும், அக்கா, தம்பி இருவர் முகங்களும் கன்றிச் சிவந்து போயின.

''எவன் படத்தையோ, நான் ஏன் பாட்டீ, எடுக்க வேண்டும்? என்மேல் அவ்வளவு சந்தேகம் என்றால் நான் போகவில்லை?'' என்றாள் நிரஞ்சனி எரிச்சலை மறையாத குரலில் ''இந்தாருங்கள் கார்ச்சாவி'' என்று அருகில் இருந்த முக்காலியில் சாவியை 'ணங்'கென்று வைத்தாள்.

''என் சினேகிதி, அவ்வளவு ஆசையாகக் கேட்டாள், நீ எடுக்கிற போட்டோக்கள் நன்றாக இருக்கிறதுப்பா, என் அக்கா திருமணத்தின் ஒவ்வொரு நிகழ்வையும் பதிவு செய்கிற மாதிரி, படம் எடுத்துக் கொடு என்றாள். துணிக் கடையில் கூட அனுமதி வாங்கி விட்டார்களாம். இப் போது போய் வரவில்லை என்று சொன்னால், இனி என் வார்த்தையை யார் நம்புவார்கள்?

'தையல்நாயகிப் பாட்டியுடைய பேத்தி, பொய் சொல்லி, புளுகுணி என்று எல்லோரும் சொல்லட்டும். எனக் கென்ன வந்தது?' என்று உரக்க முணுமுணுத்தபடியே, ஒரு சோபாவில் தொப்பென்று உட்கார்ந்து கொண்டாள், அவள்.

அவளை யோசனையாகப் பார்த்துவிட்டுத் தையல் நாயகி பேரனின் பக்கம் திரும்பினால், கார்ச்சாவியை அதற்குள் கைப்பற்றியிருந்தான் அவன்.

''அவ்வளவு அவசரமா? ஏன்டா, சினேகிதன் வீட்டுக் குப் போவதாகச் சொல்லுகிறாயே, அவனால் ஏதாவது பணம் காசு பயன் உண்டா? இல்லையானால் பெட்ரோலுக் குச் செலவு பண்ணுவது, வீண் போகாதே'' என்றாள் பேரனிடம்.

''கன்னிமாரா 'லைப்ரரியில் ரெஃபரன்ஸ்' புத்தகங்கள் எடுத்துப் படிக்கப் போகிறோம், பாட்டி. அந்தப் படிப்பு, பின்னாடி எத்தனை லட்சங்களைக் கொண்டு வரும், தெரியுமா? அதாவது, லட்சக் கணக்கில் லாபம். நீங்கள் என்னடா என்றால்...''

கண்களை இடுக்கிப் பார்த்துவிட்டு, ''முதலில் ஒரு விஷயம் சொல்லு, உன் நண்பர்கள் கூட்டத்தில் ஏதாவது

பொட்டைக் குட்டிகள் இருக்கிறார்களா? நிஜத்தை மட்டுமாகப் பேச வேண்டும். சொல்லு'' என்றாள் பாட்டியம்மாள், பேரனிடம்.

''பாட்டீ! என்று ஆத்திரத்துடன் முறைத்தவன், கார்ச் சாவியை அவளிடமே நீட்டினான். ''இந்தாருங்கள் பாட்டி. சாவியைப் பிடியுங்கள். நான் எங்கேயும் போகவில்லை. நான் பெரிய்ய கோபாலகிருஷ்ணன், ஜலக் கிரீடை செய்வதற்கு, பத்துப் பதினைந்து இளம் பெண்களோடு நீச்சல் குளம் தேடிப் போய்க் கொண்டு இருப்பதைக் கண்டு பிடித்து நிறுத்தி விட்டீர்கள்!'' என்றவன் தமக்கையைப் பார்த்து, அவளைக் காய்ந்தான்.

''எல்லாம் உன்னால் வந்தது! உனக்குத்தான், ஒரு நாளும் கார் கிடைக்காதே! அப்புறமென்ன, கார்ச் சாவியைத் தூக்கிக் கொண்டு, தையா, தக்கா என்று ஓடி வருவது? இப்போது என் வேலையும் கெட்டது. அங்கே என் நண்பர்கள், நான் வருவேன் வருவேன் என்று... இனி என் வார்த்தையையும்தான், யார் நம்புவார்கள்? குடும்பமே வாக்கு சுத்தம் இல்லாதது என்று... சாவியைப் பிடியுங்கள், பாட்டீ. கீழே வைத்தால், அந்தக் குரங்கு தூக்கிக் கொண்டு போய்விடும். என்னால் படிக்கத்தான் போக முடியவில்லை, படுத்துத் தூங்கவாவது செய்கிறேனே!'' என்றான் வெறுப்பும் விறைப்புமாக.

ஆளுக்கொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்ற பேரனையும் பேத்தியையும், பார்த்த தையல் நாயகி, சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள்.

''கொஞ்சம் பொறுடா, கொதிக்கிற எண்ணெயைக் காலில் கொட்டிக்கொண்ட மாதிரிக் குதிக்காதே! இப்படி அவசரப்பட்டால், நாளைக்கு, உன் அப்பா மாதிரி,

தொழில் பொறுப்பை ஏற்று, எப்படி நடத்துவாய்?'' என்று பேரனை அதடடினாள்.

அப்பா மாதிரிதானே 'சரிம்மா சரிம்மா' என்று தலையை ஆட்டியே கழுத்துச் சுளுக்குப் பிடித்துப் போனவர், அப்பா. அவரைப் போல நானும் தலையை உருட்டி உருட்டி ஆட்டுவேனாக்கும்? நினைத்துக் கொண்டிருங்கள் என்று உள்ளே பொறுமினாலும், அதை வெளிக்காட்டாமல் ''இப்போது என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்?'' என்று மிகுந்த அலுப்புக் காட்டிக் கேட்டான் பேரன்.

''ம்ம்ம், ஒன்று செய். இவளும் வாக்கு கொடுத்து விட்டேன் என்கிறாள். நீயும் வருவதாகச் சொல்லியிருக் கிறாய். நம் குடும்பம் சொன்ன சொல் தவறுவதாக யாரும் நினைக்கக்கூடாது. நீ உன் நண்பர்களோடு, இவளையும் கூட்டிப் போ. இவளைக் கொண்டு போய் அந்த சினேகிதி வீட்டில் விட்டுவிட்டு, அது நிஜமாகவே நாம் பழகக் கூடிய இடம்தானா என்று பார்த்துவிட்டு, உன் பசங்களோடு லைப்ரரிக்குப் போய்விட்டு, வா. போங்கள், இரண்டு பேரும் ஒன்றாகக் கிளம்புங்கள்'' என்று இருவருக்கும் அனுமதி கொடுத்தாள்.

இருவரும் வாயிலருகே சென்றதும் ''கொஞ்சம் வந்து விட்டுப் போ, நிரஞ்சனா. நீ எப்போது, எப்படித் திரும்பி வருவாய் என்று சொல்லி விட்டுப் போ'' என்று பேத்தியை நிறுத்தி, சின்னவன் போய்விட்டானா என்று சைகையால் கேட்டாள்.

நிரஞ்சனா தலையசைக்கவும், ''இதோ பார், உன்னை அவன்கூடச் சும்மா அனுப்பவில்லை. அவன் கூட்டத் தில் பெண் பிள்ளை எவளாவது அரை குறை உடுப்பில்,

அலுக்கி மினுக்கிக் கொண்டு இருக்கிறாளா என்று பார்த்துவிட்டு வந்து என்னிடம் சொல்ல வேண்டும். அத்தோடு நீ வீடு திரும்ப, உன் சினேகிதி ஏற்பாடு செய்வாள்தானே? அவளுக்காக ஒன்று செய்யும்போது, போக வர இரண்டுமே அவள் பொறுப்பாக இருக்க வேண் டும். அவளாகச் செய்யாவிட்டால், நீ செய்ய வை'' என்று கூறி அனுப்பினாள்.

பேசாமல் தலையை ஆட்டிவிட்டு, வெளியே ஓடிப் போய்க் காரில் ஏறினால், இஞ்சினை ஸ்டார்ட் கூடப் பண்ணாமல் சிவநந்தன் சும்மா உட்கார்ந்திருந்தான்.

சும்மா என்றால் அடியோடு சும்மா அல்ல. அவனுக்கு முன்னே இருந்த பிரேக்கையும், ஆக்சிலேட்டரையும் மாறி மாறி ஆத்திரத்துடன் மிதித்துக் கொண்டிருந்தான்.

யார் மீது ஆத்திரம் என்பது, கேட்டுத் தெரிய வேண் டியது அல்ல.

முழுதாக ஒரு நிமிஷம் பேசாமல் பார்த்துக் கொண் டிருந்து விட்டு, ''பாட்டி எப்போதுமே இப்படித்தானே, நந்து? விட்டுத் தள்ளு'' என்றாள் தமக்கை, மெது வாக.

''விட்டுத் தள்ளுவதா? எப்படி முடியும்? அது என்ன நாக்கா, தேள் கொடுக்கா? பக்கத்தில் வந்த அத்தனை பேரையும் கொத்திப் பிடுங்குகிறது? அன்றைக்கு இப் படித்தான், நம் வீடு பெருக்குகிற வசந்தியைப் பிடித்து, சின்ன எஜமானை மயக்கி மடியில் போட்டுக் கொள்ள லாம் என்று, அவன் அறையை இப்படித் துடைக்கிறாயா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கென்ன, பத்துப் பதினோரு வயதிருக்குமா? வசதியில்லாத கொடுமை,

தாயுடன் வந்து கூடமாட வேலை பார்க்கிறது. அம்மா விடம் வந்து, சொல்லி பாக்கியம் அழுகிறாள். பெரிய வர்கள் பேச்சுத் தெரியாதா? அதைப் பெரிதாக நினையாதே என்று அம்மா பாக்கியத்தைச் சமாதானம் செய்கிறார்கள். பாட்டி யாரை விட்டார்கள்?

சே! சினேகிதி அண்ணனைப் படம் எடுக்க, காமிரா கொண்டு போகிறாயாம்! நான் அரை குறை ஆடையில் அலுக்கி மினுக்கிறவளைப் பார்க்கப் போகிறேனாம். உனக்கு உளவு நான். எனக்கு உளவு நீயாக்கும்!

கூடப் பிறந்தவர்கள், சொந்த பேரன் பேத்திக்குள் ளேயே கலகமூட்டுவதா? என்ன மட்டமான புத்தி... அப்படி விழிக்காதே, பாட்டி உன்னைத் தடுத்து நிறுத் தியதுமே, எனக்குப் புரிந்து விட்டது. என்ன என்று பார்க் கத்தான். பக்க வாட்டில் ஒதுங்கி நின்று ஒட்டுக் கேட் டேன்... என்ன? பாட்டி அப்படித்தான் என்று அம்மா மாதிரி நீயும் இன்னொரு தரம் சொல்லப் போகிறாயா?'' என்று ஆத்திரத்துடன் வினவினான், சின்னவன்.

''அப்படி இல்லையடா ஒட்டுக் கேட்கிறவர்கள் நல் லதைக் கேட்பதில்லை என்று சொல்வார்களே, அது மெய்தான் போல என்று சொல்லப் போனேன்!'' என்று சாதுவாகக் கூறினாள் பெரியவள்.

மனமற்று முறுவலித்தான் தம்பி. ''உனக்கு மட்டும் கோபமே வரவில்லையா, நீரு? இத்தனைக்கும், என்னை யாவது போகச் சொல்லிவிட்டு கண் மறைவான பிறகு, என்னை உளவு பார்க்கும்படி, உன்னிடம் சொன்னார்கள். உன் காது கேட்க, உன் முன்னாலேயே உன் நண்பர்கள் சரிதானா என்று பார்க்கும்படி என்னிடம் சொன்னார்களே,

மெய்யாகவே உனக்குப் பாட்டியைப் பிடித்து ஓங்கி ஒன்று கொடுக்கலாம் போல வரவில்லை? அந்த அளவுக்கு, நீ உணர்ச்சியில்லாத ஜடம் இல்லை என்று எனக்கும் தெரியும். சும்மா நிஜத்தைச் சொல்லு'' என்றபடி காரை எடுத்தான், இளையவன்,

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, ஒரு பெருமூச்சுடன் நிரஞ்சனா, தம்பிக்குப் பதில் சொன்னாள்: ''கோபம் வராமல் இருக்குமாடா? அதிலும், எவனாவது அண் ணனைப் படம் எடுத்து, அதைப் பார்த்து ரகசியத்தில் ரசிக்க என்றார்களே! நான் என்ன, அவ்வளவு கேவல மானவளா? எனக்கு எப்படி இருந்திருக்கும்... நியாயத் துக்கு, அந்த வார்த்தைக்கு நான் பேயாட்டம் ஆடியிருக்க வேண்டும்.''

''கட்டாயம் ஆடியிருக்க வேண்டும்!''

''என்ன பயன்? அதைவிட, எரிச்சல் மாதிரிக் காட்டி, வெளியே கிளம்புவதை உறுதிப் படுத்திக் கொள்வது தான், எனக்கு முக்கியமாகத் தோன்றியது. இப்போது அது நடந்து விட்டதுதானே?'' என்று தன் செயலை நியா யப்படுத்தினாள் நிரஞ்சனா.

சின்னவன் மனம் சமாதானமடைய மறுத்தது. ''ஆனா லும், இதை இப்படியே விட முடியாது. நிரஞ்ச், நான் அப்பாவிடம் பேசப் போகிறேன்'' என்றான் பெரிய மனிதன் போல.

சிறு கசப்புடன் சிரித்தாள் மூத்தவள், ''ஏற்கனவே நான் அதைச் செய்யவில்லை என்று நினைத்தாயா, நந்து?''

''வாட்?!'' என்றவனின் கைகளில் காற்று சற்று ஆடி, நேராயிற்று, ''இவ்வளவு மோசமாகப் பேசுவதை? நாசூக் குப் பாராமல் அப்படியே சொன்னாயா?''

''ம். கிட்டத்தட்ட அப்படியே சொன்னேன். ஆனால் இதற்காகப் பாட்டியை எதிர்த்து நிற்பது, முடியாது என்று அப்பாவேதான் சொன்னார். ஆனால் அவரைச் சொல்லியும் குற்றமில்லை... இப்போதுதான் நீ வீட்டில் நடப்பதை நிறையக் கவனிக்கிறாயே, அப்பா நிறைய ஃபைல்களை வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாக விளக்கம் கூறி, பாட்டியிடமும் கையெழுத்து வாங்குவதைப் பார்த்திருப்பாயே! தொழிலில் எல்லா அதிகாரமும், இன்னமும் பாட்டிக்குத்தான். தாத்தா சின்ன வயதில் இறந்தபோது, பாட்டியே துணிந்து பொறுப்பேற்று, வெற்றிகரமாகவே நடத்தினார்களாம். பெயர் தான் எம்டியே தவிர, இன்றைக்கும் தொழிலில் அப்பா, பாட்டியின் ஒரு கௌரவமான பணியாள்தான். முதலாளியான பாட்டியை எதிர்த்து நிற்க, அவருக்குத் தைரியம் எப்படி வரும்?'' என்று கேள்வியில் முடித்தாள் நிரஞ்சனி.

''அப்பாவே அப்படி எனும்போது, அம்மாவிடமும் எதையும் எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆனால், உன்னுடன் சண்டை போடாமல் உனக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னதே, அம்மாதான். எப்படியும், அம்மாவுக்கு உன்னிடம் ரொம்பப் பிரியம் நீரு.''

''நிச்சயமாய்!'' என்று மனதார ஒப்பிய நிரஞ்சனி அது பற்றி மேலே பேசினாள். ''உனக்கும் எனக்கும் சித்தி வேறுபாடே காட்டியதில்லையே. உனக்குத் தெரியுமா? சித்தி என்று அவர்களைக் கூப்பிட வைத்ததே, பாட்டி தான்.

முதலில் இருந்தே அதுபோல என்னை பழக்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு நினைவு

இருப்பது சின்ன வகுப்பில்... மூன்றாம் வகுப்பில் என்று நினைக்கிறேன். குடும்பம் பற்றிய பாடத்தில் அம்மா வின் தன்மை பற்றிக் கற்றுக் கொடுத்தார்கள். அவை எல்லாமே, சித்தி எனக்கு செய்வதுதான். அதனால் வீட்டுக்கு வந்து, சித்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அம்மா என்று அழைக்கப் போவதாகச் சொன்னேனா? பக்கத்தில் இருந்த பாட்டிக்கு ஆவேசமே வந்து விட்டது.

என்ன திமிர் உனக்கு? அவள் என்ன, உன்னைப் பெற்றவளா? உருப்படியாக ஒருத்தி இருப்பது பிடிக்க வில்லையா... இப்படிப் புரியாமல் நிறையச் சொல்லித் திட்டினார்கள். அப்போது ரொம்ப அழுகை வந்தது.

சித்தி என்ன அழைத்துப் போய்ச் சமாதானம் செய்து, தனியாக இருக்கும்போது, அம்மா என்று கூப்பிட்டுக் கொள், பாட்டி காது கேட்க வேண்டாம் என்றார்கள். பாட்டி திட்டிய திட்டில், எனக்கு அதற்குக் கூடத் தைரியம் வந்ததே கிடையாது. பிறகு... ரொம்ப வளர்ந்த பிறகு யோசிக்கும்போதுதான், பாட்டிக்கு என்னைப் பெற்ற அம்மா மேல் பயங்கர வெறுப்பு இருந்திருக்க வேண்டும். அதை இப்படிக் காட்டுகிறார்கள் என்று புரிந்தது.

நான் வேறு அம்மா ஜாடையாம். அப்புறம் கேட்க வேண்டுமா? இதையெல்லாம் யோசித்துத் தெரிந்து கொண்டதால், பாட்டியின் பேச்சு, முன் போல எனக்கு வலிப்பதில்லை. பாட்டிக்குச் சரியாக, அப்பாவின் போக் கும் பழகிவிட்டதுடா. ஆனால், என் விஷயம் எப்போதும் உள்ளது. போகிறது என்று பார்த்தால், இப்போது திடீ ரென்று உன்னிடமும் பார்க்கிறார்களே, அதுதான் எனக்

குக் காரணம் புரியவில்லை?'' என்று வருத்தத்துடன் முடித்தாள் அவள்.

''புரிவதற்கு என்ன இருக்கிறது? வக்கிரம். முழு வக்கிரம். இல்லா விட்டால், ஒரு வேலைக்காரி மகளிடம், அதுவும் சின்னப் பெண்ணிடம் போய், இப்படிப் பேசு வார்களா? அல்லது, ஐம்பது வயது ஆகப் போகிற மக னைத்தான், எந்த உரிமையும் இல்லாத ரப்பர் ஸ்டாம்ப் பாகவே இன்னமும் வைத்திருப்பார்களா?

இந்த அழகில், அப்பா மாதிரி நானும் தொழிலைப் பார்க்கத் தயாராக வேண்டுமாம்! அப்பா போல அவர்கள் காலடியில் விழுந்து கிடக்க, எனக்கென்ன பைத்தியமா? அதெல்லாம் ஒரு போதும் நடக்காது'' என்றபடி, இந்திரா நகருக்குள் காரைத் திருப்பினான் சிவநந்தன்.

''பத்தாவது குறுக்குத் தெருவில்தானே, உன் தோழி யின் வீடு?'' என்று கேட்டான்.

''ஆமாம். ஆனால் உன் சினேகிதர்களை முதலில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று பாட்டி சொன்னார் களே...''

''ம். அவர்கள் ஆயிரம் சொல்வார்கள். அதையெல் லாம் செய்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?'' என்றான் சின்னவன் அலட்சியமாக.

''ஐயோ, என்னடா நீ? வீட்டுக்குப் போனதும் பாட்டி, என்னிடம் கேள்வி கேட்பார்களே! நான் என்ன பதில் சொல்லட்டும்?'' என்று சிறு பதற்றத்துடன் கேட்டாள் தமக்கை.

''மூன்று கட்டைத் தடியன்கள்தான் போகிறார்கள். பெண்ணே கிடையாது என்று சொல்லிவிடு. மற்றபடி,

எங்கள் செட்டில் படிக்க வரும் பெண்களை எல்லாம், பாட்டி கேவலப்படுத்துவதற்கு நான் இடம் கொடுப்பதாக இல்லை'' என்றான் தம்பி சீற்றத்துடன்.

திரும்பி, இளையவனின் முகத்தை ஆழப் பார்த்தாள் அவள் ''நந்து, நீ ஒன்றும் யாரையும்... பாட்டி குதறி விடுவார்கள்டா!'' என்றாள் கவலையுடன்.

''அட போக்கா! எனக்கு இன்னும் படிப்பே முடிய வில்லை. அதற்குள் என்ன அவசரம்? அத்தோடு பாட்டி இருக்கிற குடும்பத்தில் காதல், நேசம் என்ற வார்த்தை களுக்கே இடமே கிடையாது என்று எனக்குத் தெரி யாதா? கூடப் பிறந்தவர்கள் சிரித்துப் பேசினாலே பிடிக் காத பிறவி! ஏதோ நாம் வாங்கி வந்த வரம் அப்படி.

அது போகட்டும்! திரும்பி வீடு செல்ல, வாகனத் துக்குப் பிரச்சினை ஏற்பட்டால் என்னைக் கூப்பிடு. நானே வந்து அழைத்துப் போகிறேன்'' என்றான் சற்றுக் கனிவாக.

பாட்டியின் காரணமற்ற கடுமைக்கு நேர்மாறாகத் தம்பியின் இந்தக் கனிவு, தமக்கையின் மனதைக் குளிர வைத்தது. அதிலும் இப்போதெல்லாம் பாட்டி அவன் மீதும் பாய்வதாலோ என்னவோ, ரொம்பவே பிரியமாக இருக்கிறான்.

''தாங்க்ஸ்டா!'' என்றபடி நிரஞ்சனி இறங்கவும், ''உள்ளே நீயே போய்க் கொள்ளுவாயில்லையா? நான் இப்போதே லேட்...'' என்றபடி காரைத் திருப்பியவன், கையாட்டிவிட்டுச் சென்று விட்டான்.

அதுவும் நல்லதுதான். இன்றைய நிலையில், தனஞ் சயனைப் பற்றி, பிரியமான தம்பி சிவநந்தன் கூட

அறியாதிருப்பதே நல்லது. அறிந்திருந்தால், இருவர் நிம்மதியும் கெட்டுவிடும்!

தனஞ்சயன் பற்றி எவ்வளவு தாமதமாக முடியுமோ, அவ்வளவு தாமதமாகவே அவளுடைய குடும்பம் அறிந்து கொள்ளட்டும்!

அவனும்... என்று எண்ணமிடும்போதே, நிரஞ்சனியின் முகம் லேசாக வாடியது.

அவளே அதிகம் நினைக்காதிருக்க விரும்புகிற விஷயம், அவளுடைய குடும்பம் இந்தத் தனா ஏன், அவ்வப்போது அதைப் பற்றி பேசுகிறான்?

அதிலும் குடும்பமே மறந்து விட்ட, அவளைப் பெற்ற தாயைப் பற்றி, அவ்வப்போது ஏன் கேட்கிறான்? அதனால் துன்பமே தவிர வேறு என்ன கிடைக்கப் போகிறது?

# 3

பெற்ற தாயையும் குடும்பத்தையும் பற்றிய நினைவில் நிரஞ்சனி கலங்கி நின்றது. அரை நிமிஷத்துக்கும் குறைவாகவே இருக்கலாம்.

அதற்குள் திறந்திருந்த வாயில் கதவு வழியே, அவளது எண்ணத்தின் நாயகனே வெளியே வரவும். அவளுக்கு மற்றது மறந்து, முகம் மலர்ந்தது.

அவனும் வரிசைப் பற்களைக் காட்டி முறுவலித்த வண்ணமே படியிறங்கி வந்து, ''ஏதோ கார் நின்று

கிளம்புகிற சத்தம் கேட்டதே. நீயாக இருக்குமோ என்று பார்க்க வந்தேன். கரெக்டாக நீயே நிற்கிறாய், பார்! வா, வா! உள்ளே வராமல் அங்கே நின்று என்ன யோசனை?'' என்று உற்சாகத்துடன் வரவேற்றவாறே, ''கொடு'' என்று நிரஞ்சனியின் கேமிராப் பையை வாங்கக் கையை நீட்டினான்.

சிறு தயக்கத்துடன் கதவுப் பக்கம் பார்த்துவிட்டு ''நீங்கள் எங்கே, இங்கே?'' என்று மெல்ல வினவினாள் நிரஞ்சனி.

பையை வாங்கிக் கொண்டு, இன்னொரு புன்னகை செய்தான் தனஞ்சயன். ''மனமிருந்தால் முடியாதது என்ன இருக்கிறது? நான் தனஞ்சயன். அதாவது அர்ஜுனன் அல்லவா?'' இங்கு வரப் போவது, தெரியும். மணமகன். என் ஒன்றுவிட்ட கஸின். விசேஷங்களில் சேர்ந்து பழகு வதுதான். பிறகென்ன? உறவை இன்னமும் மேம்படுத்திக் கொண்டு, ஜவுளிக்கடையில், அவன் குடும்பம் அதிகம் காத்திருக்க நேராமல், பெண் வீட்டாரைச் சீக்கிரமாகக் கிளப்பிக் கொண்டு வருவதாகச் சொல்லி, இங்கே வந்து விட்டேன். மதுமதியையும் ஓரிரு விழாக்களில் பார்த் திருக்கிறோம்தானே? கண்ணை விரித்தாலும், கேள்வி கேட்டு, காட்டிக் கொடுக்கவில்லை.

இப்போதுகூட, அக்காவைச் சீக்கிரமாகக் கிளப்பும்மா, மாப்பிள்ளை வீட்டார் முதலிலேயே கடைக்கு வந்து காத்திருந்த அலுப்பை போட்டோவில் காட்டிவிடப் போகிறார்கள் என்று, அவளை அனுப்பி விட்டுத்தான், நான் மட்டுமாக வெளியே வந்தேன்'' என்று கலகல பேச்சில் விவரம் சொன்னான் அவன்.

நிரஞ்சனியோடு கூடப் படித்தவள், மதுமதி. பொது வான நட்பு வட்டத்தில் அவளும் உண்டு. அவ்வப்போது சந்திப்பதும் நடப்பதுதான். ஃபேஸ்புக் தோழமை வேறு இருக்கிறது.

மதுமதியுடைய அக்கா மாதுரிக்குத்தான் இப்போது திருமணம்.

நிரஞ்சனியின் ஃபேஸ்புக் படங்களைப் பார்த்துவிட்டு, மணப்பெண்ணே விரும்பிச் செய்திருக்கும் ஏற்பாடு. அவளது திருமண நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்காகத் தான், நிரஞ்சனி இங்கே வந்திருப்பதே.

எந்தெந்த நிகழ்வுகளை, எத்தனை படங்களில் பதிவு செய்வது என்பதெல்லாம் பேசி, போக்குவரத்துச் செலவு தனியே தந்து, மேற்கொண்டு நல்ல தொகையும் பேசி, பாதிப் பணத்தை முன்பணமாகவே மணப்பெண் ணுடைய பெற்றோர் கொடுத்திருந்தனர்.

மணப்பெண்ணுடைய சகோதரியாக, மதுமதியின் பங்களிப்பு பற்றியும் திட்டம் போடப்பட்டிருந்தது.

அதைவிட்டு, தனஞ்சயன், நிரஞ்சனா விஷயத்தில் அவள் கருத்தைச் செலுத்திக் கிளற மாட்டாள். கேமி ராவைச் சுமப்பது, உட்கார இருக்கை பார்த்துக் கொடுப் பது, உண்ண, அருந்த ஏதாவது ஏற்பாடு செய்வது என்று, பெரும்பாலும் நிரஞ்சனாவின் அருகிலேயே தனஞ்சயன் இருந்தாலும், அதற்கு மேல் ஊகத்துக்கு இடம் கொடுக்கும் விதமாக அவன் நடந்ததில்லை.

அதாவது அவள் மட்டுமே அறியும்படியான சில பார் வைகள், சீண்டல் வார்த்தைகள் தவிர.

ஆனால் இந்தத் தனஞ்சயனுக்காகவே திருமண நிகழ்வுகள் அத்தனையையும் தனிப்பட்ட விதமாகப்

படம் எடுக்கும் இந்த முயற்சி மிகவும் வெற்றிகரமாக நடந்தேற வேண்டும் என்கிற வேகம் அவளுக்கு இருந்தது.

இதிலேயே நல்ல லாபம் இருந்ததும் ஒரு காரணம் தான்.

இதைத் தொடர்ந்து, திருமண போட்டோ, வீடியோ, மொத்தத் திருமணப் பதிவு என்று எல்லாவற்றையும் செய்யத் தொடங்கினால், பணம் கொட்டும். அப்படிச் சிறப்பாகத் தொழிலை நடத்துவது போன்ற கற்பனை யில், நிரஞ்சனியின் மனம் ஏற்கனவே விண்ணை முட்டிப் பறந்து கொண்டுதான் இருந்தது!

அந்தக் கனவு மட்டும் பலித்து விட்டால், அவள் யாரை யும் சார்ந்திருக்கத் தேவையிராது என்பதே, அடுத்த முக்கியமான காரணம்.

அப்புறம், தனஞ்சயனைப் பற்றிக் குடும்பத்தில் அவளே தைரியமாக எடுத்துச் சொல்லலாம். பாட்டி என்ன சொல் வார்களோ என்று, அஞ்சத் தேவையில்லை! பாட்டி எதிர்த்தாலும், எதிர்ப்பது நிச்சயமே என்றாலும், அதற்கு அவள் பணிந்தாக வேண்டிய நிலைமையும் இராது!

சொல்லப் போனால்! இதுதான் நிரஞ்சனியை ஊக்கிய தாரக மந்திரம் எனலாம். பாட்டிக்குப் பயப்படாமல் நிமிர்ந்தே நிற்கலாம்.

குடும்பத் தொழிலில் இருந்து பாட்டி எடுத்துத் தரும். பணமின்றி அவளால் தனித்து நிற்க முடியும் என்று தெரியும்போது, பாட்டியின் வாய் கூட மூடலாம்!

இது ஒன்றும் நடக்க இயலாத, வெறும் வெற்றுக் கற்பனையோ, பகல் கனவோ அல்ல. நடக்கக் கூடியது.

அவளது கற்பனை கூடச் செய்திராத வகையில் தொடங்கித் தொடர்ந்து நடந்து கொண்டு இருப்பதும் கூட.

ஆனால், இது எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், சாதாரணமாகத் தொடங்கியது, என்பதுதான் வேடிக்கை!

'விஷுவலி'ல் கூடப் படித்த ஒரு தோழியுடைய தமக்கை வீட்டில் திருமணம். அக்கா வீட்டுத் திருமணத்தின்போது, போட்டோ எடுப்பதில், அக்கா உட்படத் தங்கள் குடும்பத்தை, அந்த வீட்டார் கண்டு கொள்ளவே மாட்டார்களே என்று புலம்பிய தோழிக்கு திடுமென ஓர் ஐடியா வந்தது.

ஒரு திருமணத்துக்கு, அழையாத விருந்தாளியாகச் செல்ல, முதலில் நிரஞ்சனி மிகவும் தயங்கினாள்.

ஆனால், அழாத குறையாகத் தோழி வற்புறுத்தவும், அவளது திட்டத்தின்படி, அவர்களுடைய குடும்பத்தோடு குடும்பமாகச் சென்று, உறுத்தல் இல்லாத வகையில் நின்று, பல படங்களை எடுத்துக் கொடுத்தாள்.

கொடுக்கும்போது, தோழியின் அனுமதியோடு, தனக்குப் பிடித்த சிலதை எடுத்து ஃபேஸ்புக்கில் போட்டாள். அந்தப் படங்களை எடுத்த கோணங்கள், தோற்றங்களைப் பார்த்துவிட்டு நிறையப் பேர், 'லைக்' அனுப்ப, இன்னும் சிலர் அவர்கள் வீட்டு விழாக்களுக்கே படம் எடுக்க அழைத்தார்கள்.

அழைத்தவர்கள், எல்லோருமே ஃபேஸ்புக்கில், அவளது ப்ரண்ட் லிஸ்டில் உள்ளவர்கள்தான். அறியாத,

தெரியாத அன்னியர்கள் இல்லை என்பது, செய்து பார்க்கலாமே என்ற ஆர்வத்தை அவளுக்குத் தந்தது.

சிற்றன்னையிடம் கேட்டபோது, கற்பகமும் பெண்ணைத் தடுக்கவில்லை.

ஆனால் ''எதையும் ஓசியாகச் செய்து கொடுக்காதேம்மா. நாலுக்கு இரண்டு பேரேனும் நம்மை ஏமாற்றி ஆதாயம் பார்க்கத்தான் முயற்சி செய்வார்கள். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதோடு, கைச்செலவு செய்து அடுத்தவருக்கு உதவுவது என்றால் பாட்டிக்குப் பிடிக்காது'' என்று மட்டும் எச்சரித்தாள்.

செலவைப் பங்கிட்டுக் கொள்வது, அவளுடைய நட்பினர் வட்டத்தில் வழக்கம்தான். எனவே, இதற்கு இவ்வளவு ஆகும் என்று கேட்பது, நிரஞ்சனிக்கும் கடினமாக இருக்கவில்லை.

மனைவி மூலம் விஷயம் அறிந்த தந்தை இன்னும் ஒரு படி மேலே போனார்.

மகளைக் கூப்பிட்டு ''இந்தத் தொழிலை விடாதே பாப்பா. என்னைப் போல ரப்பர் ஸ்டாம்ப் ஆகாமல், சொந்தக் காலில் நிற்பதற்கு ஒரு வழி கிடைக்கும்போது, அதை விட்டுவிடக் கூடாது. முன் பணம் கொடுத்து, சிடி ஃப்ளாஷ் வாங்க, சித்தியிடம் பணம் கேட்டு வாங்கிக் கொள். அறியாத இடம் செல்ல வேண்டாம். ஆனால் நண்பர்களுக்கு நண்பர்கள் என்று நட்பு வட்டத்தை பெருக்கிக் கொள். பெரிய அளவில் நீ நன்றாக வளர, என் வாழ்த்துக்கள்'' என்றார் அவர்.

காதலில் புகுந்திருந்த பெண்ணுக்கு இது. இன்னோர் எண்ணத்தை உருவாக்கியது! தன் காலில் நிற்கும் ஊக்கத்தை மேலும் வளர்த்தது.

கூட இருந்து கணக்குப் போட்டு கற்பகமும் பணத்தை எடுத்து தந்து வாழ்த்த, மனதார நன்றி கூறிவிட்டுக் கிளம்பினாள் பெண்.

வேலை முடிந்து வந்து, என்னென்ன மாதிரியெல் லாம் படங்களை எடுத்தாள் என்பதைப் பெருமையுடன் அளந்தபோது சந்தோஷமாகக் கேட்டிருந்துவிட்டு, ''எல்லாம் சரிதான். ஆனால், பாட்டி முன்னிலையில் இது பற்றி அதிகம் பேச வேண்டாம். மறந்தும் பாட்டி யிடம் பணமும் கேட்டு விடாதே. தனியாக இருக்கிற நேரங்களில், என்னிடமே கேட்டு வாங்கிக் கொள்'' என்றாள் கற்பகம் மெதுவாக.

''சரி சித்தி!'' என்று நன்றியோடு தலையாட்டிய சின்னவளின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன.

''சித்தீ... உண்மையைச் சொல்லுங்கள், பாட்டிக்குத் தெரியாமல், உங்களிடம் மட்டும் ஏன் பணம்? ஏதோ கோல்மால்தானே?'' என்று கண்களில் குறும்பு மிளிரக் கேட்டாள் அவள்.

மகளின் குறுகுறுத்த பார்வையை ரசித்தபடி ''தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாது, தெரியுமா?'' என்று அதட்டுவது போலப் பேசி, புன்னகை செய்தாள், கற்பகம்.

''ஏன் பார்க்கக் கூடாது? பார்த்தால் கடித்து விடுமா? மாடு கடித்ததாக, நான் கேள்விப்பட்டதே இல்லையே! மாட்டுப் பல்லுக்கும், தானத்துக்கும் என்ன தொடர்பு? சொல்..லுங்கள் சித்தி!'' என்று விவரம் கேட்டுப் பரபரத்தாள், வெற்றிக் களிப்பில் இருந்த நிரஞ்சனி,

''அது பெரிதாக ஒன்றும் இல்லை, நீரு. மாடு, குதிரை போன்ற மிருகங்களின் வயதை, அவைகளுக்கு

முளைத்திருக்கும் பற்களின் எண்ணிக்கையைக் கொண்டு தீர்மானிப்பார்கள். ஐயோ பா...வம் பிழைத்துப் போகட்டும் என்று ஒரு மாட்டைத் தானமாகக் கொடுத் தால், கிடைத்தது லாபம் என்று சந்தோஷப்பட வேண் டுமே தவிர, கிழட்டு மாட்டைத் தந்து விட்டார்களோ என்று ஆராய்வது அதிகப் பிரசங்கித்தனம் என்பதைத் தான் அப்படிச் சொல்வார்கள். என்ன? உவமை புரி கிறதா? அல்லது, விம் பார் போட்டு இன்னமும் விளக்க வேண்டுமா?'' என்று கேலியாகக் கேட்டாள் பெரி யவள்.

''வேண்டாம், வேண்டாம். விவரம் புரிகிறது. ஆனால், உபமான உபமேயம்தான் எங்கேயோ இடிக்கிறது. சம்பந் தமே இல்லாத யாரோ கொடுத்தால் அது தானம். அதைப் பற்றி ஆராயக் கூடாதுதான். ஆனால், என் அன்பான அம்மா என்ன கஷ்டப்பட்டு இந்தப் பணத்தைத் தந் தார்களோ என்று கவ...லைப்பட்டுக் கேட்பதும், அதுவும் எப்படி ஒன்றாகும்? இதற்குப் பதில், அம்மாதான் சொல்ல வேண்டும்!'' என்று கேட்டவளின் குரலில் கவலைக்குப் பதில் கிண்டல் தொனிக்க, கற்பகம் சிரித்தாள்.

''பிடித்தால் விட மாட்டாளே!'' என்று பெருமையாகக் குறை கூறியவள், தொடர்ந்து, ''வீட்டுச் செலவுப் பணத்தில் சமாளித்துத் தருவேனடி, இதைப் போய்ச் சத்தமாக உன் தம்பியிடம் சொல்லி வைக்காதே'' என்று எச்சரித்தாள்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு ''ஏ தில்லு முல்லு தானே?'' என்று கண்ணடித்துச் சிரித்துவிட்டுப் போனாள் நிரஞ்சனி.

ரசனையுடன் பார்த்த மனைவியின் முகபாவம் மாறுவதைக் கண்டு, அருகில் வந்து கேட்டார் குருபரன்.

அவளது பதிலில், அவரது முகத்திலும் குழப்பம் படிந்தது.

இதெல்லாம் அறியாமல், நிரஞ்சனி மிகவும் உற்சாகத்துடன் இருந்தாள். பெற்றோரின் அனுமதி இருக்கும் போது, அவள் யாருக்காகப் பயப்பட வேண்டும்?

தொழில் சத்தமின்றி, நல்லபடியாக வளரலாயிற்று.

'பை ப்ராடக்ட்ஸ்' என்று சொல்வார்கள். ஒரு பொருளைத் தயாரிக்கும்போது, பக்க விளைவாக, வேறு பொருட்களும் உருவாவது உண்டு.

பார்த்தால், முக்கியப் பொருளை விடச் சில சமயங்களில் இந்த 'பை ப்ராடக்ட்' முதலதை விட முக்கியத்துவம் உள்ளதாக ஆகிவிடும்.

நிரஞ்சனாவின் காதலும், அப்படித்தான். இந்த போட்டோ எடுக்கும் நிகழ்ச்சியில் தானாகத் தொடங்கி, அவளது வாழ்வில் மிக மிக முக்கியத்துவம் அடைந்து விட்ட ஒன்றாக மாறிவிட்டது.

ஆனால், முதல் முறையாகத் தனஞ்சயன் அவளோடு பேச முயன்ற சம்பவத்தை நினைக்கும்போது, இப்போதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வரும்.

பாவம், அவளைப் பார்த்ததுமே அவன் மனதில் ஏதோ குறுகுறுத்திருக்கும் போலும். கூடவே தன்னந்தனியனாக அவன் சென்னையில் இருந்த நிலை வேறு.

இத்தனைக்கும், நிரஞ்சனி போட்டோ எடுப்பதைக் கெடுத்துக் கொண்டு, அவன் வந்து பேசவில்லை.

அவளது பணியை மதித்து, அவன் ஒதுங்கியே இருந்தான்.

அன்றையச் சடங்குகள் முடிந்து, அவன் கேமிராவை உறை மாட்டிப் பைக்குள் வைக்கத் தொடங்கும் வரை பொறுத்திருந்து விட்டுத்தான் அவள் அருகிலேயே வந்தான்.

அப்படி வந்தவன், அவளிடம் வேறு ஏதாவது பேசியிருக்கலாம். அதைவிட்டு, ஆண்டாண்டு காலமாகப் பெண்களை வசப்படுத்த முதல் அம்பாக ஆண்கள் பயன்படுத்தும் வார்த்தைகள்... ''உங்களைப் பார்த்த மாதிரியே இருக்கிறது. யோசித்துப் பார்த்தும், எப்போது, எங்கே என்று, எனக்கு நினைவு வரவே மாட்டேன் என்கிறது!'' என்றுதானா தொடங்க வேண்டும்?

இதில் மாட்டுவதற்கு, அவளைப் பார்த்தால், அவளுக்கென்ன அவ்வளவு முட்டாளாகவா தோன்றுகிறது?

எனவே அவனைக் கிண்டலாகப் பார்த்து ''எனக்கு அப்படி எந்த ஞாபகமும் வரவில்லை. அதனால்... ஒரு வேளை, நீங்கள் என்னைப் பார்த்தது, போன பிறவியிலாக இருக்குமோ?'' என்று எள்ளி நகையாடும், குரலில், பதில் கேள்வி கேட்டாள்.

இதுதானே, பொதுவான அடுத்த வசனம்?

அவனும் கெட்டிக்காரன்தான் போலும், வினாடிக்குள் பேச்சுப் பாணியை மாற்றி, ''ஊகூகூம். அந்த அளவு அடுத்த ஜென்மத்துக்குத் தொடருகிற அளவு நீண்ட ஞாபக சக்தியெல்லாம் எனக்குக் கிடையாது. கேமிரா மேடம்! ஒருவேளை உங்கள் அம்மாவைப் பார்த்திருப்பேனோ என்னவோ? அவர்கள்...?'' என்று கேள்வியாய் நிறுத்தினான்.

அக்கறையற்ற கேள்வி போலத் தோன்றினாலும், அவனது பார்வையில் இருந்த கூர்மை வேறு சொன்னது.

இருபது ஆண்டுகளாக அவளே அறியாத, உலகிலிருந்தே மறைந்துவிட்ட அன்னை! அவளைவிட ஐந்தாறு வயதுகளே அதிகம் போலத் தோன்றும் இவன் பார்த்து, இத்தனை ஆண்டுகளாக அடையாளம் வேறு நினைவு வைத்திருக்கிறானாமாக்கும்!

உண்மையைச் சொல்லி, அந்த இடத்தில் அவனைத் தலைகுனிய வைக்க, அவளால் முடியும். ஆனால் இந்த விளக்கத்தை எடுத்துச் சொல்லி, அந்தப் பொய்யனோடு அவ்வளவு நேரம் நின்று, பேச அவளுக்கு விருப்பமில்லை.

எனவே ''ஓ! நல்ல சுகமாக இருக்கிறார்களே! அம்மா, அப்பா, தம்பி, பாட்டி... எல்லோருமே சுகம்தான். அதிலும் எங்கள் பாட்டி, ரொம்பவும் கண்டிப்பு! யாராவது வேற்று மனிதர்கள் என்னோடு பேசினால், தம்பியை விட்டு...'' என்று அளக்கும்போதே, முகத்தில் ஏமாற்றத்துடன், கூடவே யோசனையுடன், அவன் விலகிப் போனான்.

தம்பியை விட்டு என்றதும், பயந்து விட்டானாக்கும் என்று ஏளனமாக எண்ணும்போதே, அவளுக்கு ஏமாற்றமாகவும் இருந்தது.

வாட்ட சாட்டமாக, இவ்வளவு உயரமாக இருந்து கொண்டு அவளுக்கே தம்பியான ஒருவனிடம் இவ்வளவு பயமா?

காதலிக்காகக் காளையை அடக்குவது, வட்டக்கல் தூக்குவது எல்லாம், சங்க காலத்தோடு முடிந்துவிட்ட சமாச்சாரங்கள் போலும்!

ஒருவேளை, அது போலெல்லாம் மாவீரம் காட்டுகிற அளவுக்கு, அவள்தான் அழகாக இல்லை போலும் என்று, அவ்வப்போது கண்ணாடியில் வேறு ஆராய்ச்சி நடந்தது!

ஆனால் அவன் ஒரேடியாகப் போய்விடவும் இல்லை.

அவளுடைய நட்பு வட்டத்திலேயே, அவனுக்கும் யாரையோ தெரியும் போலும். சில பல விழாக்களில் காமிராக் கண்கொண்டு பார்க்கையில், தனஞ்சயனும் ஏதோ இடத்தில் நின்று கண்ணில் படத்தான் செய்தான்.

ஆனால், அவனைப் பார்வையால் தொடர்வதைப் பிடிவாதத்துடன், நிரஞ்சனி தவிர்த்தாள்.

ஒரு பொய்யனோடு, அவளுக்கு என்ன பேச்சு?

இந்த நிலையில், ஒரு நாள் மிகுந்த கவனத்துடன், ஒரு நலுங்கு சுற்றும் நிகழ்ச்சியை அவள் பதிவு செய்து கொண்டிருக்கும்போது, ''ஏய் நீரு, உன் காது டிராப்ஸ் ரொம்ப அழகாக இருக்கிறதுப்பா! அதன் குந்தன் வேலைப் பாடு, மிகவும் பிரமாதம்!'' என்றாள் அருகில் வந்து நின்ற மதுமதி.

''இம்.. இடையிடையே வைரம் இருப்பதால், உள்ளிருந்து ஒளி வீசுவது போல இருக்கும். இந்தப் பிறந்த நாளைக்குச் சித்தி வாங்கித் தந்தது'' என்று வேலையில் கவனமாக இருந்த நிரஞ்சனி திரும்பிப் பாராமலே கூறினாள்.

''அதற்கும் அதிருஷ்டம் வேணும்ப்பா. ரொம்பச் சின்ன வயசில் தாயை இழப்பது கொடுமைதான். ஆனால், தாய்க்கும் மேலாக அன்பு காட்டும் சித்தி கிடைத்தது,

அதை இரண்டு மடங்காக ஈடுகட்டி விட்டதுதானே?'' என்றாள் மற்றவள்.

''உண்மைப்பா. எங்கள் சித்தி இல்லாத ஒரே ஒரு நாளைக் கூட என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது'' என்று உணர்ச்சியோடு கூறி நிமிர்ந்தால், அங்கே உணர்ச்சி துடைத்த முகத்துடன் தனஞ்சயன் நின்றான்.

சொல்வது அறியாமல், முகம் குப்பென்று சிவந்தது, அவளுக்கு! இல்லாத அம்மா சுகம் என்று பொய் சொன்னவள் ஆயிற்றே!

அவன் காட்டியதும் பொய்முகம்தான் என்றாலும், அதற்கும், இதற்கும் சரியாகப் போய்விட்டது என்று அலட்சியப் படுத்த முடியாமல், நிரஞ்சனியின் மனம் குன்றியது.

அப்போதும் அவளது வேலையைக் கெடுத்துக் கொண்டு, அவன் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அங்கே இங்கே, அருகிலேயேதான் இருந்தான்.

எனவே, வேலை முடிந்து ஏறக் கட்டியதும், சிறு தனிமையை ஏற்படுத்திக் கொண்டு, ''பெற்ற தாயார் இல்லையாமே?'' என்று தனஞ்சயன் கேட்ட கேள்விக்கு அவளும் தயாராகவே இருந்தாள்.

''ஆமாம். ஆனால், அது பற்றி உங்களுக்கென்ன?'' என்று துடுக்குக் காட்டிப் பதிலுக்கு, அவளும் கேள்வி கேட்டாள்.

அவளது சொந்த விஷயம் பற்றிக் கேட்க அவனுக்கு உரிமை கிடையாதுதானே?

மேலே பேச்சை வளர்க்க முயன்றால், இப்படி ஏதாவது சொல்லிவிட வேண்டியதுதான் என்று அவள் திட்டமிடும்போதே, அவன் வேறு கூறினான்.

''தப்பாக நினைக்க வேண்டாம், நிரஞ்சனா. எனக்கு அம்மா அப்பா இருவருமே இல்லை. அதனால், அது போன்ற ஒத்த நிலை. கிட்டத்தட்ட அதே நிலையில் இருப்பவர்களிடம் ஓர் இணக்கம், நட்பு மாதிரி ஒரு... ஒரு நல்ல உணர்வு தோன்றுமல்லவா? அன்று கூட, உங்கள் தாயார் பற்றி, யாரோ அதுபோல ஏதோ சொன்னது கேட்டுத்தான் உங்களிடம் பேச வந்தேன். அப்படி யில்லை என்று அறிந்ததும் விலகிப் போய்விட்டதைத் தப்பாகக் கூட எண்ணியிருப்பீர்கள். ஆனால் பெற்ற தாயாருக்கும் மேலாக ஒரு சிற்றன்னை கிடைத்து, அவர்களையே நீங்கள் தாயாகவும் கருதிப் பேசியது, எனக்குத் தெரியாது, சாரி'' என்று அன்று விலகிப் போன தற்கு விளக்கம் சொன்னான்.

கோவையாகத்தான் தோன்றியது.

அன்று முதலில் பேச முயன்றதிலிருந்து, அம்மா அப்பா குடும்பம் என்றதும் விலகிப் போனதும், இன்று தாயில்லை என்று அறிந்ததும், தானாக வந்து பேசியதும்... எல்லாம் சரியாகத்தான் இருந்தது.

நியாயமற்று அவனை எடை போட்டதை எண்ணி மறுபடி மனம் கூச, அவளாகவே தன் விவரம் சொன்னாள். ''எங்கள் சித்தி, எனக்குப் பெற்ற தாய் மாதிரியே தான். எனக்கும் தம்பிக்கும் இடையே, ஒரு வேறுபாடும் காட்ட மாட்டார்கள். அம்மா என்றே, கூப்பிட்டிருப்பேன். எங்கள் பாட்டிதான் கூடாது என்று தடுத்து விட்டார்கள். பெற்ற தாய் இல்லையாம். சித்தி என்றுதான் கூப்பிட வேண்டுமாம். அம்மா என்று அழைக்கப் போவதாக ஒரு தரம் சொன்னதற்கே, அவ்வளவு கோபப்பட்டார்கள்!''

ஏதோ யோசித்து ''பாட்டி என்றால்... அப்பாவுடைய அம்மாவா? முதிய மூன்றாவது மூத்த தலைமுறை! கருத்துக்களே, வேறு மாதிரி இருக்குமே!'' என்றான் அவன், கரிசனம் காட்டி.

''நிச்சயமாக!'' என்றாள் அவள் எரிச்சலோடு ''ஆண் பிள்ளை என்றால்தான் வாரிசாம். என்னைப் பார்த்தாலே பிடிக்காது. எதற்கும் திட்டு விழும். நானும் நன்றாகத் தான் கார் ஓட்டுவேன், ஆனால் அவர்கள் அறிய கார்ச் சாவியை நான் தொட முடியாது. ஏதோ நந்துவுக்குக் கொம்பு முளைத்திருக்கிறது போல அவனைத்தான் உயர்வாக நடத்துவார்கள். ஆனால்...''

''புரிகிறது. நம் நாட்டில் அந்தப் பாகுபாடு அழியவே போவதில்லை என்று தோன்றுகிறது!'' என்று அந்தத் தனஞ்சயன் பரிவாகச் சொன்னது அவளுக்கு இதத் தோடு, ஆச்சரியமாகவும் இருந்தது.

எனவே ''ஓர் ஆண் மகனாக இருந்து கொண்டு, எங்களுக்குப் பரிந்து பேசுகிறீர்களே!'' என்று வியப்புடன் வினவினாள்.

''நியாயத்தை, யார் வேண்டுமானாலும் பேசலாம்'' என்று அவன் கூறவும், அவளது மனதில் அவனைப் பற்றி, இன்னும் கொஞ்சம் ஒப்புதல் தோன்றியது.

எப்படியும், முதலில் எண்ணியது போல மோசம், நிச்சயமாக இல்லை!

லேசாக முறுவலித்து ''என் தம்பி, பெயர் சிவநந்தன். அவனும் இப்படித்தான் கூறுவான். இரண்டு தலை முறை முதியவர்கள் என்பதால், பாட்டிக்கு உலக நடப்பு தெரியவில்லை என்பான். ஆனால்... ஒரேயடியாக அப் படிச் சொல்லவும் முடியாது.

அவ்வப்போது அப்பாவோடு அலுவலகம் போகிறார் கள். வெற்றிகரமாகத் தொழிலை நடத்துகிறார்கள். இன்னும்...'' என்றவளுக்கு, ரொம்ப பேசிவிட்டோம் என்று தோன்றிவிட, புதிதாக உள்ளே வந்த ஒருத்தியைப் பார்த்துக் கையாட்டிவிட்டு, ''வருகிறேன் சார்'' என்ற அந்தப் பெண் பக்கமாகச் செல்லலானாள்.

அந்தப் பெண்ணோடு அதிகப் பழக்கம் கிடையாது தான். ஆனால் அவளிடம் சென்று சேருமுன், தோழிகள் யாரேனும் அந்தப் பக்கம் வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை அவளுக்கு.

இல்லாவிட்டாலும், தந்தை சொன்னபடி நட்பின ருக்கு நட்பினர் என்று, அறிந்தவர் வட்டத்தைப் பெருக் கும் விதமாக, அந்தப் பெண்ணிடமே ஒரு 'ஹாய்' சொல் லிப் பேசிவிட வேண்டியதுதான் என்று எண்ணியவாறு, அவனை விட்டு விலகி நடந்தாள் அவள்.

# 4



ஆனால் அந்தத் தனஞ்சயனைத் தவிர்ப்பது, நிரஞ்சனிக்கு அப்படி ஒன்றும் எளிதாக இருக்கவில்லை. ஏனெனில், அவளுடைய இந்த நட்பினர் கூட்டத்தி லேயே, அவனுக்கு வேண்டியவர்களும் இருந்தார்கள்.

ஒன்றுவிட்ட, இரண்டு விட்ட உறவு, அவர்களுக்கு நெருங்கிய உறவு என்பது போல, ஓரொருவர் நெருக்க மான தோழமை, இருவருக்கும் வேண்டியவர்கள்,

அவர்களுக்கு நண்பர்கள் என்று, அந்தக் குழுவில் நிறையப் பேர் இருந்தார்கள்.

எல்லோருக்குள்ளும் சுமூகமான உறவும் இருந்தது.

நிரஞ்சனியைப் போலத் தொழில் முறைப் பழக்க மாகவும் நெருக்கம் இருந்தது எனலாம்.

அவர்களுள் ஒருவன் 'கிஃப்ட் ஷாப்' வைத்திருந்தான், ஒருத்தி 'பொட்டிக்' வைத்திருந்தாள். இரண்டு பேர் சேர்ந்து 'சர்க்குலேட்டிங் லைப்ரரி' நடத்தினார்கள்.

ஒருவருக்கொருவர் விற்பனையாளராகவும் இருந்தார் கள். வாடிக்கையாளராகவும் இருந்தார்கள். எல்லோருக் குமே இளமை உற்சாகம் இருந்ததால், எந்த ஒரு நிகழ்ச்சி என்றாலும், எல்லோரும் சேர்ந்து கொள்வார்கள்.

இதில், ஒருவனை மட்டும் எப்படித் தவிர்ப்பது?

என்னவோ, அவனைத் தவிர்ப்பதற்கு, அவளுக்கு மனம் வரவில்லை. அந்த எண்ணமே வர முடியாதபடி, நிகழ்ச்சிகளும் நடந்தன.

ஒருதரம் படங்களை எடுத்துக் கொண்டிருந்தபோது, அங்கே ஓடி விளையாடிக் கொண்டிருந்த பையன்களில் ஒருவன், ஒரு கோணத்துக்காக கேமிராவை உயர்த்திப் பிடித்து படம் எடுத்தபோது, அந்தக் கையில் மோதி விட் டான்.

விளையாட்டு வேகத்தில் மோதிவிட்டு, அவன் ஓடிவிட, உதை பட்ட கால்பந்து போலக் கேமிரா எங்கோ பறந்தது.

பாட்டியிடம் போராடிப் பெற்ற கேமிரா! விலை கிட்டத்தட்ட அரை லட்சம்! படிக்கிற படிப்புக்குப் பாடப்

புத்தகம் போலக் கட்டாயமாக வாங்க வேண்டும் என்று வாதாடி, ஆயிரம் நிபந்தனைகளோடு, பாட்டி அனுமதித்தது!

இப்போது, அவள் தொடங்கியிருக்கும் தொழிலுக்கான மூலதனமே, இந்தக் கேமராதானே? இனி அவளும், அப்பா மாதிரி, பாட்டிக்கு அடிமைதான்!

விடுதலை பற்றிய அவளது எல்லாக் கனவுகளும் கனவாகவே முடிந்து விட்டனவே!

கண் மூடித் திறப்பதற்குள், இந்த உலகத்தையே சுற்றி வரும் வல்லமை படைத்த மனது, கேமிரா கையை விட்டுப் பறந்த ஒரு சில வினாடிகளுக்குள்ளாக, இத்தனையும் எண்ணிவிட, நிரஞ்சனி கலங்கித் தவிக்கையில், கை தேர்ந்த பாஸ்கட் பால் வீரனைப் போல, நின்ற இடத்திலிருந்து உயரத் தாவி, கேமிரா கீழே விழுந்து விடாமல், தனஞ்சயன், அந்தக் கேமிராவைக் காட்ச் பிடித்தான்!

'காட்ச்' பிடித்தது மட்டுமல்ல. பிடித்த வேகத்தில் கீழே விழுந்தபோதும், கேமிராவை விட்டு விடாமல், அதைத் தூக்கிப் பிடித்தவாறே எழுந்தான்.

பழுதின்றி கேமிரா கைக்கு வரவும், நிரஞ்சனிக்குப் பேச்சுக்குப் பதில் கண்ணீர் தான் வந்தது.

''போச்சுடா!'' என்றான் அவன் ''இந்த அழகான கண்களில் கண்ணீர் வந்துவிடக் கூடாதே என்றுதான், நான் இவ்வளவு கஷ்டப்பட்டு, அதைக் 'காட்ச்' பிடித்ததே! என் கஷ்டத்துக்கு பலன் இல்லை என்றால், மறுபடியும் தூக்கிப் போட்டு விடவா?'' என்று கேமிராப் பக்கமாய்த் தனஞ்சயன் கைகளைக் கொண்டு போகவும்,

''அச்சோ வேண்டாம்'' என்று கேமிராவைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள் அவள்.

ஆனால் மழைக்கால மின்னல் போல, உதடுகள் பிரிந்து புன்னகையும், பளீரிட, ''ஆஹா! இது பிரமாதமாக இருக்கிறதே!'' என்று அவன் விழி விரித்து வியக்கவும், தன்னையறியாமல் அவளது கன்னங்கள் சூடாயின.

கன்னச் சிவப்பை மறைக்கும் முயற்சியாகக் குனிந்து, பைக்குள் கேமிராவை வைத்தபடி ''இரண்டாம் ஆண்டு படிக்கும்போது, என் பாட்டியின் காலில் விழாத குறையாகக் கெஞ்சி கேட்டு, வாங்கிய கேமரா. இதற்கு ஏதேனும் ஆகியிருந்தால், பாட்டி என்னைக் கண்ட துண்டமாக வெட்டிக் காக்காய்க்குப் போட்டிருப்பார்கள்! ரொம்பத் தாங்க்ஸ், தனஞ்சயன்'' என்றாள் அவள் கை வேலையிலேயே கவனமாக.

''காட்ச் பிடித்த வேகத்தில் கேமிரா, கோணமாணலாக நசுங்கி விட்டதா?''

திகைப்புடன் நிமிர்ந்து ''இல்லையே, இது நசுங்காதே!'' என்று புரியாமல் கேட்டாள் நிரஞ்சனி.

''இல்லை, கேமிராவை அதன் பைக்குள் வைப்பதற்கு மிகவும் சிரமப்படுவது போலத் தோன்றுகிறதே என்று பார்த்தேன்'' என்று சாதுவாக உரைத்து, அவன் கண்ணால் நகைக்க, அவளது முகத்திலும் மறுபடியும் சென்னிறம் பரவியது.

இப்படிச் சிரிக்கிறவனிடம் எப்படிக் கோபப்படுவது? கூடச் சிரிக்கத்தான் அவளுக்குத் தோன்றியது.

பொதுவாகவே வீட்டில் சற்று அன்பற்ற... அன்பு இருந்தாலுமே அதை வெளிப்படையாகக் காட்ட முடி

யாத சூழ்நிலை என்பதால், எந்த விதமான கட்டுப் பாடும் இல்லாமல், ஒரு கண்ணியத்தோடு, தடையற்றுப் பேசி மகிழும் இந்த நட்பு வட்டம் நிரஞ்சனிக்கு மிகவும் பிடிக்கும்.

இப்போது தனஞ்சயன் அதில் அதிகமாகக் கலந்து கொள்ளவும், இன்னும் அதிகமாகப் பிடித்துப் போயிற்று.

இன்னொரு தரம் ஒரு நிச்சயதார்த்த விழாவில் அவள் படம் எடுக்கத் தயார் பண்ணிக் கொண்டிருந்தாள்.

நெற்றிச் சுட்டி, பட்டுப்பாவாடை அணிந்த ஒரு சிறு பெண் அவள் அருகே வந்து நின்று, ''என்னை ஒரு போட்டோ எடுங்களேன்!'' என்று கேட்டாள். சரிதான் என்று எடுத்ததும், அருகே நெருங்கி ''அக்கா, அந்த அங்கிள் உங்களிடம் பேச வேண்டுமாம்'' என்று ரகசியம் போலச் சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

அவ்வப்போது நடப்பதுதான். விழாவுக்கு வரும் விருந்தினர் யாருக்காவது, இப்படி ஒரு நமைச்சல் தோன் றுவதான். புருவம் சுளித்துப் பார்த்தாலே, காணாமல் போய் விடுவார்கள்.

எனவே, சிறு எரிச்சலைக் காட்டிப் பார்த்தால் அங்கே தனஞ்சயன் நின்று காட்சி தந்தான்.

என்ன இது? இவன் அருகே வந்து பேச வேண்டியது தானே என்று எண்ணியவாறே அருகே சென்றால் ''விஷயம் வெளியே தெரிய வேண்டாம் என்று தான் அங்கே வரச் சொன்னேன், ரஞ்சனி. இங்கே நான் மாப் பிள்ளை வீட்டு மனிதன்...'' என்று அவன் சொன்னதில் மனம் பதியாமல் இவன் 'ரஞ்சனி' என்றானா, அல்லது 'நிரஞ்சனி' என்றுதான் சொன்னானா என்று, அவள் மனம் குழம்பியது.

அவளது கவனக் குறைவைக் கண்டுகொண்டாலும், காரணத்தைத் தவறாகக் கணித்து ''பெரிதாக ஒன்று மில்லை. கவலைப்பட வேண்டாம். ரொம்பச் சின்ன விஷயம். ஞாபக மறதி. நிச்சயத்துக்கான மோதிரத்தை வீட்டிலேயே பத்திரமாக வைத்துவிட்டு வந்து விட்டார் களாம். வைரம் என்பதால், ஆன்ட்டி பத்திரமாக பீரோ வுக்குள் பூட்டி வைத்தார்களாம். எடுத்து வர ஆள் போயா யிற்று. ஆனால் இப்படி என்று வெளியே தெரிந்தால், பெண் வீட்டார் அபசகுனமாக எண்ணலாம். நண்ப னுக்கு இன்னும் பெரிய பயம். பெண் வீட்டார், சம்பிர தாயங்களை ரொம்பப் பின்பற்றுகிறார்களே, சகுனத் தடை என்று திருமணத்தை நிறுத்தி விடுவார்களோ என்று கலங்கித் தவிக்கிறான். அந்த அளவுக்குப் போக மாட்டார்கள் என்பதுதான் எனக்கு. ஆனாலும், அப சகுனம் என்று அது ஓர் உறுத்தல் எதற்கு? அதற்காகத் தான் உங்கள் உதவியைத் தேடி வந்தேன்'' என்றான் அவன்.

''நான்... என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்'' என்று கேட்டாள் நிரஞ்சனி.

''குட். நேரத்தை வீணாக்காமல் உடனே விஷயத் துக்கு வந்து விட்டீர்கள்'' என்று பாராட்டியவன், அவள் செய்ய வேண்டியதைச் சொன்னான்.

''நாத்தனாரிடம் இருந்து, மணப்பெண் சேலையை வாங்கிக் கொள்வது, சந்தனம், பொட்டு, பூ வைத்து, சேலையைக் கையில் கொடுப்பது, இன்னும் சேலையைக் கட்டியதும், அங்கே இங்கே சரி பண்ணுவது... இப்படி, பெண் சேலை கட்டுவதைக் கொஞ்சம் மெதுவாகச்

செய்ய வேண்டும்... அதாவது, இந்த மடிப்பு சரியில்லை, இதில் பார்டர் சரியாகத் தெரியவில்லை... என்று மாற்றி மாற்றிக் கட்ட வையுங்கள்... இது போட்டோவுக்கு நன்றாக இராது என்று ஒரு போடு போட்டால், அதற்கு மேல் மறுத்துப் பேச, யாருக்குத் தைரியம் இருக்கும்?''

தலையை லேசாகச் சரித்து, ''சேலை கட்டுவது பற்றி நிறையத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே!'' என்றாள் அவள் கேலிப் புன்னகை புரிந்து.

அவன் ஒன்றும் வெட்கித் தலை குனியவில்லை. மாறாக, ''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்று என் தாத்தா சொல்வார்கள். அழகாக சேலை கட்டுவது எப்படி என்று ஒரு பெண் பத்திரிகையில் படங்களோடு வெளியிட்டிருந்தார்கள். விட்டால், நானே ஒருவருக்குச் சேலை கட்டி விடலாம் போல, சற்றும் குழப்பமற்ற அவ்வளவு தெளிவான குறிப்புகள்! சோகம் என்னவென் றால்...'' என்றவனைக் குறுக்கிட்டு, ''கட்டிவிட்டு அழகுப் பார்க்கப் பெண் தான் கிடைக்கவில்லை போல!'' என்றாள் அவள் துடுக்காக.

''அது சோகமில்லை. சேலை கட்டுவதை, இவ்வளவு விலாவாரியாக விளக்க வேண்டிய நிலையில், நம் முடைய தமிழ்ப் பெண்கள் இருக்கிறார்களே என்றுதான் வருத்த்...தமாக இருந்தது!'' என்று உச்சுக் கொட்டினான் தனஞ்சயன். சோகமாய்!

அகன்ற விழிகளால், அவனை ஒரு பார்வை பார்த்தாள் நிரஞ்சனி.

''தமிழ்நாட்டு மானத்தில் அவ்வளவு அக்கறையா? அப்படியானால், உங்களுக்கு நன்றாக வேஷ்டி கட்டத்

தெரியுமோ, தனஞ்சயன்?'' என்று நேரடியாகக் கேட்டாள்.

கண்களில் எட்டிப் பார்த்த திகைப்பு உடனே மறைய ''இதற்குப் பெயர்தான் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்வது என்று நினைக்கிறேன். மெய்யாகச் சொல்கிறேன் நிரஞ்சனி, எனக்கு வேஷ்டி கட்டத் தெரியவே தெரியாது. தாத்தா கூடச் சொல்லுவார், கலியாணத்தன்றாவது கட்ட வேண்டும். அதனால் கற்றுக் கொள்ளடா என்பார். நான் திருமணம் செய்வதானால், பேண்ட் ஷர்ட்டில்தான் என்று வாதம் செய்வேன். இப்போது தாத்தா, பேண்ட்டிலோ, பைஜாமாவிலோ, எப்படியாவது திருமணம் செய்து கொள்ளடா என்கிறார்'' என்று சிரித்தான்.

''நீங்கள் வேண்டுமானால் பாருங்கள், தாத்தா ஆசைக்காக மட்டுமில்லாமல் தமிழ்நாட்டு ஆண்களின் மானத்தைக் காப்பாற்றவேனும் என் திருமண சமயத்தில் வேஷ்டி கட்டக் கற்றுக் கொண்டு விடுவேன், ப்ராமிஸ்'' என்றான் வேடிக்கையாக.

''பார்க்கலாம். உங்கள் திருமணத்தை போட்டோக்கள் எடுக்கும்போது, எனக்கு அது தெரிந்துதானே தீரும்?'' என்றாள் அவன் நம்பாத குரலில்.

பார்வை மாற ''நீ எப்படி...'' என்று தொடங்கியவனின் பேச்சு சட்டெனத் தடைப்பட ''அக்கா, போட்டோ எடுக்கக் கூப்பிடுகிறாங்க...'' என்று ஒரு சின்னப் பெண் ஓடி வந்தாள்.

மரியாதையுடன் வழிவிட்டு விலகி ''போங்கள் மேடம்! சொன்னதை மறந்துவிட வேண்டாம், மேடம்!''

என்று வேடிக்கையாகப் பேசுவதுபோல, அவள் செய்ய வேண்டியதைத் தனஞ்சயன் நினைவூட்டினான்.

தலையாட்டிவிட்டுச் சென்றவளின் மனதில் ஒரு குழப்பம். தனஞ்சயனாகப் பேச்சை நிறுத்தினானா? அல்லது, சிறு பெண் குறுக்கிட்டதால் பேச்சு தடைப் பட்டதா?

அவன் என்ன சொல்ல இருந்தான்?

அவனது திருமணப் படங்களை எடுப்பதற்கு, அவளுக்கு தகுதி போதாது என்று தனஞ்சயன் நினைத் திருப்பானோ?

அவனிடம் போய்த் தான்தான் படம் பிடிக்கப் போவது போலப் பேசிவிட்டோமே என்று, அவளுக்குக் குன்ற லாக இருந்தது.

தன் திறமையைக் காட்டி, தன் தகுதியை நிலை நாட்ட வேண்டும் என்ற வேகம் ஒரு பக்கமும், தனஞ்சயன் கேட்ட தாமதம் ஒரு புறமுமாக, வெகு நிதானத் துடனேயே தேவையான படங்களை நிரஞ்சனி எடுத்து முடித்தாள்.

கடைசியாக, மாப்பிள்ளை குடும்பத்திலிருந்து பெண் தயாரா என்று இரண்டு முறை ஆள் வந்து கேட்ட பிறகே, மோதிரம் வந்து சேர்ந்து விட்டதை உணர்ந்து, பெண் அலங்காரத்தைப் பொறுத்த வரையில் தன் வேலையும் முடிந்ததாக அவளும் அகன்றாள்.

நிச்சயதார்த்தச் சடங்குகளின் போதும், தனஞ்சயனின் அருகாமையை உணர்ந்தபோதும், அதைக் கண்டு கொள்ளாமல், வேலையில் அதிகக் கவனம் செலுத்திச் செய்தாள்.

என்ன பெரிதாக? அவன் கேட்டபடி தாமதப்படுத்தியதற்காக நன்றி சொல்லுவான் அதுதானே? ஆனால் அவனுக்காக மட்டுமாக, அவள் ஒன்றும் இழுத்தடிக்கவில்லையே.

ஏற்றுக்கொண்ட பொறுப்பைத் திருப்தி ஏற்படும் அளவு சிறப்பாகச் செய்துதான் அவளுக்குப் பழக்கம் என்று அவனிடம் சொல்லிவிட வேண்டும்.

அவன் 'நன்றி' என்று வாயைத் திறந்தால் சொல்வதற்குப் பதிலை அவள் தயாராக வைத்திருந்தபோது, அவன் வேறு கூறினான்.''

''ஒரு வழியாகக் கஷ்டப்பட்டு மணப் பெண்ணுக்குச் சேலையைக் கட்டித் தமிழ்நாட்டு மானத்தைக் காப்பாற்றி விட்டீர்கள் போல! ஆனால் ஒன்று. திருமணத்தின் போதும், இவ்வளவு நேரம் ஆகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அதிகத் தாமதம் ஆகி விட்டதாகக் கேலி போல அவன் மறைமுகமாகக் குற்றம் சாட்டவும், நிரஞ்சனி திகைத்துப் போனாள்.

''என்னது? சின்...ன ஞாபக மறதி, தாமதப்படுத்த வேண்டும் என்று அவ்வளவு கேட்டுவிட்டு, இப்போது நேரமாகி விட்டதாக, எங்களையே குறை கூறுகிறீர்களா?'' என்றாள் சிறு கோபத்துடன்.

''சொன்னேன்ப்பா! ஓர் ஐந்து பத்து நிமிஷம் தாமதம் ஆக்க வேண்டும் என்பதாகச் சொன்னேன். இப்படி, அடுத்த நாள் கல்யாணம் மாதிரியா, ஜவ்வு இழுப்பீர்கள்?'' என்றான் அவன் கிண்டலாக.

''அது சரி! இப்போது சொல்வதற்கென்ன? ஐந்து பத்து நிமிஷங்களா? அடுத்த நாள் வரையுமா என்று

எனக்கு எப்படித் தெரியும்? சொல்கிற விஷயத்தை, நீங்கள் அல்லவா, ஒழுங்காகச் சொல்லியிருக்க வேண்டும்!'' என்று மடக்கினாள் அவள்.

''என்னங்க, என்னதான் ஊர்வலம் போல வந்தாலும், ஒரு மணி நேரமா ஆகும்? ஆனால்... யோசிப்பது வழக்கம் இல்லையாக்கும்?'' என்றான் அவன் பதிலுக்கு.

மூளை இல்லையா என்பதை நாகரீகமாக மாற்றிக் கேட்கிறானாக்கும்? அது புரியாத அளவுக்கு முட்டாளா, அவள்.

கோபத்தை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டு ''ஆனால், மணமகன் இருப்பிடம், அண்ணா நகரிலா, அதற்கும் அறுபது கல் தொலைவிலா அடுத்த ஊரிலா? அதைச் சொல்லாமல் இருந்து விட்டீர்களே! ஒருவேளை, இந்த மாப்பிள்ளை வீட்டுக்கே உரிய சின்...ன ஞாபக மறதி காரணமாக இருக்குமோ?'' என்று அவள் கிண்டல் போல ஒரு குட்டு வைக்கவும், அவன் முகத்தில் லேசாக அசட்டுக்களை பரவியது.

'ஆஹா! ரொம்பத்தான் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்கிறேன் போல? மரியாதையாக, சாரி சொல்வதுதான் உத்தமமோ?' என்று வேண்டும் என்றே உரக்க யோசித்தவன், அதைத் தொடர்ந்து ''சாரிம்மா'' என்றான்.

அடுத்தும் அவனே பேசத் தொடங்கி ''ஓர் உண்மையைச் சொன்னால், தப்பாக நினைக்கக் கூடாது. நீங்கள் மட்டம் தட்டிப் பேசும்போதுகூட, முகபாவமும், குரலும், உதடுகள் பிரிந்து வார்த்தைகள் விழுந்த விதமும், ரசிக்கத் தோன்றியதே தவிர, எதிர்மறை உணர்ச்சிகள் எதுவுமே

ஏற்படவில்லை. அதனால்... கோபப்பட்டதற்கு நன்றி!'' என்று கூறிப் புன்னகை செய்தான்.

எப்படிக் கோபத்தை இழுத்துப் பிடிப்பது? கூடச் சேர்ந்து மலர முயன்ற முறுவலை அடக்குவதே சிரமமாக இருக்கையில்?

அப்போதைக்கு ஏதோ சமாளித்து வைத்த போதும், இரவெல்லாம் நிரஞ்சனிக்குத் தனஞ்சயனின் பேச்சும் சிரிப்புமே நினைவில் வந்துகொண்டே இருந்தது.

ரசிக்கத் தோன்றியதாமே!

ஒரு பூவைப் பார்க்கையில் ரசிப்பது போலவா? அல்லது அவளது தோற்றம் மட்டும் அவனது ரசனையைத் தூண்டியதா?

இப்போது அவனது வரிசைப் பல் சிரிப்பை நினைத்து நினைத்து மகிழ்கிறாளே, அப்படியா?

அவனும் இப்படித்தான் நினைப்பானா என்று எண்ணிப் பார்த்தவள் சட்டெனத் திடுக்கிட்டாள்.

ஒருவேளை, அவன் அப்படி நினைக்கவில்லை என்றால்? அந்த நேரத்தில் பொழுது போவதற்காக மட்டும், ரசனை அது இதென்று அப்படிப் பேசியிருந்தால்?

ஆனால், அவளது கலக்கம் மறுநாளே மறைந்து போயிற்று. மறைய வைத்தவனும் தனஞ்சயனே!

அவனுடைய நண்பனுடைய குடும்பத்தில் வியாபாரத்தை விரிவு படுத்த, கிளைக்கடை ஒன்று திறக்கப் போகிறார்களாம். விழா நிகழ்ச்சியோடு, குடும்ப அங்கத்தினரையும் படம் பிடிக்க வேண்டுமாம்.

திருமணத் தொடர்பாக மட்டும்தான் அவளது வேலை என்று இல்லையல்லவா? இது போலவும் செய்யலாம் தானே?

வீட்டில் முக்கியமாகப் பாட்டி தடுக்கக் கூடுமோ என்று அவள் யோசிக்கையிலேயே, ''ப்ளீஸ்யா... எனக்காகக் கட்டாயம் வர வேண்டும், நிரஞ்சனி. நான் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்'' என்று கெஞ்சுதலாகக் கேட்டான்.

அவன் ஆவலாக எதிர்பார்ப்பான் என்றால் போக வேண்டும்தான்!

அவனிடம் சம்மதம் சொல்லிவிட்டு, வீட்டில் சொன்னால் பாட்டி மேடையில்லாமலே தாண்டவம் ஆடினாள்.

''என்ன கிறுக்குத்தனம் இது? என்னவோ, கல்யாணம், நலுங்கு என்று பெண்கள் விஷயமாக ஏதோ செய்கிறாய், அதிலேயே இரண்டாயிரம், மூவாயிரம் என்று பணமும் கொண்டு வருகிறாய் என்று பார்த்தால், இதென்ன கடை திறப்பு, மண்ணாங்கட்டி, தெருப் புழுதி என்கிறாய்? கண்ட தடியன்களோடு கொட்டமடிப்பதற்காகக் கடைத் திறப்பு என்ற பெயரில் ஊர் சுற்றப் போகிறாயா?'' என்று ஆத்திரத்துடன் கத்தினாள்.

வழக்கமான பேச்சுத்தான், ஆனால் நிரஞ்சனியால் பொறுமையை இழுத்துப் பிடிக்க முடியவில்லை.

எனவே ''ஏன் பாட்டி, இப்படிப் பேசுகிறீர்கள்? செலவு செய்து ஒரு நல்ல படிப்பைப் படித்திருக்கிறேன். அதன் மூலம் வருமானமும் வருவதால், இதை ஒரு நல்ல தொழிலாக வளர்க்கலாம் என்று நினைத்தேன். இதுவும் குடும்பமே சேர்ந்து வியாபாரத்தைக் கவனிக்கும்

கடைதான். கல்லாவில் உட்காருவது, தாத்தாதான். அதனால் தப்புக்கு வழியில்லை என்று, ஒத்துக்கொண்டு வந்து விட்டேன். அதனால், இனிமேல் எப்படி என் றாலும் இதைக் கட்டாயம் செய்துதான் ஆக வேண்டும். ஆனால் அவர்கள் எல்லோரும் கடையில் விற்பனையைக் கவனிப்பதற்கு மனைவி மகளை அனுமதிக்கிறபோது, நீங்கள் ஏன் பாட்டி, இப்படிக் கேவலமாகப் பேசுகிறீர் கள்?'' என்று பாட்டியை எதிர்த்துக் கேட்டு விட்டாள்.

காரணம் இல்லாமலே காய்கிறவள்! பேத்தி இவ் வளவு பேசினால் சும்மா விடுவாளா?

''என்னடீ வாய் நீளுகிறது? இதென்ன, ஐந்துக்கும் பத்துக்கும் அரிசி பருப்பை விற்கிறவன் வாழும் குடி சையா? அவர்கள் கடையும் வைப்பார்கள், கூத்தும் ஆடு வார்கள். ஆனால், இது யார் வீடு என்று தெரியுமா? மானம் மரியாதையோடு வாழும் தையல்நாயகியின் வீடு. தைய தக்கா என்று குதிக்கும் ஆட்டக்காரி வாழும் இடம் அல்ல!''

தையல்நாயகி மூச்சு வாங்கப் பேச்சை நிறுத்தவும், அன்றுவரை இல்லாத அதிசயமாக, நிரஞ்சனியுடைய தந்தை, தாயின் பேச்சில் குறுக்கிட்டுப் ''போதும், அம்மா'' என்று பெற்றவளை அடக்க முயன்றார்.

குருபரன் சும்மாவே இருந்திருக்கலாம். விளைந்த பலன், தாயார் இன்னமும் அதிகமாகக் கத்தியதுதான்.

''என்னது? என் பேச்சுப் போதுமா? எனக்கு புத்தி சொல்கிற அளவுக்கு நீ வளர்ந்து விட்டாயா? கிறுக்கன், கிறுக்கன்! இந்த அம்மா சொல்வது, இப்போது புரியா துடா! நாளைக்கு, இந்தப் பொட்டைக் கழுதையால்

கேவலப்பட்டுத் தலை குனிந்து நிற்பாய், பார்! அப்போதுதான் புரியும்! யார் யார் புத்தி இவளுக்கு வரும் என்று உனக்கு என்ன தெரியும்! நீயும் பட வேண்டாம் என்று யோசித்து ஒன்று சொன்னால், மடையனைப் போலக் குறுக்கிடுகிறாயே, முட்டாள்!'' என்று அவருக்கு நன்றாகவே அர்ச்சனை நடந்தது.

உள்ளூர அருவருத்தபடி, நிரஞ்சனி விலகிப் போனாள்.

பொட்டைக் கழுதையாம், அவளால் கேவலப்படுவார்களாம்!

சொல்லட்டும், என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். இந்த நியாயமற்ற பேச்சுக்களுக்கு அவள் மதிப்புக் கொடுக்கப் போவதே கிடையாது.

இந்தக் கடைத் திறப்பு, அவளது தொழிலில் ஒரு முன்னேற்றம்.

பாட்டி என்ன சொன்னாலும், அவள் இந்த வாய்ப்பை விட்டு விடப் போவது, கிடையவே கிடையாது.

கை நிறைய பணத்தை எடுத்துக் காட்டினால், பாட்டியின் வாய் மூடிவிடும் என்பதில் அவளுக்கு உறுதி இருந்தது.

முதல் முதலாக அவளுடைய தோழிக்காகப் படம் எடுத்தபோதே, பாட்டி வார்த்தைகளால் விளாசவில்லை?

வருமானத்தைப் பார்த்ததும், அதைப் போன்ற வேலைகளைப் பாட்டி ஒருவாறு ஒத்துக் கொண்டது போலவே, பணம் வரத் தொடங்கியதும், இதையும் ஒத்துக் கொள்வார்கள்.

எதற்கும், ஏதாவது தடை நேரத்தான் செய்யும்.

பாட்டியின் பேச்சும் அப்படிப்பட்ட தடையோடு சேர்ந்ததுதான். என்னதான் கூர் அம்புகளாகத் தைத் தாலும், பொருட்படுத்தக் கூடாது. எல்லாம் கொஞ்ச நாளில் தானாகவே அடங்கிப் போகும்!

எப்படியும் கடைத் திறப்புக்குச் சென்றாக வேண்டும். அங்கே ஆவலாகக் காத்திருக்கும் தனஞ்சயனைச் சந்தித்தே ஆக வேண்டும்! அவனை ஏமாற்றமடையச் செய்வது, அவளால் ஒரு போதும் முடியாது. இது நிச் சயம்!

உறுதியோடு நிரஞ்சனி கடைத்திறப்புப் பணியை ஏற்றுச் செய்ததற்கு ஒரு பெரிய பரிசும் கிடைத்தது!

அவளைக் காதலிப்பதாக, அவளிடமே தனஞ்சயன் தெள்ளத் தெளிவாகக் கூறினான்.

அவளது மனமும் அதையே எதிரொலிக்க, இதற்கு மேல் என்ன வேண்டும் என்று உள்ளம் பூரித்துப் போனாள், அவள்!

# 5

கொஞ்ச நாட்களாக, வீட்டில் ஏதோ விசித்திரம் நிகழ்வது போல, நிரஞ்சனிக்குத் தோன்றியது.

என்னவோ, அவளிடம் ஒரே உருக்கம்! அவள் எள் என்றால், எல்லோரும் எண்ணெயாக நின்றார்கள்.

அதாவது, பாட்டி தவிர மற்றவர்கள்!

தம்பி, சித்தி, அப்பா எல்லோருமே, அவளிடம் அன்பைச் சொரிந்தார்கள்!

எப்போதுமே பெருமளவு அப்படித்தான். நியாய மற்றுப் பாட்டி கரித்துக் கொட்டுவதாலோ என்னவோ, மற்ற மூவரும் அவளிடம் அன்பாகத்தான் இருப்பார்கள்.

ஆனால் தம்பியாக சிவா அடிக்கடிப் போட்டிக்கு வரத்தான் செய்வான்.

காலையில் பத்திரிகையில் விளையாட்டுச் செய்திகள் பகுதியை, அவளது கையிலிருந்தே பறித்துக் கொண்டு போகிறவன், இப்போது அவளுக்கு முன்பாக அவனே வந்து படித்துக் கொண்டிருந்தாலும் ''இந்தாக்கா'' என்று கொடுத்துவிட்டு, அவள் படித்து முடிக்கும் வரை, ''சீக்கிரம் படியேன்'' என்று அவசரப்படுத்தக் கூட இல்லாமல், பொறுமையாகக் காத்திருக்கிறான்.

உணவிலும் அப்படித்தான் 'சிக்கன்' சமைத்தால் சில குறிப்பிட்ட துண்டுகள் தான் இருவருக்குமே பிடிக்கும். முதலில் உணவருந்த வருகிறவர், அவற்றைப் பொறுக்கிக் கொள்ள கட்டாயம் தகராறு நடக்கும். இது உங்கள் பாடு என்று கற்பகம் ஒதுங்கிக் கொள்ள, பாட்டியைப் பார்த்தால், அவள் தட்டிலிருந்தே சிவநந்தன் பிடுங்குவான்.

இப்போது சில தினங்களாக, அதையும் காணோம். நேர் உல்டாவாக, ''உனக்குப் பிடிக்குமேக்கா'' என்று தம்பியே அவள் தட்டில் எடுத்து வைக்கிறான்!

அதைவிட அதிசயம், சித்தியும் அவளுக்கு ஒதுக்கி வைத்துக் கொடுப்பதுதான். சித்தி அப்படி வேறுபாடு காட்டுகிறவள் அல்ல. போட்டியா? சண்டையா?

நீங்களே தீர்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று ஒதுங்கி விடுவதுதான் வழக்கம். கை நீட்டினால் மட்டுமே திட்டு விழும்.

இன்னும் யோசித்துப் பார்த்தால் இப்போதெல்லாம் சமையல் மெனுவே, கிட்டத்தட்ட நிரஞ்சனிக்குப் பிடித்த அயிட்டங்கள்தான்!

தற்செயலோ என்று முதல் நாலு நாட்கள் சந்தோஷப் பட்டவளுக்கு, இப்போது என்னவோ என்று சந்தேகம் வந்து, எதனால் இப்படி என்று சிறு கவலையும் உண்டாயிற்று.

சந்தேகத்தை இன்னமும் உறுதிப் படுத்துகிற விதமாக, சித்தி வெளியே போகிற போதெல்லாம், அவளுக்கு என்று தனியாக ஏதாவது கூட வருகிறது.

அதிலும், அன்று தந்தை வேறு அவளுக்குப் பிடித்த ரசமலாயை வாங்கி வந்து கையில் தரவும், நிரஞ்சனிக்கு நிச்சயமே ஆகிவிட்டது.

சர்வ நிச்சயமாக ஏதோ நடக்கிறது! என்னவாக இருக்கும்?

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை... பாட்டிக்கு மட்டும் ஆண்டுதோறும் முழு வைத்தியப் பரிசோதனை செய்து கொள்வது வீட்டில் வழக்கம்.

சமீபத்தில் எடுத்த பரிசோதனை ரிப்போர்ட்டில், தப்புத் தவறாக எதுவும்... ஊகூம் அப்படி எதுவும் இருந்ததாக, அவளுக்கு நினைவில்லை, பின்னே?

பலத்த யோசனையின் பின் தனக்குத் திருமணம் என்று ஏதாவதுமோ என்று தோன்றவும், அதிர்ந்து போய் எழுந்து அமர்ந்தாள் அவள்.

பெண்ணுக்கு இருபத்தியிரண்டு வயது என்றால், திருமணம் பேசுவதும் செய்வதும் இயல்பான நடப்பு தான். ஆனால், அவளுக்கு இப்போது அது சரிவராதே!

இப்போதுதான், தனஞ்சயன் காதலிப்பதாகச் சொல்லி யிருக்கிறான். திருமணம் பற்றி, இன்னமும் அவர்கள் பேசவே இல்லை.

தன் உழைப்பினால் முன்னேறியவன் என்று தெரி யுமே தவிர, அவனுடைய குடும்ப நிலைமை, பொருளா தார வசதி எல்லாம், உடனே திருமணம் செய்யக் கூடிய நிலையில் இருக்கிறதோ, என்னவோ?

மனம் ஒன்று பட்டாலும் மற்றதும் ஒத்து வர வேண் டும் அல்லவா?

எல்லாம் சரியாக இருந்தது, மணம் பேசி வந்தாலே, பாட்டி சம்மதிப்பது சந்தேகம்!

அவளேனும் தொழிலில் நன்கு காலூன்றி இருந்தால், திருமணம் என்றால், அவனோடுதான் என்று துணிந்து பேசலாம். இன்றைய நிலையில், அதுவும் இல்லையே! அதற்கு இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டுமோ?

அத்தோடு இன்னும் ஒரு குழப்பம்!

நிரஞ்சனி படம் எடுக்கும்போது, அவரவர் மனநிலை வெளிப்படும் விதமாகப் படங்கள் இருக்கும். அதன்படி பார்த்தால், திருமணத்துக்கான களிப்புக் கலந்த கவலை, வீட்டினர் யார் முகத்திலும் இல்லையே!

இன்னும் ஏதேதோ வேண்டாத கற்பனைகள் மனதைக் கலக்கவும், நல்லதோ, கெட்டதோ, விஷயத்தை அறிந்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு, நிரஞ்சனி வந்தாள்.

புதியதான காதல் விவரம் தவிர, அக்காவுக்கும் தம் பிக்கும் இடையே, ஒளிவு மறைவு கிடையாது. எனவே,

தம்பியிடம் நூல் விட்டுப் பார்க்க, நிரஞ்சனி தீர்மானித்தாள்.

அன்று அவளுக்குச் சில அலங்காரச் சாதனங்கள் வாங்குவதற்காக, சிவநந்தன் அவளை அழைத்துப் போய்க் கொண்டிருந்தான்.

சும்மா என்றால் ''இவள் முகத்தில் பெயின்ட் அடிக்க, நான் கார் ஓட்டிக் கூட்டிப் போக வேண்டுமா? முடியாது!'' என்று மறுத்து விடக் கூடியவன்தான். ஆனால் இப்போதுதான், அவளுக்காக விழுந்து விழுந்து வேலை செய்கிறானே!

பாதி தூரம் செல்லும்வரை, சாதாரணமாக எதையோ பேசிக் கொண்டிருந்தவள், ''எனக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா, சிவா?'' என்று திடுமெனக் கேட்டாள்.

அவன் திகைப்பதை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டே ''அதாவது, ரொம்ப!'' என்றாள்.

''ஏய் என்னடீ செமி? உனக்கு உடம்பு சரியில்லை என்றால், அது உனக்குத்தானே, தெரியும்? அதைப் போய் என்னிடம் கேட்கிறாயே! கொஞ்சம் மூளையோடு தானே, பேசு'' என்றான் தம்பி.

''அப்படியில்லைடா, வெளியே தெரியாமல் அழிக்கிற வியாதிகளும் உண்டு. அது போல எதுவும் வந்து, குணப்படுத்த முடியாத அளவுக்கு, முற்றிப்போய் விட்டதோ என்று கேட்கிறேன்'' என்று பொறுமையோடு விளக்கினாள் அவள்.

''ஏய் நிரஞ்ச், எதற்கப்பா, என்னை போட்டு இப்படி அறுக்கிறாய்? என்ன கேட்பதானாலும், கொஞ்சம் தெளிவாகவே கேட்டுவிடேன்!'' என்றான் தம்பி, சலிப்பாக.

''இதோ சொல்லி விடுகிறேன், நந்து. இந்த... சாகப் போகிறவர்களைச் சந்தோஷமாக சாக விடுங்கள் என் பார்களே, அதைப்போல, நீ, அம்மா, அப்பா எல்லோரும் என்மேல் பாசமழையைக் கொட்டுகிறீர்களே, ஏன் சொல்லு? இந்த மாதிரி ஏதாவது இருக்கிறதோ என்று ஒரு சந்தேகம். அதற்காகக் கேட்டேன்.''

சிறு தயக்கத்தின்பின் ''உன் உடம்புக்கெல்லாம், ஒரு பிரச்சினையும் இல்லை, நீரு. ஆனால்...'' என்று வாக் கியத்தை முடிக்காமலே நிறுத்தினான் அவன்.

ஏதோ இருக்கிறது!

''ஆனால் என்ன, நந்து?'' என்று கெஞ்சலாகக் கேட் டாள் தங்கை.

இந்த 'நந்து'வில் தம்பி எப்போதுமே சற்று இளகுவது வழக்கம். சண்டை சமயத்தில் கூட, 'என்னடா நந்து...' என்றால் பெரும்பாலும் விட்டுக் கொடுத்து விடுவான். இப்போதும், விஷயம் அறியும் வேகம் அவளுக்கு.

புருவங்களில் முடிச்சோடு, சற்று நேரம் சிவநந்தன் பேசாமலே காரை ஓட்டினான்.

பிறகு, காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்திவிட்டு, ''அக்கா விஷயம் என்ன என்று, எனக்கு முழு விவரமும் தெரி யாது. ஆனால் உன் திருமணம் பற்றி, ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது என்கிற வரை, எனக்குத் தெரியும். அதனால் சில நல்ல இடங்கள் தடைப்பட்டிருக்கிறதாம்! ஆனால் இதைப் பற்றி இந்த அளவுக்கு நான் உன்னிடம் சொன் னேன் என்று தெரிந்தாலே, அப்பாவும் அம்மாவும் என் தோலை உரித்து விடுவார்கள். அதனால், ப்ளீஸ்க்கா, என் தோலை நல்லபடியாக என் உடம்பிலேயே இருக்க

விடுக்கா!'' என்று பேச்சை விளையாட்டாக மாற்ற முயன்றான்.

நிரஞ்சனி வேகமாக யோசித்தாள்.

அவளது திருமணத்தில் பிரச்சினை இருப்பது, அவளைப் பொறுத்த வரையில் இப்போதைக்கு நிம்மதி தான். மூன்று பேர் ஒதுக்கினாலும், முப்பது பேர் ஒதுக்கினாலும் அதைப் பற்றி அவளுக்கு அக்கறையில்லை.

அவளுக்கு வேண்டியது, தனஞ்சயன் மட்டும்தான்!

அவளைப் பொறுத்த வரையில், அது உறுதியே என்றாலும், தனஞ்சயன் இன்னமும் திருமணப் பேச்சு எடுக்கிற அளவுக்கு வரவில்லை.

அத்தோடு, தொடங்கியிருக்கும் தொழிலில் அவளும் ஒரு நிலைக்கு வரவேண்டும். இதற்கெல்லாம் கொஞ்சமாவது கால அவகாசம் தேவை.

அதுவரை, ஏதோ ஒரு பிரச்சினையில் அவளது திருமணம் தள்ளிப் போவது பற்றி அவளுக்கு நிம்மதி தான். மகிழ்ச்சி கூடத்தான்.

ஆனால், அவளது இந்த விருப்பங்கள் இரண்டுமே நிறைவேறிய பிறகும், இதே பிரச்சினை தொடர்ந்ததானால்?

தனஞ்சயனோடான திருமணத்தையும், அது பாதிக்காது என்று எந்தவித நிச்சயமும் இல்லையே! அவனை இழப்பது, அவளால் முடியாது.

அதனால் விஷயம் என்னவென்றாலும், அவள் அதை அறிந்தே ஆக வேண்டும்.

ஆனால் இந்தத் தம்பியை இதற்கு மேல் தொல்லை பண்ணக்கூடாது!

தம்பியின் தோளைத் தட்டி "ப்ராமிஸ் பையா, உன் தோல் என்னால் நிச்சயமாக ஒரு போதும் பழுது படாது. ஆனால் வேண்டாத எதையாவது பண்ணி, நீயாகக் கெடுத்துக் கொண்டால், அதற்கு நான் பொறுப் பல்ல..ப்பா!" என்று இலகுவாகப் பேசிப் புன்னகை செய்தாள் அவள்.

பதிலுக்கு முறுவலித்தாலும் ஐயத்துடன் நோக்கி, "மெய்யாகவே, இதை அப்படியே விட்டுவிடப் போகி றாயா, அக்கா?" என்று சின்னவன் வினவினான்.

இவனிடம் பொய் சொல்வது கடினம், மழுப்பினால், நம்பவும் மாட்டான்.

லேசாகத் தலையசைத்து "விடுவது கடினம். ஆனால் நான் விசாரிக்கும் தினுசில், உன் தோல் பத்திரமாக இருக்கும்" என்று உறுதி கூறினாள் சகோதரி.

"தெரிந்து கொள்ளாமல் இருப்பதே, உன் நிம்மதிக்கு நல்லது என்று நான் சொன்னால், சொன்னால் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க மாட்டாயாக்கா?"

"மாட்டேன்" என்று அழுத்தமாகச் சொல்லித் தலை யசைத்தாள் தமக்கை "என்ன ஏது என்று ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் முட்டாளின் சொர்க்கத்தில் வாழ் வதைக் காட்டிலும், அது எவ்வளவு வருத்தம் தருவது என்றாலும், தெரிந்து கொண்டு கஷ்டப்படுவது மேல் என்பது, என் திடமான நம்பிக்கை, சிவா. மேலும், பிரச் சினை தீர வழி கூடக் கிடைக்கலாமில்லையா? ஆனால் நிச்சயமாக, உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன், கவலைப்படாதே!" என்றாள் நிரஞ்சனி.

"அது எனக்கும் தெரியும். ஆனால்... ஓ.கே. நீ தொடங்கினால் லேசில் விட மாட்டாய். உன் இஷ்டம்.

என்றாலும் சற்று நிதானித்து, யோசித்துச் செய். பாட்டியையும் மறந்து விடாதே'' என்று எச்சரித்தவன், ஒரு பெருமூச்சுடன் தோளைக் குலுக்கிவிட்டுக் காரை எடுத்தான்.

இவ்வளவு தடுப்பதற்கு, அவள் வாழ்வில் அப்படி என்ன ரகசியம் இருக்கக் கூடும்?

ஒருவேளை, அவளது தலையை மட்டும் ஒட்டி, அவளை வைத்து ஏதாவது, அருவருப்பான வீடியோ, செல்லில் சுற்றுகிறதா? அதனால், திருமணம் செய்வது பிரச்சினை ஆகிறதா?

உடம்பு முகம் எல்லாம் ஒரு தரம் சூடேறிச் சிவந்தது அவளுக்கு.

அப்படி எதுவும் இருந்தால், தனஞ்சயனும்தான், அதை எப்படி சகிப்பான்?

நெஞ்சுக்குள் சிலீரிட, இதை, அடி முதல் முழுமையாக அறிந்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு, நிரஞ்சனி வந்தாள்.

ஒருவேளை, அப்படித்தான் என்றால், அது போன்ற குற்றங்களைக் கண்டு பிடிக்க, இப்போது வழி வகைகள் இருக்கின்றன. குற்றவாளியைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தியே ஆக வேண்டும்.

அப்படிச் செய்யும்போது, குற்றவாளி தண்டனை பெறுவதோடு, அவள் மேல் சுமத்தப்பட்ட களங்கமும் துடைக்கப்பட்டு விடும் அல்லவா?

ஆனால், சித்திக்கும் அப்பாவுக்கும், இது தெரியாமலா இருக்கும்? ஒருவேளை, அந்த வழியில், அவர்கள் யோசித்துப் பார்க்கவில்லையோ?

அல்லது இது வேறு ஏதாவதுமா?

இதே யோசனையாக இருந்தது, அவளது முகத்தில் தெரிந்ததோ, என்னவோ, தனஞ்சயன், ஏதேனும் பிரச் சினையா என்று அவளிடம் விசாரித்தான்.

பதில் தர அவள் சற்றுத் தயங்கவும் ''என்னடாம்மா தயக்கம்? நாம் இருவரும் மனதால் ஒன்று என்று ஆகி விட்ட பிறகு, நீ தனியாகச் சஞ்சலப்பட்டால், என்னால் தாங்க முடியுமா?'' என்று அவன் கேட்கவும் அவளுக்கு உருகிப் போயிற்று.

''அதில்லை தனா. பிரச்சினை என்ன என்று எனக்கே தெரியாது. வீட்டில் என்னவோ நடக்கிறது என்கிற சந் தேகம்தான். என்ன என்று, முதலில் தெரியட்டும். என் னால் சமாளிக்க முடியாவிட்டால், உங்களிடம் வருகிறேன். உங்களிடம்தானே வருவேன்?'' என்று அவள் சொன்ன விதத்தில், அவனுக்கும் உருகிப் போயிற்று.

சீக்கிரமே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அவன் சொல்ல, இன்னும் சில மாதங்களில், அவளது தொழில் ஓரளவேனும் நிலைப் பெற்று விட்டால், அப்புறம், 'சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது' போலப் பாட்டியிடம் அவளே, தன் சொந்தத் திருமணம் பற்றிப் பேசுவாள். அதுவரை...

''கா...த்திருக்க வேண்டுமாக்கும்? ஹாங்...'' என்று திரைப்பட பாணியில் அவன் வருத்தம் காட்ட, இரு வருக்குமே சிரிப்புப் பொங்கியது.

தம்பியைக் காட்டிக் கொடுக்காமல், பாட்டிக்கும் தெரி யாமல், பெற்றோரிடம் தன் பிரச்சினை பற்றி எப்படிப்

பேசுவது என்று நிரஞ்சனி தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது, அதற்கான வாய்ப்பு அவளுக்குத் தானாகவே கிட்டியது.

பொதுவாகப் பாட்டி 'யதா ஸ்தானத்தில்' உட்கார்ந்து விட்டால், அப்புறம் அந்த வீட்டில், அவள் அறியாமல் பெரிதாக எதையும் பேச முடியாது.

மூத்த தலைமுறை படுக்கப் போன பிறகு, சமையல் காரம்மாவிடம் வேலை முடித்துப் படுக்கச் சொல்லி விட்டு, சில நாட்களில் டி.வி.யில் எதையாவது பார்த்துக் கொண்டு கற்பகம் உட்கார்ந்திருப்பது உண்டு.

அந்த மாதிரித் தருணத்துக்காகப் பெண் கவனத்துடன் காத்திருக்கையில், ஒரு நாள், தாயும் தந்தையும் சத்த மின்றி மொட்டை மாடிக்குப் படியேறுவதை, நிரஞ்சனி கவனித்தாள்.

பக்கத்து அறை தாயார் தையல்நாயகியுடையது என்பதால், சில பல விஷயங்களைப் பற்றி பேசுவது என்றால், பெரியவள் தூங்கிய பின், கற்பகமும் குரு பரனும் மொட்டை மாடிக்குச் சென்று விடுவது வழக்கம். இது பிள்ளைகளும் அறிந்ததே.

இப்போது போகிறார்கள் என்றால், பேசப் போவது, அவளது பிரச்சினையாகத்தானே இருக்கும்.

எழுந்து கதவைச் சாத்திவிட்டு, நிரஞ்சனியும் பெற் றோரை, மெல்லப் பின் தொடர்ந்தாள்.

தருணம் கிடைத்து விட்டது. இனி, சிவநந்தன் பெயரே இல்லாமல், விஷயமறியும் வாய்ப்பாக இதை மாற்றிக் கொள்வது, அவள் பொறுப்பு.

சத்தமின்றிக் கவனிக்க... ஒட்டுக் கேட்கத் தொடங்கினாள் அவள்.

''..... ஒரு வாரம் ஆகியும் ஒரு தகவலும் வரவில்லையேப்பா!'' என்று கவலையுடன் கேட்டாள் கற்பகம்.

''இம். இது, மூன்றாவது நல்ல இடம். அழகு பணம், படிப்பு, அந்தஸ்து, மேலாக நல்ல குணம் எல்லாம் இருந்தும், விதி எப்படி சுழற்றி அடிக்கிறது, பார்! அம்மா சொல்வது போல, மாதா பிதா மக்களுக்கு என்பது...''

''ஷ்! நீங்களும் இப்படிப் பேசாதீர்கள், குரு. நீரு மேல் குற்றம் இருந்தால் சொல்லட்டும். மற்றபடி, இப்படிப் பேசுவது, சுத்த அநியாயம்! இன்னொன்று எப்படியாவது நீருவுக்கு விரைவிலேயே திருமணத்தை செய்து, இங்கிருந்து அகற்றிவிட வேண்டும், குரு. இல்லாவிட்டால், உங்கள் அம்மா நீருவை, நிரந்தர அழுமூஞ்சி ஆக்கி விடுவார்கள். இப்போதே, அவள் கண்களில் அவ்வப்போது ஒளி காணாமல் போய் விடுகிறது! யாரோ செய்ததற்கு, இவளைப் போய்க் கரித்துக் கொட்டுவதிலேயே வாடிப் போகிறாள். சில சமயம் காரணம் புரியாமலே வலியை அடக்கிக் கொண்டு அவள் நிற்கும்போது, எவ்வளவு வேதனையாக இருக்கிறது, தெரியுமா? அதற்கு ஒரு முடிவு வரும் என்று பார்த்தால், உள்ளதுமல்லவா, கெட்டுவிடும் போலத் தெரிகிறது! இன்று அத்தை உங்களிடம் கத்தியது போல அவளிடமும் கத்தினால், இந்த விஷயம் நீருவுக்குத் தெரியாமல் போகாது. நிச்சயமாக, அவள் தாங்கவே மாட்டாள்ப்பா!'' என்று வருத்தத்துடன் கூறினாள் சிறிய தாயார்.

பேச்சினிடையே குறுக்கிடுவதற்கு, இது நல்ல தருணம் என்று தோன்றிவிட, கடைசி பல படிகளை ஏறி வந்து, ''எந்த விஷயம், சித்தி? எந்த விஷயம் தெரிந்தால், என்னால் தாங்கவே முடியாது? முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள். அதைத் தாங்குகிறேனா இல்லையா என்று, அப்புறமாகப் பார்க்கலாம். என்ன விஷயம் அது?'' என்று வேடிக்கைப் போலவே கேள்விகளை அடுக்கி, விவரம் அறிய முயன்றாள் நிரஞ்சனி.

தாயும் தந்தையும், திகைத்து அதிர்வதைக் காண, அவளுக்கு வருத்தம்தான். ஆனால், அதற்காக உரிமையை விட்டுக் கொடுக்க முடியுமா?

அவளைப் பற்றி ஏதோ ஒன்று என்றால், அதை, அவள் அறிந்து தானே ஆக வேண்டும்? அதை விட்டு, இவர்களை வருந்த விட்டு விட்டுச் சும்மா இருப்பது தான், இயலுமா?

திகைத்திருந்த பெற்றோர் முகங்களைப் பார்த்த நிரஞ்சனிக்குப் பாவம் போலத்தான் இருந்தது.

ஆனால், இப்போது பாவம் பார்த்தால், காரியம் நடக்காது!

''சொல்லுங்கள் சித்தி, என் வாழ்வில் இருக்கும் அப்படித் தாங்க முடியாத பொல்லாத விஷயம் என்ன என்று சொல்லுங்கள்?'' என்று மீண்டும் கேட்டாள் பெண்.

முதலில் சமாளித்துக் கொண்டவள் கற்பகம்தான். கையை நீட்டி, மகள் கையைப் பற்றி, கணவருக்கும் தனக்கும் இடையே அவளை உட்கார வைத்தாள்.

''என்றைக்குமே, இந்த விவரம் உனக்குத் தெரியாமலே இருந்துவிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

கடவுள் சித்தம் வேறாக இருக்கிறது. இதைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்கள், உன் தந்தையும் பாட்டியும்தான். இருவரில், அப்பா மூலமாக நீ அறிவது நல்லது என்பது என் கருத்து...'' என்றவள் தலை குனிந்து அமர்ந்திருந்த குருபரனை ஒரு தரம் பார்த்துவிட்டு ''ஆனால்... தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது என்று, விட்டுவிட முடியாதாடா?'' என்று பரிவான குரலில் கேட்டாள்.

தம்பி ஏற்கனவே கேட்டதுதான். எனவே, அவளிடம் பதிலும் தயாராக இருந்தது.

''கண்ணை மூடிக் கொண்டு கும்மிருட்டில் துழாவுவதை விட, எவ்வளவு கொடிய சூழல் என்றாலும், அதைத் தெரிந்து கொண்டு, அதன் பின் அடியெடுத்து வைப்பது நல்லது இல்லையா, சித்தி?''

நிரஞ்சனியின் கையை அழுத்திப் பிடித்த வண்ணம், சில வினாடி நேரம், கற்பகம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

பிறகு மெல்ல எழுந்து, ''நீ வேதனைப்பட நேருமே என்றுதான் தயக்கமாக இருந்தது. நீதான் பிடிவாதம் பிடிக்கிறாயே! ஒருவேளை, உன் பாட்டியைப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்போ, என்னவோ? அப்பாவிடமே எல்லாம் கேட்டுக்கொள்'' என்றவள் கணவரைப் பார்த்து இன்னொரு தடவை ''இந்தப் பேச்சு தேவையிராதபடி, எல்லாமே சொல்லி முடித்து விடுங்கள்'' என்றுவிட்டு, அங்கிருந்து விலகிச் சென்று, படியிறங்கிப் போய்விட்டாள்.

சில வினாடிகள் பலவாகி, நிமிஷங்களாக நீண்ட போதும், குருபரன் பேச்சைத் தொடங்காமல் மௌனமாகவே இருந்தார்.

எப்படியும், சொல்லித்தானே தீர வேண்டும்? அவளும் அறிந்தே ஆக வேண்டும்!

தந்தையின் கையைத் தொட்டு ''என்னப்பா ஆயிற்று?'' என்று மெல்லக் கேட்டாள்.

திடுக்குற்றவர் போல, அவளைத் திரும்பிப் பார்த்தார் குருபரன்.

''நீ சாயலில் அம்மா மாதிரி என்றாலும், சத்தியமாகச் சொல்லுகிறேன், நீ குணத்தில் கொஞ்சம் கூட அவளைப் போல இல்லை, நீரும்மா'' என்றார் அவர், தழுதழுத்த குரலில்.

திகைப்புடன் நோக்கி ''அப்பா!'' என்றாள் மகள்.

''ஆமாம்மா'' என்றார் மகளின் தலையை வருடி ''நீ சேற்றில் மலர்ந்த செந்தாமரைடா, கண்ணு!'' என்றார் பெற்றவர்.

# 6



'**சை**பர் க்ரைம்' அது இது என்று நிரஞ்சனி என்னென்னவோ எண்ணிக் கலங்கியிருக்க, இங்கே வேறொரு பூகம்பத்தில், அவளது காலின் கீழ் பூமி நழுவியது.

சேற்றில் முளைத்த செந்தாமரை என்றால், அவளுடைய தாய் மோசமானவள் என்றுதானே, பொருள்?

அந்த வயிற்றில் பிறந்தவள் என்பதுதான் பாட்டியின் வன்மமா?

பாட்டியைப் புரிந்து கொள்ள வாய்ப்பு என்று சித்தி சொன்னது, அதை உறுதிப்படுத்தியது.

சிற்றன்னையின் பாசம் பழகிப் போய், பெற்ற தாயைப் பற்றிய எண்ணம் தானாக நிரஞ்சனிக்கு வந்ததில்லை. ஆனால் ஏதாவது விசேஷம், பிறந்த நாட்களின் போது கூட, 'அம்மாவைக் கும்பிட்டுக் கொள்' என்று சொல்லி, தாயின் நினைவை யாரும் ஏன் எழுப்பியதில்லை என்பதும், அவளுக்கு இப்போது புரிந்தது.

ஆனால் அப்பாவைப் போல ஓர் ஆண் மகன், வசதி யான வாழ்க்கை, பெற்ற மகள்... இவையெல்லாவற் றையும் ஒன்றுமில்லை என்று ஒதுக்கி உதறிவிட்டு, அந்த அம்மா எங்கே போயிருப்பாள்? என்ன செய்திருப்பாள்?

ஒருவேளை, அந்த அன்னை இன்னமும் உயிரோடு தான் இருக்கிறாளோ? இறந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்தாளே!

''என்ன நடந்தது என்று சொல்லுங்கப்பா'' என்றாள் கம்மிய குரலில்.

அந்தக் குரல் வேதனையூட்ட, மகளின் தலையை வருடிக் கொடுத்தார் தந்தை.

''உன் மேலே ஒரு தப்பும் இல்லைடா, கண்ணு. அத னாலே நீ எதையாவது எண்ணி, மனதைக் கஷ்டப்படுத் திக் கொள்ளக் கூடாது. அப்போது நீ ஒரு வயதுக் குழந்தை, உன்னைப் போய், எந்த ஒரு பாவமும் சேர முடியுமா? வாய்ப்பே கிடையாதே!'' என்று அவளைத் தேற்றுவதிலேயே இருந்தார் தந்தை.

ஒருகணம் தந்தையின் தோளில் சாய்ந்தபோதும், நிரஞ்சனி உடனே நிமிர்ந்தாள்.

''எனக்கு என்ன வந்ததுப்பா? திடமாகத்தான் இருக் கிறேன். அப்போது என்ன நடந்தது என்று நீங்கள், எனக்கு

முழுதாகச் சொல்லுங்கள்'' என்றாள் மகள், தெளிவாகவே.

சற்றும் மனமற்ற போதும், மகளின் விருப்பத்துக்குப் பணிந்து, குருபரன், அவரது பழைய கதையைச் சொல்லத் தொடங்கினார்.

அப்போது குருபரனுக்கு இருபத்தி இரண்டே வயது தான். கடைசி செமஸ்டரும் முடிந்து, தொழிலில் தாயாருக்கு உதவியாக, அவள் ஏவியதைச் செய்து கொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட இப்போது போலத்தான். ஆனால் அப்போது அவருக்கு இன்னும் கொஞ்சம் உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

கையில் ஒரு கார் கூடத் தரப்பட்டிருந்தது. தாராளமாகச் செலவு செய்ய பணமும். அவர் கட்டியிருந்த வாட்ச், அப்போதே பத்தாயிரம் ரூபாய் விலை, இன்றைக்கு, அதன் விலை லட்சத்துக்கும் மேலே.

இதையெல்லாம் பார்த்துவிட்டுப் பெரிய பணக்காரக் குடும்பங்களில் இருந்து மணம் பேசி வந்ததைப் பார்க்கும்போதுதான், தன் நடை, உடை, பாவனைக்காக, இந்தச் செலவுகளுக்குத் தாயார் திட்டமிட்டே செய்வதைக் குருபரன் புரிந்து கொண்டார்.

அந்தப் பெண்களில் மகன் யாரை மணப்பது, அதிக ஆதாயமாக இருக்கும் என்று, தையல்நாயகி அலசி ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

ஆனால், அதற்காகக் குருபரன் கோபம், வருத்தம் எதுவும் கொள்ளவுமில்லை. தனக்கு இவ்வளவு மதிப்பா என்று பெருமைதான். வேண்டும் என்றே, இன்னும்

கொஞ்சம் ஸ்டைலாக உடையணிந்து கொண்டு, காரில் ஊரைச் சுற்றி வருவார்.

எல்லாம், அவர் காதலில் விழும் வரைதான்!

''அது, காதல் இல்லை, வெறும் மோக மயக்கம் என்று அம்மா, உன் பாட்டி, என்னிடம் நேரடியாகவே சொன் னார்கள். அப்படி என்றால், சரசா நடந்து கொண்ட முறைக்கு, இன்றைக்கு நான் அவளை அடியோடு மறப்பது, இன்னமும் என்னால் முடியவில்லையே!'' என்றபோது, அவரது குரலில் இருந்த வலி, நிரஞ் சனியைத் திகைக்க வைத்தது!

கண்டறியாத பெற்றவளைத் தந்தை இன்னும் மறக்க வில்லை என்கிற பெருமிதம், மகளுக்கு வரவில்லை.

அதைவிட, அன்பாக வளர்க்கும் சிறிய தாயின் உணர் வுகள் பெரிதாகத் தோன்ற ''என்னப்பா நீங்கள்? இப்படிப் பேசினால், சித்திக்கு எப்படி இருக்கும்?'' என்று சிறு கோபத்துடன் கேட்டாள்.

''இல்லையம்மா'' என்று தலையசைத்தார் தந்தை ''முதலில் ஒரு நாள் பேசியதுதான். அதுவும் கூட, உன்னை அன்பாக வளர்க்க வேண்டும் என்பது கேட்பதற்காகத் தான். அதன் பிறகு அவளும் கேட்பதில்லை, நானும் சொன்னதில்லை. ஜாடை மாடையாகப் பாட்டி ஏதாவது சொல்லும்போதும், காதில் விழாதது போலப் போய்விடு வாள். சொல்லப் போனால், பாட்டியின் குறிப்புப் பேச்சு களை வைத்து, என்னை உன் சித்தி எவ்வளவோ கூனிக் குறுக வைத்திருக்கலாம். என்னவோ, என் தப்பினால், நீ பட்டுப் போய்விடக் கூடாது என்று, கடவுளாகப் பார்த்து உனக்கு ஒரு நல்ல தாயைத் தந்து, அதன் மூலம்

எனக்கும் இன்னொரு வாய்ப்பையும் தந்திருக்கிறார். அதை நான் நழுவ விட்டுவிட மாட்டேன், செல்லம். சரி, இனி மறுபடியும் பழைய அந்தக் கதைக்கே போய் ஒரு வழியாக அதை முடித்து விடலாம்'' என்றுரைத்து, மறு படியும் தொடங்கினார்.

''சரசா மிகவும் சாதாரண நிலையில் உள்ள கீழ் மட்டத்துப் பெண். உறவு என்று யாரும் இல்லாமல், ஒரு கருணை இல்லத்தில் வளர்ந்து, ஒரு நாட்டியப் பள்ளியில், உதவியாளாக வேலை பார்த்துக் கொண்டிருந் தாள். ஆனால், காதலுக்கு மேல் மட்டம், கீழ் மட்டம் என்ன என்று தெரிகிறது? கீழே விழுந்து கிடந்த ஒரு பெரியவருக்கு உதவி செய்வதற்காக, ஏதேனும் ஒரு வாகனத்தை நிறுத்த முயன்று கொண்டிருந்தாள். யாரும் நிற்கவில்லை. நானும் போய்விடத்தான் நினைத்தேன். ஆனால், அவள் முகத்தைப் பார்த்த பிறகு, அது முடிய வில்லை. காரை நிறுத்தி, பெரியவரை ஏற்றி, அவளுக்கு உதவி செய்தேன். அதுதான் முதல் சந்திப்பு.

''மயக்கம் தெளிந்தவர், நன்றி சொல்லிவிட்டுத் தன் வழியே போய்விட்டார். அறியாத யாரோ ஒருவருக்காகத் தான், அவளும் உதவி கேட்டிருந்தாள். விஷயம் தெரிந்த போது, எவ்வளவு உயர்ந்த குணம் என்று நினைத்தேன். ஆனால், இப்போது யோசித்துப் பார்க்கும்போது, கூட்டுக் கள்வர்களின் நாடகமோ என்று தோன்றுகிறது நீரு!

''அவளது திட்டப்படியோ, இயல்பாகவோ, நான் காதலில் விழுந்தேன். சரசாவும் அப்படித்தான் சொன்னாள். தினமும் சந்தித்தோம். அவளை விட்டுப் பிரிந்து, வீட்டுக்குச் செல்லவே அரும்பாடு பட வேண்டியிருந்தது.

கழுத்தில் தாலியைக் கட்டி, அவளை வீட்டுக்குக் கூட்டிப் போய் விட மனது துடித்தது.

"ஆனால் அம்மா? உன் பாட்டியைப் பற்றி, உனக்கு நான் சொல்ல வேண்டியதே இல்லை. வாயைத் திறந்து, அவர்களிடம் என் காதலைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கும்போதே, என் கைகால்கள் தந்தியடித்தன. ஆனால் சந்தித்த பின், லேடீஸ் ஹாஸ்டலில் அவளைக் கூட்டிப் போய் விட்டுவிட்டு வரும்போது, பிரிய மாட் டாமல், நெஞ்சு தவித்தது.

"அம்மா, பெரிய இடங்களில் பெண் பேசிக் கொண் டிருப்பது, எனக்குத் தெரியும். அதிலும் அதிக பட்ச ஏலத்துக்கு முயற்சி செய்வதும் நான் அறிந்ததே. இந்த நிலையில் அவர்களிடம் என் காதலைப் பற்றிச் சொன் னால், என்ன ஆட்டம் ஆடுவார்கள் என்று நினைக்கவே பயமாக இருந்தது. ஆனால் சரசின் கெட்டிக்காரத்தனமோ அல்லது என்னுடைய அசட்டுத்தனமோ அவளைப் பிரிந்து வாழவே முடியாது என்கிற நிலையில் நான் இருந்தேன்.

"எந்த நிலையிலும், என் பாட்டியின் சம்மதம் கிடைக் காது என்பதோடு, அனாதையாக ஆசிரமத்தில் வளர்ந்து, பின்புலம் எதுவும் இல்லாத அப்பாவியான அவளை ஏதாவது செய்து விடுவார்களோ என்று பயம் வேறு... மெய்யாகவே, சரசா ரொம்பவும் அப்பாவி என்றுதான் அப்போது நான் நம்பினேன், நீருமா.

"அன்றிருந்த மனநிலையில், இந்தப் பிரச்சினைக்கு, நான் ஒரு குறுக்கு வழியைக் கண்டுபிடித்தேன்! திரு மணத்துக்கு அம்மாவிடம் சம்மதம் கேட்டால்தானே, பிரச்சினை? அதனால்..."

''அப்பா!'' என்றாள் நிரஞ்சனி அதிர்ச்சியுற்று! ''பா... பாட்டிக்குத் தெரியாமல் அ... அந்த அம்மாவைத் திரு மணமே செய்தீர்களா? இந்தத் துணிச்சலை, உங்களிடம் என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லையே!'' என்றாள் பிரமிப்புடன்.

''உன்... அவளை உன் அம்மா என்று சொல்லக் கூட என்னால் எனக்கும் வாய் வரவில்லைடா, தப்பாக எண்ணாதே.''

''என்னாலும் முடியாதுதான்ப்பா. எனக்கு அம்மா என்றால், அது சித்திதான்'' என்றாள் மகளும்.

மகளின் கையைப் பற்றி அழுத்திவிட்டுப் பெற்றவர் தொடர்ந்தார்.

''சரசா மிகவும் பயந்தாள்... அதாவது பயந்த மாதிரிக் காட்டி நடித்தாள் போல, வேண்டாம். என்னை மறந்து விடுங்கள் என்று கூடச் சொன்னாள். எவ்வளவு உத்தமி என்று அப்போது நினைத்தேன். ஆனால், தூண்டிலில் மீன் நன்றாக மாட்டிக்கொண்ட பிறகு, தப்பி ஓடிவிடு என்று வாய் வார்த்தையாகச் சொல்வதுபோல அது என்று எனக்குப் பிறகுதான் புரிந்தது.''

தொடர்ந்த சிறு மௌனத்தின் பின் ''அந்தம்மா பற்றிய பேச்சு எதற்கு, அப்பா. நீங்கள் நடந்ததை மட்டும் சொல்லுங்கள்'' என்றாள் மகள்.

பெருமூச்சு விட்டு ''மெய்தான், செல்லம். சரசா என்ன நினைத்தாள், என்ன செய்தாள் என்பது, இப்போது நமக்கு முக்கியம் இல்லைதான். ஆனால் அவளிடம் முழுதாக மயங்கிப் போயிருந்த நான், அவளைத் திரு மணமே செய்து கொண்டு மாலையும் கழுத்துமாக வீட் டுக்கு வந்தேன்.

''பாட்டியின் அதிர்ச்சி பற்றியோ, அவர்கள் அதை எப்படி வெளிப்படுத்தினார்கள் என்பது பற்றியோ, நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. நெருப்பு மழைதான் பொழிந்தது. ஆனால் என்ன காரணமோ, எங்களை வெளியே போகச் சொல்லவில்லை.

''ஒரே மகன் என்பதாலும் இருக்கலாம். அத்தோடு, நம் தொழிலை வளர்த்தது பாட்டியே தவிர, அதன் முதலீடு, தொடக்கம் எல்லாம் என் தாத்தாவும் அப்பாவும் செய்தது என்பதும் காரணமாக இருக்கலாம். வெளியே போய் நான் பங்கு கேட்டால், மறுக்க முடியாதல்லவா?

''பாசமோ, பணக்கணக்கோ? வீட்டிலேயே வசிக்க அனுமதித்தார்கள். மகன் என்று என்னை மன்னித்தாலும், சரசை அம்மா சற்றும் ஏற்கவில்லை. வெளி வேலைகளை எனக்கு அதிகம் கொடுத்துவிட்டு வீட்டிலிருந்து மருமகளை வேலைக்காரியாகத்தான் நடத்தினார்கள். கூடவே, சுடு சொற்களால் கொத்திப் பிடுங்கினார்கள். வேலையாட்களாகப் பார்த்து ஏதாவது உதவி செய்தாலும், அவர்களையும் விரட்டியடித்தார்கள்.

''ஆனால் சரசா பற்றி, இந்த ஒன்றைச் சொல்ல வேண்டும். மாமியார் செய்த கொடுமைகள் பற்றி, அவள் ஒரு வார்த்தைகூட என்னிடம் கூறியதில்லை. ஆனால் அம்மா சும்மா இருக்க மாட்டார்கள் என்று, நான்தான் அவ்வப்போது மறைந்திருந்து கவனித்துக் கண்டுபிடித்திருக்கிறேன். அநியாயமாகத் திட்டு வாங்கிய வேலையாட்களும், அம்மாவுக்குத் தெரியாமல் என்னிடம் வந்து புகார் கூறியதுண்டு. அது பற்றிக் கேட்டால் கூட, பாவம் உங்கள் திருமணம் பற்றி என்னென்ன கனவுகள் கண்டார்களோ? அனாதையான எனக்கு இந்த வீட்டில்

இடம் கொடுத்ததே பெரிது. விட்டு விடுங்கள் என்று தான் சொல்லுவாள்.

''ஆனால்... குளியலறை, டாய்லட் கழுவ, நம் வீட்டில் ஒருத்தி உண்டு. அவளை நிறுத்திவிட்டு, சரசாவைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அவள் வேலை போன ஆத்திரத்தில் என்னிடம் வந்து சொல்லி விட்டாள். எனக்கும் மனது பொங்கி விட்டது.

''வீட்டுக்கு வந்து பார்த்தால், சொன்ன வேலை செய்து விட்டு, சரசா வாந்தி எடுத்திருக்கிறாள். இந்த வேலை செய்ய அருவருக்கிற அளவுக்கு நீ என்ன மகாராணியா என்று அம்மா திட்டிக் கொண்டிருந்தார்கள்.

''கேட்டுக் கொண்டே உள்ளே வந்த என்னால் சகிக்க முடியவில்லை. அம்மாவையே எதிர்த்து விட்டேன். சரசா வேண்டாம் என்றுதான் சொன்னாள். கேட்டால், உங்கள் சம்மதம் கிடைக்காது என்று நான்தான் உங்களுக்குத் தெரியாமல், பிடிவாதமாக அவளை மணந்து அழைத்து வந்தேன். ஒத்துக் கொள்ள முடியவில்லை என்றால், நானும் சேர்ந்து வீட்டை விட்டுப் போய்விடுகிறோம் என்று விட்டேன்!''

மகள் விழி விரித்து ஆச்சரியமாகப் பார்க்கவும், ''ஆமாம்மா. நானேதான், உன் பாட்டியை எதிர்த்து, அவ்வளவு பேசிவிட்டேன். அவ்வளவு மயக்கி விட்டாளா, மாயக்கள்ளி என்று, அம்மா கத்தத்தான் செய்தார்கள். ஆனால் நின்ற நிலையிலேயே, சரசா மயங்கி விழவும், அம்மாவை அடியோடு மறந்து, மனைவியைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடினேன். அங்கே நல்ல சேதிதான் கிடைத்தது. அவள் கருவுற்றிருப்பது தெரிய

வர, பேரக் குழந்தைக்காக மருமகளை அம்மாவும் மன்னித்து, ஏற்றுக் கொண்டு விட்டார்கள்!'' என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தார் குருபரன்.

''ஓ! அதுதான் நானாப்பா?'' என்று கேட்டாள் பெண்.

''ஆமாமடா!'' என்று மகளின் தலையை வருடினார் தந்தை.

சிறு அமைதியின் பின் ''ஆனால், இத்தோடு கதை சுபமாக முடியவில்லை போலிருக்கிறதே! அப்புறம் என்னப்பா நடந்தது?'' என்று யோசனையோடு வினவினாள் பெண்.

மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டார் குருபரன் ''மறுபடியும் ஒரு தரம் இது பற்றிப் பேசத் தேவை இல்லாதபடி முழுதும் தெரிவித்து விடும்படி உன் சித்தி சொன்னாள். அது சரிதான். இன்னொரு முறை, இது பற்றிப் பேச என்னால் முடியாது. அதனாலேயே, அடி வயிற்றிலிருந்து கசந்து வழிந்தாலும், சகித்துக் கொண்டு சொல்கிறேன், நிரஞ்சனி, மேலே நடந்ததையும் கேட்டுக்கொள்.

'நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும், அது வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டுக்குத் தான் போகும்' என்று உன் பாட்டி அடிக்கடி சொல்லும் பழமொழி ஒன்று உண்டு. அதை, என் வாழ்வில் நேரடியாகப் பார்க்க நேர்ந்தது. பெற்றவளை நம்பாத எனக்கு ஒரு சூடு விழுந்தது'' என்று கனத்த குரலில் கூறி விட்டுக் கதையைத் தொடர்ந்தார்.

குரல் கனத்திருந்தது மட்டுமின்றி, கசப்பு நிறைந்திருந்தது.

நிரஞ்சனிக்குமே, கதவுக்குப் பின்னால் பூதம் இருந்து மிரட்டுவது போல, தொடர்ந்து இருக்கும் 'சேற்று'க் கதையைக் கேட்கப் பிடிக்கவில்லைதான்.

ஆனால், மீண்டும் மீண்டும் இது பற்றிப் பேசப் போவது இல்லை எனும்போது, இந்த ஒருமுறை, தந்தையும் சொல்லித்தான் ஆக வேண்டும். அவளும் கேட்டே தீர வேண்டும்!

மனதைத் திடப்படுத்திக் கொண்டு, தந்தை சொல்வதைக் கவனத்துடன் கேட்டாள் நிரஞ்சனி.

''வயிற்றுப் பிள்ளைக்காரி என்று, அம்மா ஏதேதோ வாங்கியும் செய்யச் சொல்லியும் கொடுக்கத்தான் செய்தார்கள். ஆனால், சரசாவின் உடல் நலம், முழு ஆரோக்கியம் என்கிற மாதிரி ஆகவே இல்லை. உடம்பில் சத்துப் பிடிக்கவில்லை. காதலிக்கிறபோது இருந்த உற்சாகமும் திரும்பவே இல்லை 'உள்ளூர அவளுக்கு ஏதோ ஏக்கம் இருக்கிறது, அவள் ஆசைப்படுவதைச் செய்யுங்களேன்' என்று டாக்டர் சொன்னார். ஆனால் என்ன வேண்டும் என்று சொன்னால்தானே, செய்யவும் முடியும்.

''நான் என் அம்மா மீது சந்தேகப்பட்டேன். நான் இல்லாத சமயங்களில், அவளை நோகப் பேசுகிறார்களோ என்ற ஐயம். அவள் கொண்டிருந்த உத்தமி ரோலுக்கு ஏற்றபடி, யாரையும் முக்கியமாக அம்மாவை அவள் குறை கூறியதே கிடையாது.

''தொழிலில் ஒரு சிறு விரிவாக்கம் செய்ததால், நல்ல டீலர்கள் தேர்ந்தெடுப்பது தொடர்பாக எனக்கு வெளி வேலைகள் அதிகம் இருந்தன.

''குன்னூர் பக்கமாக, நமக்கு ஒரு பண்ணை உண்டு. வேலை நடுவே, அங்கே அழைத்துப் போனபோது, சரசா சற்று உற்சாகமாக இருந்தது போலத் தோன்றிற்று.

''நீ பிறந்தபோதும், ரொம்ப நாள் படுத்துக் கிடந்துதான் எழுந்தாள். அதற்குள் நீ முகம் பார்த்துச் சிரிக்கத் தொடங்கி யிருந்தாய். உன்னைப் பார்த்தோ என்னவோ, இன்னும் கொஞ்சம் நன்றாக ஆன மாதிரி தோன்றியது.

''குன்னூர் பக்கம் கூட்டிப் போயேன். அங்கே உடம்பு நன்றாக இருந்தாள் என்றாயே என்று யோசனை சொன்னது, என் அம்மாதான்.

''அதைப் பற்றிக் கேட்டபோது, சரசின் முகம் லைட் போட்ட மாதிரி பளிச்சிட்டது. நாங்கள் மட்டும் தனியாக இருக்கப் போவதை எண்ணி சந்தோஷப்படுகிறாள் என்று எண்ணினேன். எண்ணி நானும் ஆனந்தப்பட் டேன். ஆனால், அந்த ஆனந்தம் அடியோடு அழியப் போகிறது என்று அறியாமல், அவளைக் குன்னூர்ப் பண்ணைக்கு அழைத்துப் போனேன்...

''பாட்டிக்கு உன் மேல், ரொம்பப் பிரியம். சுமார் இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, வீட்டில் கேட்ட குழந்தைக் குரல் அல்லவா? அப்போது உன் மேல், அதிகப் பிரியம்தான். இரண்டு பிலிம் ரோல்களை வாங்கித் தந்து, உன்னை நிறைய படம் பிடிக்குமாறு, கூறி அனுப்பினார்கள்...''

சொல்லப் பிடிக்காமல், மறுபடியும் நீடித்த ஒரு மௌனத் தின் பின், குருபரன் தானாகவே சொல்லலானார்.

''அங்கே சரசாவின் முகம் பெரிதும் தெளிந்து விட்டிருந் தது. உற்சாகமாகக் கூட இருந்தாள் உன்னையும் அவ ளையும் நிறையப் படங்கள் எடுத்தேன். முடிந்துவிட்ட முதல் ரோலை டெவலப் பண்ணக் கொடுக்கப் போன போதுதான், என் தலையில் இடி விழுந்தது. சரசாவின் சுயரூபமும் தெரிந்தது.''

''எப்படிப்பா?''

''அங்கே... அவர்களது தொழில் மூலம் கிடைக்கும் அழகான படங்களை, விளம்பரங்கள் போலப் பல புகைப்பட நிலையங்களில் மாட்டி வைத்திருப்பதை, நீயும் அங்கங்கே பார்த்திருப்பாய். அதே போல இன்னோர் ஆணுடன் ஒட்டி நிற்கும் சரசாவின் படத்தை அங்கே பார்த்தேன், நீரும்மா'' என்றார் குருபரன் மிகுந்த வெறுப்புடன்.

குண்டு போடுகிற மாதிரி குரலில் தீவிரத்துடன் பெற்றவர் சொன்ன வார்த்தைகள், மகளைப் பெரிதாகப் பாதித்து விடவில்லை.

''ஸோ வாட்?'' என்று சாதாரணமாகவே தந்தையிடம் கேட்டாள், அவள். ''இரு படங்களை ஒட்டுவதும், ஒட்டியது தெரியாமல் பிரிண்ட் போடுவதும், இப்போதெல்லாம் எளிதுதானேப்பா?'' என்று வினவினாள்.

''பார், நீயே என்ன சொன்னாய்? 'இப்போதெல்லாம் எளிதுதானே' என்கிறாய். ஆனால், இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அப்படியில்லையே! இல்லைதானேம்மா?''

''ஆனாலும், அடியோடு முடியாததாப்பா?'' என்று முழுதாக ஒத்துக் கொள்ள முடியாமல் நிரஞ்சனி கேட்டாள்.

''ஒரு படம் என்றால் நீ சொல்வது ஒருவேளை, சாத்தியமாக இருக்கலாம். ஆனால் ஒரு முழு ரோலையுமா, அப்படிச் செய்ய முடியும்?

''சொல்லப் போனால், முதலில் எனக்கும், உன் போல சந்தேகம்தான் வந்தது. ஏது இந்தப் படம் என்று, ஸ்டுடியோக்காரனிடம் விசாரித்தேன். சில நாட்களுக்கு முன்பாக ஒருவன் வந்து, நெகட்டிவ்வைக் கொடுத்து

ஒரு செட் பிரிண்ட் போட்டுத் தரும்படி கேட்டான், சார். அவன் சொன்ன மாதிரி போட்டு வைத்தால், பிச்சைக்காரப் பயல், அதற்கான தொகை அவனிடம் இல்லை வேண்டு மானால் கைக்கடிகாரத்தை வைத்துக் கொள் என்றான், அப்போதே ஓடாத அந்த ஓட்டைக் கடிகாரம் எனக்கு எதற்கு? ஜோடி நன்றாக இருப்பதால், விளம்பரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று தோன்றியது. அதற்குள், அவனும் அதையே சொல்லி நல்லதாக நாலு படங்களைத் தந்து விட்டுப் போய்விட்டான். அவன் போன விதத்தைப் பார்த்தால், இந்த ஜோடியில் ஒன்று மேலே போய் விட்ட மாதிரி தோன்றியது. போய் விட்டதன் நினைவுக்காகவோ என்று தோன்றியது... எப்படியும் சந்தோஷமான சமாச்சாரமில்லை. ஆனால், ஊர்க் கவலை நமக்கு எதற்கு... என்று ஏதேதோ வளவளத்தான்.

''கையில் இருந்த ரோலைக் கொடுக்காமலே திரும்பி விட்டேன்.

"அவனோடு மேலே எதுவும் பேச, எனக்கு மனமில்லை. ஏனென்றால், பணத்துக்காக வேறொருவனை மணந்து, பிரிந்து போய்விட்டவள் அவள். அந்தத் துர்ப்பாக்கிய, ஏமாளிக் கணவன், நானே என்று எனக்குத்தானே தெரியும்?'' என்று கசப்பும், வெறுப்புமாகக் கூறினார் குருபரன்.

# 7

குருபரனின் கசப்பையும் வெறுப்பையும் நிரஞ்சனியால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், அவள் மனம் அதை எதிர்த்து முரண்டவும் செய்து.

மறுபடியும் அதே வாதங்களே!

தந்தையைப் போல் ஓர் ஆண்மகன், நிறைந்திருந்த செல்வம், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து, வாழ்க்கை வசதிகள், எல்லாவற்றும் மேலாகக் கையில் ஒரு குழந்தை! அப்பா சொல்வதைப் பார்த்தால், அழகான குழந்தையும் கூட!

இவை அனைத்தையும் விட்டுவிட்டு, என்றோ பிரிந்த காதலன் பெரிதென்று ஒருத்தி சென்று விடுவாளா?

அவளுக்குத் தனஞ்சயனின் நினைவு வந்தது.

அது போன்ற நிலையை நினைத்துப் பார்க்கவும் பிடிக்கவில்லை என்றாலும், வீட்டார் எதிர்த்தால், அவனுக்காகக் குடும்பத்தை... சித்தியைக் கூடத் துறந்து செல்ல, நிரஞ்சனி தயங்க மாட்டாள்தானே?

ஆனால் ஒரு குழந்தை? பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்ற பிள்ளையை ஒரு தாய் துறக்க முடியுமா?

நிரஞ்சனி பேசாமல் அமர்ந்திருக்க, குருபரன் மேலே தொடர்ந்தார் ''அப்போதைக்கு எனக்கும், ஒன்றும் புரியாத மலைப்புதான், நீரு. என்ன நடந்திருக்கும் என்று தனியாக உட்கார்ந்து யோசித்தேன். நிறையப் புரிந்த மாதிரி இருந்தது.

''புரிந்த அளவில் சரசாவுக்கு பழைய காதல் ஒன்று இருந்திருக்கிறது. அவன் குன்னூர் பக்கம் உள்ளவன். அதனால்தான், அங்கே போவது என்றால், அவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறாள். பணத்துக்காகவோ, வேறு எதற்காகவோ என்னை மணந்த அவளுக்கு, முழுமை யாக காதலனை மறக்க முடியவில்லை. அதனால்தான், பெரும்பாலும் அந்த முக வாட்டமும், சோர்வும்!

''உடனடியாக, நான் இந்த மாதிரி எண்ணவில்லை. நீருச் செல்லம். எங்கள் நல்வாழ்க்கைக் கெடுப்பதற்கா யாரோ செய்த சதியோ என்றுதான் முதலில் யோசித்துப் பார்த்தேன். ஆனால், அப்படி யார் இருக்கிறார்கள்?

''நீ உருவானதிலிருந்து அம்மாவும், மாறி விட்டார்கள். ஆசிரமப் பெண்ணான சரசாவோ, வேறு யாரிடமுமே பேசிப் பழகியதே இல்லை என்பாள்! அப்படியானால், கெடுப்பவர், அதுவும் இப்படி திட்டம் போட்டுக் கெடுப் பவர் யார்? ஒருவருமே இருக்க வழியில்லை!

''எத்தனையோ விதமாக யோசித்துப் பார்த்தும், அவ ளுக்கு ஒரு முதல் காதல் என்பது தவிர, வேறு விளக்கத் துக்கே வழியிருக்கவில்லை, நீரு.

''இன்னொருவனை மனதில் வைத்துக் கொண்டு சரசா என்னோடு வாழ்ந்தாள் என்பதை என்னால் சகிக்கவே முடியவில்லை. என் தன்மானத்துக்கு விழுந்த பெரிய அடியாக, அதை உணர்ந்தேன். இவளுக்காகப் பெற்ற தாயை எதிர்த்து என்னவெல்லாம் செய்தேன்? கள்ளத்தனமாகத் திருமணமே செய்து, அவர்கள் முகத்தில் கரியைப் பூசினேனே! எல்லாம், பெரும் முட்டாள்தன மாகத் தோன்றியது.

''எல்லாம், தகுதியற்ற ஒருத்திக்காக, அவளிடம் கொண்ட அசட்டு மோகத்தினால்! அம்மா சொன்ன அந்த அசட்டு மோகத்திரை கிழிந்ததும், அவளிடம் அளவற்ற வெறுப்பு மூண்டது. அவளைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை. இந்த எலும்பெடுத்த முகத்தில் எதைக் கண்டு மயங்கினேன் என்று எனக்கே புரியவில்லை.

''என் குற்றச்சாட்டுக்களை சரசா ஒத்துக் கொள்ளவே இல்லை. ஆனால் ஒரேயடியாக ஓங்கி உரத்து, மறுத்துப்

பேசவும் இல்லை. பொய்யாகவே வாழ்ந்தவளுக்கு, ஒரே யடியாகப் பொய் பேச முடியவில்லை போல!

அல்லது, பிரிந்துவிடும் எண்ணம், அப்போதே இருந்திருக்குமோ என்னவோ?

''சென்னைக்குச் சென்று மணவிலக்கு ஏற்பாடு செய்யப் போவதாகச் சொன்னேன். ஆனால் இரவோடு இரவாக, எல்லா நகைகளையும் கழற்றி வைத்துவிட்டு, உன்னை யும் விட்டுவிட்டு, வீட்டை விட்டே போய் விட்டாள்.

''கொஞ்சம் பணம் மட்டுமே குறைந்திருந்தது. நகை களை எடுத்துப் போனால் விற்கும்போது பிரச்சினை யாகி விடும் என்று எண்ணியிருக்கக் கூடும்.

''போனது அந்தக் காதலனிடம் என்பது, என் ஊகம். யாருக்கோ பிறந்த பிள்ளையை, அவன் எப்படி ஏற்பான்? அதனால் பெற்ற பாசம் கூட, அவளுக்குப் பின்னுக்குப் போய்விட்டது.

''முதலில் அம்மா திட்டத்தான் செய்தார்கள். ஆனால் நானே நொந்திருப்பது புரிந்து பரிவு காட்டினார்கள். ஆனால், உன்னை பார்த்துக் கொள்ள அவர்களது வயது இடம் தரவில்லை.

''அம்மா மருமகளாக்கிக் கொள்ள விரும்பிய பணக்கார இடங்கள் விலகி ஓடி விட்டதால், அடுத்த தட்டுப் பெண் ணான கற்பகம் எனக்கு மனைவி ஆனாள். உனக்கும் ஒரு நல்ல தாய் கிடைத்தாள்.

''பிறகான வாழ்க்கை, பெரும்பாலும் நீயும் அறிந்ததே. உன்னை அவ்வப்போது அம்மா கடிந்து, கண்டித்தது நியாயமில்லைதான். ஆனால், உன்... ஊகூம், சரசாவை

உன் அம்மா என்று நினைக்கக்கூட என்னால் முடியாது. அவள் குணம் உனக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக என்று, அவர்கள் சொன்ன காரணம், உன் சித்திக்கோ எனக்கோ ஒப்புதல் கிடையாது, கண்ணு. ஆனால் உன் பாட்டியை எதிர்ப்பது எவ்வளவு கடினம் என்று உனக்கே தெரியும்.

''நீரும்மா, உனக்குத் திருமணம் செய்ய வேண்டிய பருவம் இது. கற்பகம் உன்னைப் பெற்றவள் இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். அவளை அம்மா என்று கூப்பிடக் கூடாது என்று உத்திரவிட்டு, அம்மாவும் அதை அடிக்கோடிட்டுக் காட்டி விட்டார்கள். இதனால்... இதனால் என்னென்ன பிரச்சினைகள் வருமோ என்று, அதுதான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம்.

''ஆனால், நீ கவலைப்படாதே கண்ணு. எதுவானாலும் உன் சித்தியும் நானும் பார்த்துக் கொள்ளுவோம். அதனால் கவலை இல்லாமல்... உன்னைப் பெற்றவளைப் பற்றிய எந்தவிதமான கவலையும் இல்லாமல், நீ சந்தோஷமாக இரும்மா!'' என்றார், அவளைப் பெற்ற தகப்பனாராகக் குருபரன்.

அவளைப் பெற்ற தாய், குணம் கெட்டவளாக, சுமந்து பெற்ற மகளான அவளை உதறிவிட்டுப் போயிருக்கிறாள்.

அது இன்னொரு மனிதனுக்காக என்பது, மெய்யாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனால் மகளான தன்னைக் கைவிட்டு விட்டுப் போய் விட்டாள் என்பது, முழுமையான உண்மையே!

ஆனால், உள்ளூர ஓர் உறுத்தல் தவிர, பெரும் துன்பமாக, நிரஞ்சனி, அதை உணரவில்லை.

நினைவு தெரிந்து பார்த்தே அறியாத ஒருத்தி, அவளது அறியாத பருவத்தில் அவளை வேண்டாம் என்று போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

அதனால் என்ன? அவள் அலட்சியமாகக் காலி செய்து விட்டுப் போன தாயின் பதவியைத்தான், சிறிய தாய், கற்பகமாக வந்து, எந்தக் குறைவும் இல்லாமல், இட்டு நிரப்பி விட்டாளே!

பெற்றவள் தன்னை வேண்டாம் என்று பழைய செருப்பாய் உதறி விட்டுப் போனாளே என்கிற வருத்தமும், அப்படி ஒன்றும் பெரிதாகத் தெரியவில்லை.

மறுநாள் மாலையில் சந்திப்பதற்காக என்று தனஞ்சயன் என்ன மாதிரி உடைகள் அணிந்திருப்பான் என்று, அவ்வப்போது மனதில் அதுதான் வந்து கொண்டே இருந்தது. அவனுக்குப் பிடித்த மாதிரி, அவள் எதை அணிவது என்ற யோசனையும்.

சட்டென நிரஞ்சனி பரபரப்புற்றாள், இதன் பொருள்?

தனஞ்சயன் கூட்டுறவில், தாய் விஷயம் அவளுக்கு முழுதாக மறந்துவிடும் என்பதுதானே? அப்புறம் என்ன?

இப்படி ஒரு தாயைப் பற்றி எண்ணியெண்ணி வருந்துவாளோ என்று தந்தையும் சித்தியும் கவலைப்படுவது, மனதுக்கு இதம் தந்ததோடு, வேடிக்கையாகவும் இருந்தது.

எனவே ''என்னமோ குரங்கை நினைக்காமல் மருந்து குடிக்கிற மாதிரி என்பார்களே, அப்படி அவர்கள் நினைவிலேயே வருந்திக் கொண்டு இருப்பேன் என்று எண்ணினீர்களாப்பா? அதெல்லாம் மாட்டேன்ப்பா. எனக்குத்

தான் எப்போதும் சித்தி இருக்கிறார்களே!'' என்றாள் நிரஞ்சனி.

மகளைச் சிறு வியப்புடன் பார்த்துவிட்டு ''இதிலேயே உன்னால் ஜோக்கடிக்க முடிகிறது என்றால், எனக்கு நிம்மதியாக இருக்கிறதுடா. எல்லாம் சித்தியும் நானும் பார்த்துக் கொள்வோம் என்று நிம்மதியாக இரு'' என்று எழுந்தார் குருபரன்.

கையிலிருந்த செல்லில் மணியைப் பார்த்துவிட்டு ''பரவாயில்லை. மணி பன்னிரண்டுதான் ஆகிறது நான், இரண்டு மூன்று கூட ஆகியிருக்குமோ என்று நினைத் தேன். அங்கே உன் சித்தியும், நீ ரொம்ப வருத்தப்படு வாயோ என்று கவலையில் விழித்துக் கொண்டுதான் கிடப்பாள்.

ஆனால், நீ சாதாரணமாக எடுத்துக் கொண்டது தெரியும்போது, பாதிக்குப் பாதி நிம்மதியாகி விடுவாள். நீ போய்ப் படும்மா'' என்ற தந்தையின் பேச்சில் ஒன்றைப் பிடித்து, ''பாதிக்குப் பாதி என்றால், மீதி? இன்னும் ஏதேனும் கவலையும் இருக்கிறதாப்பா?'' என்று வினவி னாள் பெண்.

''எ... என்ன? ஓ, அதுவா? பெரிதாக ஒன்றும்... வந்து.. அது ஒரு கவலை உண்டுதான், நிரஞ்சனி. நீயாவது பாட்டியின் தன்மை உணர்ந்து, ஒரு மாதிரிப் பொறுத்து, விலகிப் போய்விடுகிறாய். பாட்டி இப்போது அவனை ரொம்பக் கடுமையாகப் பேசுகிறார்கள் என்று புரியாமல் ரொம்ப கோபப்படுகிறான். பாட்டியிடமே எப்போது வெடிக்கப் போகிறானோ என்று, அதுவும் பெரும் கவலைதான்'' என்றார் தந்தை.

அவ்வப்போது குமுறும் சிவநந்தனின் பேச்சுகள் நினைவு வர ''ஆமாம்ப்பா. நியாயம் இல்லாமல் பேசுகிறார்கள் என்று, அவனுக்கு நிறையவே கோபம் உண்டு தான்'' என்றாள் பெண்ணும்.

கூட நடக்கும்படி சைகை செய்துவிட்டு, ''என்னதான் போட்டி, சண்டை போட்டாலும், அவனுக்கு, உன்னிடம் பாசம் அதிகம். அவனுக்குக் கொஞ்சம் புத்தி சொல்லும்மா...'' என்று பேசியவாறே மாடிப் படியை அடைந்தவர்கள், அதற்கு மேல் பேச்சை நிறுத்தி, ஓசையற்று நடந்து, அவரவர் அறைகளை அடைந்தார்கள்.

அன்றைய நிகழ்வுகளுக்குப் பிறகு படுத்த உடனே உறங்குவது, நிரஞ்சனியால் முடியாதுதான். ஆனால் ஒரு படமாகக் கூடக் கண்டறியாத தாயின் நினைவு, என்ன யோசித்தும், அவளது மனதில் நிற்க மறுத்தது.

கூடவே அவள் பக்கத்து வாதம் எதுவும் தெரியாமல், ஒரு முடிவெடுப்பதும், அவளுக்கு நியாயமாகப் படவில்லை.

அதைவிட, ''நம் திருமண நிகழ்வுகளைப் பதிவு செய்ய யாரைப் பிடிப்பது'' என்று கேட்டுக் கண்ணால் நகைத்த தனஞ்சயனின் பேச்சும் சீண்டலும் மனம் முழுவதையும் இனிமையாக நிறைத்துக் கொள்ள, அவனையே நினைத்தவாறே, அவள் தூங்கிப் போனாள்.

மனதிற்கு இனியவனை நினைத்தபடியே தூங்கியதாலோ என்னவோ, விழிக்கும்போதும் நிரஞ்சனி மிகவும் உற்சாகமாக உணர்ந்தாள்.

தனா விஷயம் வீட்டில் தெரிந்தாலும், பாட்டியால் கூட, அவனிடம் குறை காண முடியாது.

நல்ல வருமானம் உள்ள தொழில் வசீகரமான தோற்றம், நல்ல ஒழுக்கம் எதிலுமே, அவனிடம் குறைப்பட ஒன்றுமில்லை என்பது வேறு, அவளது மகிழ்ச்சியைக் குறைய விடாமல் காத்தது எனலாம்.

ஒரு பாடலை லேசாக முணுமுணுத்தவாறே வெளியே செல்லத் தயாராகி வந்தவள், ஹாலில் பாட்டியின் உரத்த குரலைக் கேட்டுத் தயங்கி நின்றாள்.

தையல்நாயகி அம்மாள் தொண்டை கிழியக் கத்துவது ஒன்றும் உலக மகா அதிசயம் அல்லதான். ஆனால், இப்படிக் கத்தும்போது, கண்ணில்பட்ட அனைவரையும் வறுத்து எடுப்பார்களே! இப்போது கீழே போய், அவர்களிடம் மாட்டிக் கொள்வதா?

ஆனால் புதிதாகக் கிடைத்த ஒரு வேலையின் விவரங்கள் பற்றிப் பேச வருவதாகச் சொல்லியிருந்தாள்.

இது, தனஞ்சயன் மூலமாய் வந்த வாய்ப்பு என்பதால், அவனோடு சேர்ந்துதான், வாடிக்கையாளரிடம் செல்வதாகத் திட்டம் இருந்தது.

சந்தடி சாக்கில், சற்று நேரம் தனியாகப் பேசிக் கொண்டிருக்கலாம் என்று, முடிந்தவரை முன்னதாகவே வரச் சொல்லியிருந்தான் அவன்.

அவளும் ஆவலாகக் கிளம்பி வந்தால், இந்தப் பாட்டி, இப்படி பிரேக் போட வைத்து விட்டார்களே! நிலைமை எப்போது சீராகி, நிரஞ்சனி எப்போது போய்த் தனஞ்சயனைச் சந்திப்பது?

பெற்றவளுக்குப் பதில் போலத் தந்தை குருபரனின் குரல் தணிவாக என்னவோ முணுமுணுக்கவும், நிரஞ்சனி திடுக்கிட்டாள்.

அப்பாவா? இப்போது எதில் பாட்டியிடம் மாட்டினார்?

கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போன்ற சிறு குரலில், ''சாரிம்மா இப்படியெல்லாம் நடக்கும் என்று, அப்போது எனக்குத் தெரியாமல் போயிற்று'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார் குருபரன்.

அப்போது? அது, எப்போது?

எப்போது செய்தது என்றாலும், பாட்டியிடம் மாட்டினால், மாட்டியதுதானே? என்னவாக இருக்கும்?

ஏதாவது செலவுக் கணக்கை மறைத்திருப்பாரோ? தன்னால் உதவக் கூடுமோ என்றுதான் நிரஞ்சனி பெரியவர்கள் பேச்சை கவனித்தது.

ஆனால்... வழக்கம் போலவே, மகன் மன்னிப்பு வேண்டியதைத் தையல்நாயகி கண்டு கொள்ளவே இல்லை! குரலைக் கொஞ்சமும் தணிக்காமல், தன் கோபத்தைக் கொட்டித் தீர்த்தாள்.

''இதை நீ, இப்போது சொல்லி என்னடா பிரயோசனம்? அன்றைக்கு, ஒரு வார்த்தை கேளாமல், ஒரு கேடு கெட்டவளை கட்டிக் கொண்டு வந்தாயில்லையா? அதன் பலனை, இன்றைக்குப் பட்டுத்தானே, ஆக வேண்டும்? படு.. நன்றாகப் படு!'' என்று பாட்டி ஆவேசத்துடன் கூறவும், நிரஞ்சனி திடுக்கிட்டாள்.

அவருடைய தாயிடம் கேளாமல், குருபரன் செய்த திருமணம், நிரஞ்சனியுடைய தாயுடன்தான். இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்து, அது முறிந்தும் போயிற்று!

அதைப் பற்றி, இப்போது கத்தி என்ன பயன்?

ஒன்றன் பின் ஒன்றாக, இரண்டும் தொடர்ந்து நடப்பது, தற்செயல் அல்லவோ?

சித்தியும் தானும் பார்த்துக் கொள்வதாக வேறு.. கிட்டத்தட்ட தேறுதல் போல, அப்பா ஏன் சொன்னார்?

விஷயம் என்னவாக இருக்கும்?

தன்னிச்சையாகத் தடதடக்கத் தொடங்கிய இதயத்தை கையால் அழுத்திச் சமனப்படுத்திபடி பேச்சை கவனித்த வளுக்கு, இடி தலையிலேயே இறங்கியது. இடி விழுந்த வேகத்தில், அவளுக்குக் கண்ணில் பூச்சி பறக்க, நிற்க மாட்டாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள்!

"பொதுவாகவே, சொந்த பந்தங்களுக்கு ஞாபகசக்தி மிகவும் அதிகம், குரு. அதிலும் கெட்டது என்றால், கண் காது வைத்து ஜோடித்து, இன்னும் ஊதிப் பெரிதாக்கிப் பார்ப்பார்களே தவிர, லேசில் மறக்க மாட்டார்கள். யாரையும் மறக்க விடவும் மாட்டார்கள். அதிலும் நம் உறவுகள் பற்றிக் கேட்கவே வேண்டாம். அந்தக் கேடு கெட்டவளின் புகழ்தான் ஊரெங்கும் பரவி நாறிக் கிடக்கிறதே.

"நமக்கென்ன, பணமில்லையா? அந்தஸ்து இல்லையா? இரண்டு நல்ல சம்பந்தங்கள் காரணம் இன்றித் தட்டிப் போனது ஏன் என்று யோசித்து, யோசித்து, மண்டை குழம்பினேன். இதோ, மூன்றாவது பிள்ளை வீட்டுக் காரன் நேரே கூப்பிட்டுப் பிட்டு பிட்டு வைத்து விட் டான். மானம் உள்ளவன், எவனோடோ ஓடிப் போன வளின் மகளை மணப்பானா என்று, முகத்தில் அடித் தாற்போல, நேரடியாகவே சொல்லிவிட்டான்.

போச்சு! இந்தத் தையல்நாயகி கட்டிக் காத்த குடும்ப கௌரவத்தை இப்படி நாசம் பண்ணி விட்டாளே பிசாசு! இந்தப் பெண்ணை வேறு தலையில் கட்டிவிட்டு, ஏய், உன் பெண் எங்கேடா? அம்மாவுக்குப் பெண் தப்பாமல் பிறந்தது போல, அவள் வேறு, வீட்டில் தங்குவதே இல்லை. என்ன தொழிலோ? என்ன சம்பாதனையோ? கூப்பிடு அவளை! அவளிடம் பேச வேண்டும்'' என்று மகனை விரட்டினார் தையல்நாயகி.

மென்று விழுங்கி, கஷ்டப்பட்டு, குருபரன் தைரியத்தைக் கூட்டிக் கொள்வதைக் கண்ணால் பார்க்காவிட்டாலும், நிரஞ்சனியால் ஊகிக்க முடிந்தது.

எப்படியோ, அவரே சமாளிக்கட்டும். இப்போது, யார் முகத்தையும், அவளால் பார்த்துப் பேச முடியாது!

''அம்மா! அவள் குழந்தை...''

''ஆமாம் குழந்தை! பல்லைத் தட்டித் தொட்டிலில் போட்டு, தாலாட்டுப் பாடித் தூங்க வை. முட்டாள்! உன்னுடைய அந்தக் 'குழந்..தை'யின் திருமணம் பற்றிப் பேசப் போய்த்தானே, நமக்கு இவ்வளவு அவமானம் நேர்ந்திருக்கிறது! அவளைக் கூப்பிட்டு, ஊர் சுற்றாதே, கெட்ட பெயராகி விடும் என்று கடுமையாக எச்சரித்து வை!'' என்று மகனுக்கு உத்தரவிட்டாள்.

''சரிம்மா சரிம்மா'' என்று பணிவுடன் கூறிவிட்டு, ''அம்மா இன்று ஆடிட்டரிடம் வருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள், கிளம்புவோமா? நேரமாகிவிட்டது?''என்று நினைவூட்டினார் குருபரன்.

''ம். கிளம்பு. அதற்காகத்தான் தயாராகி வந்தேன். அதற்குள், அந்தக் கழுதை போன் போட்டு மூடைக்

கெடுத்துவிட்டான். எதற்கும், கொஞ்ச நாள், உன் மகளின் கல்யாண விஷயத்தை ஆறப் போட்டு வைப்போம். இன்றைக்குப் பேசினானே, அவனெல்லாம் மெனக்கெட்டுக் கிளம்பிப் போய் கதை சொல்லுவான்.

''கேவலப்பட்டுப் போகும்... எல்லாம் எடுத்துக் கொண் டாயா? வா. எ.. என்ன சொன்னேன்? சரியான ஊர் வம்பன் அவன்! மனைவி அவனுக்கு மேல்.. ஊரெல் லாம் நம்மை நாறடித்து விடுவார்கள்...''

தையல்நாயகியின் குரலில் தேய்ந்து மறைய, வெளியே கார் கிளம்பிச் செல்லும் ஒலியும் கேட்டது.

அதுவரையும், நிரஞ்சனி அசையவே இல்லை.

சற்றுப் பொறுத்து, மெல்ல எழுந்து, அறைக்குள் சென்று, பாரமாய்க் கனத்த தலையைக் கைகளால் தாங்கிய வண்ணம் அமர்ந்தாள். காலையில் இருந்த உற்சாகம் அடியோடு வடிந்து விட்டது.

இப்போது என்ன செய்வது?

இந்தக் கதை தெரியும்போது, தனஞ்சயனே, அவளை மணக்க விரும்புவானோ, என்னவோ?

எப்படி விரும்புவான்?

தாய் இறந்திருந்தால், தாயற்ற பெண், பாவம் என்பார் கள், பரிதாபப்படுவார்கள். அதே தாய், குடும்பத்தை விட்டு, இன்னொருவனோடு ஓடிப் போயிருந்தால், மகளும் பாவப்பட்ட ஜென்மம்தானே?

இவளும் இந்த மாதிரிப் போக மாட்டாள் என்று, அந்தப் பையனின் வீட்டாருக்கும்தான் என்ன நிச்சயம்?

காதல் மயக்கத்தில், தனாவே அவளை மணக்க நினைத் தாலும், அவனுடைய குடும்பம் ஒப்புமா?

பெற்றோர் இல்லை, ஆனால் வளர்த்த தாத்தாவும் பாட்டியும் என்ன சொல்லுவார்கள்? தாய்மாமா குடும்பம் இருக்கிறது. இன்னும் எத்தனை உறவுகளோ? அவற்றுள் நல்ல, பிரியமான உறவினரும் இருக்கலாம்!

அத்தனை பேருக்கும், தாயைப் பற்றி விளக்கம் சொல்வது, மிகவும் கடினம்!

அத்தோடு என்னவென்று சொல்வது? சொல்லிப் பெருமைப்படும் விதமாகவா, அவளுடைய தாய் நடந்து கொண்டிருக்கிறாள்?

எனவே... அவளது இனிய காதலுக்கும் முடிவுரைதான் நடத்தியாக வேண்டும்.

பெற்றவள் அவளை உதறிவிட்டுப் போனது, அவளது மனதை அதிகம் பாதிக்கவில்லை என்றே சொல்லலாம். காரணம், அவளது எதிர்காலத்துக்கு உறுதியாக துணை யாகத் தனஞ்சயன் இருந்தான். அந்தத் துணையைப் பாட்டி தவிர மற்றவர்கள், மறைமுகமாக ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ஆனால், இப்போது அந்தத் துணையே இல்லை என்று ஆகவும், அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு, ஹோவென்று இருந்தது.

ஆனால், விசித்திரமான வகையில், பெற்றது தவிர, அந்த சரசாவுக்கும் எனக்கும் இடையே ஒன்றுமே கிடையாது. இனியும் இருக்காது என்று, பெற்றவளை அடியோடு விலக்கவும், நிரஞ்சனிக்கு மனம் வரவில்லை!

அப்படி விடுவது கூடாது. கர்ப்பக் கடன் என்று ஒன்று இருக்கிறது. இப்போது இருக்கிறாளா இல்லையா என்று தெரியாத தாயார், உயிருடன் இருந்து, என்றேனும்

அவளைத் தேடி வந்தால், அவளுக்குத் தேவையானதைச் செய்யாமல் சும்மா இருப்பதற்கு, நிரஞ்சனியால் முடியாது.

அதனால், இப்போது செய்யக் கூடியது ஒன்றே ஒன்று தான். தனஞ்சயனிடம் நடந்த கதையைச் சொல்லி விட்டு, அவனை முழுதாகப் பிரிவதுதான்!

அழுகையினூடே என்றாலும், நன்றாக ஆராய்ந்து, அறிவுப்பூர்வமாக யோசித்து எடுத்த முடிவுதான்.

ஆயினும் அதைச் செயல்படுத்துமுன், நிரஞ்சனி சொல்லில் அடங்காத வேதனையில் துவண்டு போனாள்.

# 8



அன்று வீட்டை விட்டு வெளிவே செல்லவே, நிரஞ்சனி பெரிதும் கஷ்டப்பட்டாள். ஒரு காரணம் மனது.

அடுத்து, அவள் தனியே வீட்டை விட்டு வெளியே செல்வதும் பிரச்சனை ஆயிற்று.

எப்போதுமே, தனித்து வெளியே செல்வதற்கு, நிரஞ் சனி தயங்கியது கிடையாது.

ஆனால், அன்று வெளியே செல்லக் கிளம்பிய வளுக்கு, வேலையாட்களின் பார்வையில், ஒரு கவனம் இருப்பது போலத் தெரிந்தது.

பாட்டி ஏதோ எச்சரித்து வைத்திருக்க வேண்டும். எப்படியும் இந்த விவரம் பாட்டியிடம் போகும். குறுக்கு விசாரணையில் தொடங்கி குற்றவாளி என்று முடியும்.

சற்று யோசித்து விட்டு, லைப்ரரி வரை, கூட வருமாறு, தம்பியிடம் கேட்டாள்.

அவனும், அப்போதைய புது வழக்கப்படி, தடை சொல்லாமல், அவளோடு சென்றான்.

வாசகசாலையில் இறங்கிக் கொண்டு, வேறு எங்காவது கொஞ்சம் சுற்றிவிட்டு வீட்டுக்குச் செல்லும்படி சொல்லி அவனை அனுப்பிவிட்டு, ஆட்டோ பிடித்து, தனஞ்சயனின் இருப்பிடம் சென்றாள்.

அன்றைய சந்திப்புக்காகக் கிளம்பிக் கொண்டிருந்தவனுக்கு, முன்னதாக வீட்டிற்கே வந்துவிட்ட நிரஞ்சனியைக் கண்டதும் ஒரே ஆச்சரியம், மகிழ்ச்சி!

ஏனெனில் என்னதான் கல்லூரியில் ஆண்களோடு சேர்ந்து படித்து, தொழில் என்று தானாக ஒன்றைத் தொடங்கி, அதிலும் எல்லோருடனும் சாதாரணமாகப் பேசிப் பழகியபோதும் சில விஷயங்களில், நிரஞ்சனி ரொம்பவும் கண்டிப்பாக இருப்பாள்.

அதில் ஒன்று, காதல் என்று ஏற்ற பிறகும், தனஞ்சயன் தனியாக வசிக்கும் இடத்துக்குள் தனியே செல்லாதிருப்பது.

இன்று அந்த விதி தளர்த்தப்பட்டு, அவளே வந்ததால் கண்கள் பளிச்சிட ''என்ன என் அழகான பட்டுப்பூச்சி, இந்தப் பொல்லாத சிலந்தி வலைக்குள் தானாக வந்து மாட்டிக் கொண்டிருக்கிறது? வா, வா. உள்ளே வா...'' என்று கதவை அகலத் திறந்தவன், உடனே முகம் மாற ''என்ன பிரச்சனை, ரஞ்சனி? முதலில் உள்ளே வந்து உட்கார்ந்து என்னவென்று சொல்லு?'' என்றான்.

ஒரு வினாடிக்குள் அவளது துன்பம் புரிந்து, பரிவுடன் அவன் விவரம் கேட்ட விதம், அவளது கண்களை நனைய வைத்தது.

ஆனால், அழுது, அவனது இரக்கத்தைத் தூண்டி, அவனைத் தன்புறம் இழுக்கக் கூடாது என்ற முடிவுடன் வந்ததால், கண்ணீரை அடக்கிக் கொண்டு, பொம்மை போல உள்ளே சென்று உட்கார்ந்தாள்.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு ''சற்று உட்கார்ந்திரு. ஒரு காபி குடித்துக் கொண்டே பேசலாம். காபி மேக்கர்தான். இரண்டே நிமிஷங்களில் தயாராகி விடும்'' என்று உள்ளே சென்றான்.

தனியே வசிப்பவன், தனஞ்சயன். முழு நேர வேலைக்கு ஆள் வைக்கும் வசதி இருந்தாலும், சிறு சிறு தேவைகளைத் தானாகச் செய்து கொள்கிறவன் என்பது, நிரஞ்சனி அறிந்ததே. அதனாலேயே, அவனிடமும் இன்னமும் அதிகமாக மதிப்பும் மரியாதையும் அவளுக்கு உண்டு. கூடவே மயக்கமும்.

ஆனால், இன்று எல்லாமே கையை விட்டுப் போய் விடும்!

சுற்றிலும் பார்க்கையில், கலை நயத்தோடு அறையை அவன் அலங்கரித்த விதம், என் காதலை நான் யாருக்கும் மறைப்பதாக இல்லை என்று சொல்லாமல் சொல்லுவது போல, டீவி மேல் வைக்கப்பட்டிருந்த அவளது பெரிய வண்ணப்படம்...

எல்லாம் நெஞ்சுத் தவிப்பைக் கூட்டவே, கண்களை இறுக மூடிக் கொண்டு, பின்னே தலை சாய்த்து அமர்ந்தாள்.

அதுவும் பிழையாக, எவ்வளவு தூரம், அவளது உலகமே தனஞ்சயனாகி விட்டிருக்கிறது என்று துல் லியமாக உணர்ந்தாள்.

அவள் செல்லுமிடம் எல்லாம் வருவான். ஆனால், அவளது வேலையில் குறுக்கிடாததோடு, லாப்டாப்பை வைத்து, அவனது வேலையையும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் செய்து கொண்டே இருப்பான்.

அவ்வப்போது நடக்கும் புன்னகைப் பரிமாற்றத்தி லேயே அவளுக்கு உற்சாகம் பிய்த்துக்கொண்டு போகும்!

ஆனால் இனி என்ன ஆகும்? வாழ்க்கையே சூனிய மாகிப் போகுமா? வேறு கதி?

கடுமையாக உழைப்பின் மூலம் தனஞ்சயன் ஈட்டி யிருக்கும் செல்வம், அதன் மூலம் சமூகத்தில் அவன் அடைந்திருக்கும் உயர்ந்த நிலை! அதனால் அவனுக்குக் கிடைக்கும் மரியாதை! எல்லாவற்றையும் அவளுக்காக நாசம் செய்து விட்டு, அவர்களால் மகிழ்ச்சியாக வாழ முடியுமா?

முக்கியமாக மரியாதை போய்விடுமே!

அவன் சகிப்பானோ என்னவோ? அவளால் நிச்சய மாக முடியாது!

அவனது ஒளி மயமான வாழ்க்கையின் மீது, அவளது களங்கத்தின் நிழல்கூட விழக்கூடாது! கூடவே...

நெற்றிக் கூந்தலை ஒரு கை மென்மையாக விலக்க வும், நிரஞ்சனி சட்டெனக் கண் திறந்து பார்த்தாள், அவன்தான்.

டீபாய் மேல் வைக்கப்பட்டிருந்த காபியை எடுத்து அவளிடம் கொடுத்தவாறே, ''என்னடா?'' என்று மெல்லக் கேட்டான் ''பாட்டிக்கு ஏதும் தெரிந்து, தகராறு செய்தார்களா?''

தானும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டு அருகில் அமர்ந்தவனிடம் காபியைக் காட்டி 'அப்புறம்' என்கிற

சிறு பாவனையுடன், நிரஞ்சனி பானத்தை அருந்தலானாள்.

அவளது விருப்பத்தை மதித்து, அவனும் மௌனமாகவே காபியை குடிக்கத் தொடங்கினான்.

காபி காலியாகும்வரை, அவர்களிடையே பேச்சு இருக்கவில்லை.

காலிப் கப்புகளைக் கொண்டு போய், சமையல் அறையில் வைத்துவிட்டு வந்த தனஞ்சயன், ஒரு மோடாவை அவள் எதிரே இழுத்துப் போட்டு அமர்ந்து, கேள்வியாய் அவள் முகத்தைப் பார்த்தான்.

இனியும் தள்ளிப் போட முடியாது!

''தனா...'' என்று அவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

சட்டென அவளது கையைப் பற்றி அழுத்தி, ''ஷ், ரஞ்சிமா. என்ன விஷயம்? எதுவானாலும் சொல்லு. நாம் இருவரும் சேர்ந்து சமாளிப்போம்'' என்றான் தனஞ்சயன், குரலில் அழுத்தத்துடன்.

முடியாதே! எதையும் சாதிப்பது என்ன? இருவரும் ஒன்று சேரவே முடியாது என்பதுதானே, அவளது பிரச்சனையே!

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், மறுபடியும் அவளை உந்தினான்.

''சொல்லும்மா. என்னவோ தானாகக் கிடைத்திருக்கும் வழியிலேயே வளர்ந்து, பெரிய தொழில் அரசி ஆகப் போவதாகச் சொன்னாய். ஒரு தடையிலேயே இப்படி துவண்டு போனால் எப்படி வளர முடியும்? தடைகளைப்

படிகளாகக் கருதி ஏற முயன்றால் தான் வளர முடியும்மா. ஒருவேளை, விஷயம் நீ நினைப்பது போலப் பெரியதாக இல்லாமலும் இருக்கலாம். முதலில் விஷயத்தைச் சொல்லு, பார்ப்போம்'' என்று வற்புறுத்திக் கேட்டான்.

வலுவைக் கூட்டிக் கொள்வது போல, ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு, நிரஞ்சனியும் சொன்னாள். ''தனா, என் வாழ்க்கையில்... என் சிறு வயதில் ஒரு பெரிய தப்பு நடந்திருக்கிறது. அதனால், அதன் விளைவாக, நாம் பிரிய.. பிரிந்துதான் ஆக வேண்டும்'' என்று ஒருவாறு சொல்லி முடித்தாள்.

மறுப்பாகத் தலையசைத்துப் பேசினான் தனஞ்சயன். ''சின்ன வயதில் பெரிய தப்பா? சிறு வயதில் கொலைக் குற்றமே செய்தால் கூடத் திருத்தத்தான் முடியுமே தவிரத் தண்டிக்க மாட்டார்கள், தெரியுமா? நானும் அப்படித்தான், நீ என்ன செய்திருந்தாலும்...''

''ஐயோ தனா, தப்பு செய்தது நானில்லை!'' என்று குறுக்கிட்டுக் கூறினாள், நிரஞ்சனி.

''பின்னென்ன?'' என்று தோளைக் குலுக்கினான் அவன். ''யாரோ செய்த குற்றம் உன் மீது விழுந்திருந்தாலும், அது பற்றி எனக்குக் கொஞ்சமும் அக்கறையில்லை'' என்று, உறுதியோடு அறிவித்தான் அவளுடைய அன்பன்!

ஐயோ கடவுளே! இந்த மாதிரி அன்பைத் தருவது போலத் தந்து, அநியாயமாகப் பறித்துவிட்டாயே.. என்று புலம்பியது அவளது மனம். பிடிவாதமாக அதை மடக்கி, நிரஞ்சனி நிமிர்ந்து அமர்ந்தாள்.

''தனா, யாரும் என் மேல் எந்தப் பழியையும் சுமத்தவில்லை. ஆனால் தப்பு செய்தது, யாராலும் மன்னிக்

கவே முடியாத பெரிய பிழையைச் செய்தது என்... என்னைப் பெற்ற தாயார்'' என்று முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு அழுதாள் அவள்.

மோடாவைத் தள்ளிவிட்டு தனஞ்சயன் எழுவதை, நிரஞ்சனியால் உணர முடிந்தது.

''அப்படி என்ன மகாப் பெரிய குற்றத்தை உன் தாயார் செய்தார்களாம்?'' என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான் அவன்.

''அது.. அது...'' என்று சொல்ல முடியாமல் திணறி விட்டு, மறுபடியும் ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, ''ஒரு வயதுக் குழந்தையாக நான் இருக்கும்போது, அவர்கள்... தன் ப.. பழைய காதலனோடு ஓ... ஓடிப் போய்... வந்து எங்கேயோ போய்விட்டார்கள். பெற்ற மகளான என்னை, அப்பாவிடமே விட்டுவிட்டு!'' என்று ஒருவாறு சொல்லி முடித்தாள் அவள்.

''ஓ! இதெல்லாம், உனக்கு யார் சொன்னது?''

அவனது குறிப்பு புரிந்து, ''என் அப்பாதான் சொன்னார். பாட்டியில்லை'' என்றாள் அவள் சின்னக் குரலில்.

''அவரே சொன்னாரா? எப்படி? என்னவென்று?''

அந்தக் குரலில் என்ன இருந்தது? கோபம்? கழிவிரக்கம்? சீற்றம்?

எல்லாம் கலந்த அவனது குரல், அவளுக்கு மிகவும் அந்நியமாக இருந்தது.

ஆனால், அவன் ஆத்திரப்பட்டு அவள் பார்த்ததும் இல்லையே!

''அப்பாவுக்கும் அதிர்ச்சிதான், தனா. கொஞ்சமும் எதிர் பாராத அதிர்ச்சி! அந்த அம்மாவிடம் போய்க் கேட்டால், அவர்கள் சரியாக மறுக்கக் கூட இல்லையாம்...''

''ஒருவேளை, அவர்களுக்கும் அதிர்ச்சியாகவே இருந் திருக்கலாம், அல்லவா? அவ்வளவு நாள் வாழ்க்கை யையே புரட்டிப் போடுவது போல, அந்தக் கேள்வியில் சொல்வது அறியாமல் திகைத்தும் போயிருக்கலாமே!''

''ஆனால், இரவோடு இரவாக வீட்டை விட்டு வெளி யேறி விட்டார்களாமே! அந்தக் காதலனோடு செல்வ தாக, ஏற்கனவே திட்டம் இருந்திருக்கிறது, அதனால் தான். பெரிதாக மறுப்பதற்குரிய தைரியம், அந்த அம்மா வுக்கு வரவில்லை என்றார் அப்பா'' என்றாள் நிரஞ்சனி.

''தப்புச் செய்யாதவர்களைத் திடுமெனப் பெரிய குற்றம் சாட்டினால், அதிர்ச்சியில் கூட, வாயடைத்துப் போகும் நிரஞ்சனி! வீட்டை விட்டு வெளியேற, வேறு காரணங்களும் இருக்கலாம்'' என்று அப்போது பிடிவாத மாக, முகமறியாத அந்தப் பெண்ணுக்கே பரிந்து பேசி னான், தனஞ்சயன்.

தனஞ்சயன் என்ன, தருமபுத்திரர் ஆகிவிட்டானா?

அவள் வாழ்வில் இவ்வளவு பெரிய சிக்கலை ஏற் படுத்தி வைத்திருக்கும் அந்த அம்மாவுக்குப் பரிகிறானே என்று நிரஞ்சனிக்கு ஆத்திரம் வந்தது.

''அசைக்க முடியாத ருசு ஒன்று அப்பாவுக்குத் தற் செயலாகக் கிடைத்திருக்கிறது, தனா. அது மட்டும் கிடைத்திராவிட்டால், அந்த அம்மா காதலனோடு போனதுகூடத் தெரியாமல், மனைவி என்ன ஆனாளோ என்று கலங்கித் தவித்திருப்பார்கள், பாவம்!'' என்று தந்தைக்கு வக்காலத்து வாங்கினாள் அவள்.

ஆனால், தனஞ்சயனும் அத்தோடு விட்டு விடவில்லை ''என்ன பெரிய ருசு?'' என்றான் ஏளனமாக.

கட்டிய மனைவியை நம்பாமல், கையில் வந்து விழுந்த ஆதாரத்தை நம்புவதா? கடவுள் படைத்த முக அமைப்புகளையே, திருத்தி அமைக்கிறார்கள். மனிதன் உருவாக்கிய போட்டோவையா மாற்ற முடியாது?'' என்று விடாமல் கேட்டான்.

அவளே தந்தையிடம் கேட்ட கேள்விதானே? இன்றைய உலகில் வாழும் தனாவாலும், இதை நம்ப முடியவில்லை, பாவம்!

தந்தை தனக்குச் சொன்ன பதிலையே, அவளும் தனஞ்சயனுக்குச் சொன்னாள். ''இதே கேள்வியைத் தான், அப்பாவிடம் நானும் கேட்டேன், தனா. ஆனால், யோசியுங்கள். சம்பவம் நடந்தது, இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர். இன்றைக்கானால் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை, அத்தனை உறுப்புகளையுமே மாற்றிச் சீரமைத்துக் கொள்ளலாம். போட்டோ எம்மாத்திரம்? ஒன்றுமே கிடையாதுதான். ஆனால் அன்றைக்கு 'டெக்னாலஜி' இவ்வளவு முன்னேறவில்லையே! அந்தக் கால கட்டத்தில் போட்டோவும் பெரிய ருசுதான், தனா. அதனால்தான், அந்த அம்மாவாலும் மறுக்க முடியவில்லை!'' என்றாள் அவள்.

''ஏன் 'அந்த' அம்மா என்று, ஓர் அடைமொழி கொடுத்துக் குறிப்பிடுகிறாய்? உன்னைப் பெற்றவர்கள் என்றால், உன் தாயார் தானே? சும்மாவே, அம்மா என்பதுதானே?'' என்று, காரணமற்றுச் சிடுசிடுத்தான் தனஞ்சயன்.

ஒருவேளை, பிரச்சினையின் பின் விளைவு இப்போதுதான் அவனுக்கு முழுதாகப் புரிகிறதோ?

''என்னைப் பொறுத்தவரையில், யாருக்காகவோ, பெற்ற குழந்தையை வேண்டாம் என்று விட்டுவிட்டுப்

போகிறவர்கள் எல்லாம் 'அம்மா' கிடையாது, தனா'' என்றாள் அவள் வெறுப்புடன்.

தொடர்ந்த சிறு அமைதியின் பின் ''சரி. அது எப்படியோ போகட்டும். இந்த விவகாரம், எப்போதோ நடந்தது. இதற்காக இன்று நாம் ஏன் பிரிய வேண்டும்?'' என்று தனஞ்சயன் இன்னொரு விவரம் அவளிடம் கேட்டான்.

''அது...'' என்று ஒருகணம் தயங்கிய நிரஞ்சனி ''தனா, எனக்குச் சொல்லாமலே. எங்கள் வீட்டில் திருமணம் செய்ய எண்ணி, வரன் தேடியிருக்கிறார்கள்...'' என்று தொடங்கி, நடந்த அனைத்தையும், அவனிடம் தெரிவித்தாள்.

அன்று கேட்ட, பாட்டியின் பேச்சு வரை சொல்லி முடித்த போது, அவளது கண்களில் நீர் வழிந்தது.

''பாருங்கள் தனா. நீங்கள் சுயமாய் உழைத்து முன்னேறி, சமூகத்தில் ஓர் உயர்ந்த நிலையைக் கஷ்டப்பட்டு அடைந்திருக்கிறீர்கள். இந்த நிலையில் என்னால், உங்கள் வாழ்வில் ஒரு சிறு கறை படவும், நான் விடமாட்டேன், தனா. என்னை மணப்பதே உங்களுக்கு இறக்கம் என்று தெரிந்த பிறகும், அதை எப்படி நான் அனுமதிப்பேன்? ஜாடை மாடைப் பேச்சுகளும், முதுகுக்குப் பின்னால் கிசுகிசுப்புகளும் எவ்வளவு வேதனையாக இருக்கும்? உயர்ந்த நிலைக் குடும்பத்தினர், உங்களை ஒதுக்கலாம். இதனால், தொழில் கூடச் சரிவு ஏற்படலாம். எதற்கு, தனா? பேசாமல் என்னை மறந்துவிட்டு, வேறு நல்ல பெண்ணை மணந்து நிம்மதியாக இருங்கள்'' என்று கரகரத்த குரலில் கூறி முடித்தாள்.

"ஓ! நல்ல ஐடியாதான். ரொம்பவே! இப்படி ஒரு யோசனை சொன்னதற்கு, மனமார்ந்த நன்றி! என் விஷயம் எளிதாக

முடிந்தது! அடுத்து அம்மையார், தியாகசீலி என்ன செய்யப் போவதாக உத்தேசம்? ஏதாவது மடத்தில் சேர்ந்து பெண் துறவி ஆவதாகவா? ஹூம், இந்தப் பேச்சுக்கு, ஓங்கி ஓர் அறை விட்டிருக்க வேண்டும். ஆனால், நீயும் வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறாயே என்றுதான் பொறுத்துப் போகிறேன்'' என்றவன் ஒரு கணம் யோசித்து ''ஆனால்.. ஏதோ ஒரு காரணத்தால், ஒருவேளை, நீயே என்னை வெறுத்துவிட்டால், அது வேறு விஷயம், நிரஞ்சனி. ஆனால், இப்போதைக்கு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். ஓரிரு... இரண்டு நாட்கள் ஆகட்டுமே. திடுமென நேர்ந்த இந்த அதிர்ச்சியின் தாக்கம் சற்று அடங்கிய பிறகு, இது பற்றி நாம் மீண்டும் பேசலாம்'' என்று அந்தப் பேச்சை முடித்தான்.

அவளது முகத்தை ஒருதரம் கூர்ந்து நோக்கிவிட்டு ''அந்த 'ஷோரூம்' திறப்பு விழாத் தொடர்பாகத் தெளிவாக பேச, இன்று உன்னால் இயலாது என்று தோன்றுகிறது. ஆனால் ஒரேயடியாகச் சந்திப்பை ரத்து செய்தால், சகுனத் தடையாக எண்ணக்கூடும். அதனால் அங்கே போய், இன்னின்னது இப்படி என்று மேலெழுந்தவாரியாக மட்டும் பேசிவிட்டு, நேரமில்லை என்று கிளம்பிவிடலாம். துல்லியமாக விவரங்களை, வாரக் கடைசியில் பேசி முடிக்க ஏற்பாடு செய்துகொள். இப்போதைக்கு மற்றதை மறந்து, மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முயற்சி செய்'' என்றுரைத்து, ஒரு சட்டையை மாட்டிக் கொண்டு, அவளுடன் கிளம்பினான் தனஞ்சயன்.

''இல்லை தனா. என்றானாலும், இந்த 'ஓடிப் போனவளுடைய பெண்' என்கிற பட்டம் என்னை விட்டுப் போகப் போவது இல்லைதானே? அப்புறம் எதற்காக,

இரண்டு நாள், நாலு நாள் என்று முடிவெடுப்பதைத் தள்ளிப் போடுவது?'' என்று செல்லும் வழியில் நிரஞ் சனி கேட்கத்தான் செய்தாள்.

எண்ண எண்ண ஏக்கமும் வேதனையும்தானே?

முடிவென்று ஏற்பட்டுவிட்டால், அதிலிருந்து மீண்டு, அவனது வாழ்வாவது தழைக்கலாமே என்பது அவளுக்கு.

ஆனால் ''எல்லாம் வல்ல உன் பாட்டியே இப் போதைக்கு விஷயத்தை ஆறப் போடத்தானே, சொல்லி யிருக்கிறார்கள்? அந்தம்மாள் சொல்வதை, அப்படியே செய்வது, உங்கள் வீட்டில் எல்லோருக்கும் பழக்கம்தானே? இப்போதும், அதையே பின்பற்றுவதாக எண்ணிக்கொள்'' என்று சிறு கடுப்புடன் கூடிய குரலில், அதட்டலாகவே கூறி, அந்தப் பேச்சை முடித்துவிட்டான் அவன்.

மறுபடியும் அவள் அந்தப் பேச்சைத் தொடர வழி யின்றி, ''இனி வேறு பேச நேரமில்லை, ரஞ்சனி. தயாசந்த் குரூப் பெரியது. அண்ணாநகரில் தொடங்கி, தாம்பரம் வரை போக இருக்கிறார்கள். நீ விரும்புகிற வளர்ச்சிக்கு, இது ஒரு நல்ல அடிப்படையாக அமையக் கூடும். அதனால் 'ஷோரூம்' திறப்பு விழா தொடர்பான அடிப்படை விஷயங்களை ஆலோசித்து, அங்கே பேச வேண்டியதைத் திட்டமிடுவோம்'' என்று அது விஷய மாக அவன் பேசத் தொடங்கவும், வேறு வழியின்றி, அவளும் அவனையே தொடர வேண்டியதாயிற்று.

ஆயினும், சென்ற வேலை முடிந்து, அவன் வர வழைத்த கால் டாக்சியில் அவள் ஏறியதும், கார்க் கதவை மூடுமுன், ''இதையே நினைத்துக் கொண்டி ராதே, ரஞ்சி. அன்றாட வேலைகளில் சற்று அதிகமாக

கவனம் செலுத்தினாலே, மனம் சற்றுத் தெளிவடையத் தொடங்கிவிடும். அதற்கு முயற்சி செய்'' என்று கனிந்த குரலில் இதமாகவே சொல்லி, அவளை அனுப்பி வைத்தான்.

ஆனால், அவன் என்னதான் சொன்னாலும், நிரஞ் சனியால் அமைதி அடைய முடியவில்லை.

அவனது கனிவும் காதலும், பரிவும் பாசமும்... கோபம் கூட அவளது தவிப்பை அதிகரிக்கவே செய்தன.

அந்தக் கோபமும், அவளுக்காகத்தானே?

ஆனால், சொந்த வாழ்வு பற்றி, அதிக நேரம் யோசித் துக் கொண்டு இருக்க, வீட்டில் அவளுக்கு அவகாசம் இருக்கவில்லை.

ஏனெனில், ஆடிட்டரைப் பார்த்துவிட்டு, தன் மகனை அலுவலகத்தில் விட்டுவிட்டு, அவளுடைய பாட்டி அவளுக்கு முன்னாலேயே வீடு திரும்பியிருந்தாள். தன் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து, அவளுக்காகக் காத்துக் கொண்டும் இருந்தாள்.

கொலைவெறியோடு காத்திருப்பதாக, நிரஞ்சனிக் குத் தோன்றியது.

பேத்தியைப் பார்த்ததுமே, ''எங்கேடி ஊர் சுற்றிவிட்டு வருகிறாய்?'' என்று தன் வழக்கமான உரத்த குரலில் அதட்டிக் கேட்டாள்.

''ஊர் சுற்றவில்லை. வேலை விஷயமாகப் போய் விட்டு வருகிறேன்'' என்று தரையைப் பார்த்தவாறே, சிறு குரலில் பதிலிறுத்தாள் சின்னவள்.

''இந்தக் கதையை நான் நம்ப வேண்டுமா? காலை யில் என் தலை மறைந்ததும், சிவாவைப் பிடித்து

இழுத்துக் கொண்டு போயிருக்கிறாய். தன் பங்குக்கு அலைந்து திரிந்துவிட்டு, அந்தத் தறுதலை திரும்பி வந்து, இரண்டு மணி நேரம் ஆகிறது. நீ வந்திருக்கும் நேரத்தைப் பார்! குடும்பப் பெண், இவ்வளவு நேரம் தெருவில் சுற்றினால், பார்க்கிறவர்கள் என்ன சொல்லு வார்கள்? தையல்நாயகி வீட்டு மானம் நடுத் தெருவிலே பறக்கிறது என மாட்டார்கள்? அப்புறம் உன்னை யார் கட்டுவார்கள்?''

''யாரும் கட்ட வேண்டாம்'' என்று வெடித்தாள் நிரஞ்சனி. ''நான் என்ன உங்களிடம் கேட்டேனா? எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்றாள் அழுகா வேசத்தோடு.

''என்னடீ கத்துகிறாய்? பெரியவர்கள் என்கிற மட்டு மரியாதை இல்லை? உன் அப்பன் வரட்டும் சொல்லு கிறேன். பெரியவர்கள் சொன்னால் நல்லதற்கு என்று பணிவாகக் கேட்டுக் கொள்ளாமல், என்ன திமிரடி உனக்கு? அந்த ரத்தமாயிருக்கும்!''

உள்ளே அங்கங்கிருந்து எட்டிப் பார்த்த முகங்கள் பயத்துடன் விலகின.

இவர்கள் மூலம்தான் பாட்டிக்குச் செய்தி போயிருக் கும். ஆனால், அவர்களைச் சொல்லியும் பயனில்லை.

பாட்டி நோண்டி நோண்டிக் கேட்கும்போது, பதில் சொல்லாமல் முடியாது. சொல்ல மறுத்தால், இங்கே வேலையில் நீடிக்கவும் முடியாது.

ஆனால், பாட்டியின் 'அந்த ரத்தம்' தந்த வலியால் ''திமிர் என்ன பாட்டி? லைப்ரரிக்குப் போனோம். அப்புறம், ஒரு திறப்பு விழாவில் என் வேலை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசிவிட்டு, இப்போதுதான்

வருகிறேன். வேண்டுமானால்... நீங்களே பாருங்கள்'' என்று பிடிவாதகமாக அந்த தயாசந்த் நிறுவனத்துக்கு அழைத்துச் சென்ற தனஞ்சயனுக்கு உள்ளூர நன்றி சொன்னபடி. திறப்பு விழா அழைப்பை எடுத்துப் பெரிய வளிடம் காட்டினாள்.

அழைப்பிதழில் தேதியைப் பார்த்து, கூடவே பணமும் வரும் என்பதாலும் திருப்தி அடைந்த தையல் நாயகி, ஒருவாறு பேத்தி ஊர் சுற்றும் பேச்சை விட்டாள்.

அப்போதும் ''வீணாக உட்கார்ந்து தண்டச் சோறு தின்னாமல், ஏதோ செய்து சம்பாதிக்கிறாய், அந்த மட்டும் பரவாயில்லை, போ. போய், ஏதாவது சாப்பிடு. வயிற்றைக் காயப்போட்டு வைத்தியச் செலவு எதையும் இழுத்து வைக்காதே'' என்ற புத்திமதியோடு, பேத்தியை விலகிப் போக அனுமதித்தாள்.

தப்பித்த உணர்வோடு அவளது அறைக்குச் சென்று, உடம்பு கழுவிக் கொண்டு வந்து 'அப்பாடி' என்று, நிரஞ்சனி படுக்கையில் உட்கார்ந்தாள்.

ஆனால், உடல் சற்று தளரும் முன்பாகவே, கதவில் ஒரு தட்டலுடன், கற்பகம் உள்ளே வந்தாள். கையில் இருந்த தட்டில் ஏதோ உணவு வகை. படுக்கையில் அருகே இருந்த சிறு மேஜையில் உணவுத் தட்டை வைத்துவிட்டு திரும்பி ''உன்னிடம் பேச வேண்டுமே, நீரும்மா'' என்றாள், மென்குரலில்.

''சித்தி, நீங்களுமா? ஐயோ, வேண்டாம், சித்தி'' என்றாள் பெண், அலுப்பும் களைப்புமாக.

''என்னடா செய்வது? அம்மாவாக இருக்கும்போது, இதெல்லாம் செய்து தானே ஆக வேண்டியிருக்கிறது?'' என்றாள் கற்பகம், கவலை தோய்ந்த குரலில்.

''அம்மாவாகவா? என்னைப் பெற்ற அந்த அம்மா போலவா? வேண்டாம் சித்தி. நீங்கள் என் சித்தியாகவே இருங்கள்!'' என்றாள் நிரஞ்சனி கசந்த குரலில்.

''அட என் கண்ணே!'' என்று அருகில் வந்து கட்டி லில் உட்கார்ந்து இருந்தவளின் தலையை வயிற்றோடு சற்று நேரம் அணைத்திருந்துவிட்டு ''எப்படியாவது சாப்பிட்டு விடும்மா'' என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனாள், அந்தப் பெறாமல் பெற்றவள்.

'பசித்த வயிறு. கண்ணுக்குத் தெரியாத எதிரி' என்று கற்பகம் அடிக்கடி சொல்வதுண்டு. வேளைக்கு உண வருந்தாமல் விடவும் மாட்டாள்.

ஒருவேளை இந்த சோர்வு மாறக்கூடுமா என்று, நிரஞ்சனி சாப்பிட்டுப் பார்த்தாள். உணவை உள்ளே தள்ளத்தான் வேண்டியிருந்தது.

அலுப்புடன் பாதியிலேயே கையைக் கழுவிக் கொண்டு வந்தால், தம்பி வந்து நின்றான் ''நீ சொன்னது போல, ஒரு மணி நேரம் சுற்றிவிட்டுத்தான் வந்தேன்க்கா'' என்றான் அவன். ''ஆனாலும் வறுத்தெடுத்துவிட் டார்களா?'' என்று கவலைப்பட்டான்.

''பெரிதாக ஒன்றுமில்லையடா'' என்று அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தால், வேலைக்காரப் பெண் உள்ளே வந்தாள் ''பெரியம்மா, ரொம்பவும் மிரட்டினாங்கக்கா, அதான். நீங்கள் உடனே வெளியே போனதைச் சொல்லிவிட்டேன்'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

அடுத்துத் தந்தை! பாட்டியை அனுசரித்துப் போகு மாறு, கொஞ்சம் புத்திமதி.

அலுத்துப்போய், சின்ன ஹால் டீவியின் முன் போய் நிரஞ்சனி உட்கார்ந்தாள்.

இரவு உணவின் பின்னரே குறுக்கீடற்ற தனிமை கிட்ட, மனம் விழுந்தடித்துக் கொண்டு தனஞ்சயனிடம் ஓடிற்று.

என்ன தப்பு செய்தாலும், பொருட்படுத்த மாட்டேன் என்றானே, என்ன அன்பு என்று உருகினாள்.

அவனது கோபத்தை எண்ணிப் பார்த்தபோதும், அதே உருக்கம்தான். இந்த அன்பை இழப்பது எவ்வளவு கொடுமை!

அவளைப் பெற்றவள் என்பதற்காக, அந்த அம் மாவைக் கூடத் தாங்கிப் பேசினானே! தந்தையிடம் கூடத் தப்புக் கண்டுபிடித்தானே! கட்டிய மனைவியை நம்பாமல், கையில் விழுந்த ருசுவை...

'விலுக்'கென்று படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்த நிரஞ்சனிக்கு உடம்பு மட்டையாய் விறைத் துப் போயிற்று. ஒரு கணம் நின்றுவிட்ட நெஞ்சு இரு மடங்கு வேகத்துடன் படபடவென்று துடிக்கலாயிற்று!

கட்டிய மனைவியை நம்பாமல், போட்டோவை நம்புவதா என்று கேட்டானே!

தாயின் பிழையை நிரூபிக்கும் ருசு போட்டோதான் என்று, அப்போது அவள் சொல்லவே இல்லையே!

அவள் சொல்லு முன்பாகவே, தனஞ்சயனுக்கு, அந்த போட்டோக்கள் பற்றி எப்படித் தெரியும்? எப்படித் தெரிய முடியும்?

இதற்கு என்ன அர்த்தம்?

# 9

யோசிக்கக் கூட முடியாமல், நிரஞ்சனியின் மூளை, சற்று நேரம் மரத்துப் போயிற்று.

கொஞ்சம் இயல்பு நிலை திரும்பவும், தனக்குத்தான் ஏதோ முன் பின் முரணாக நினைவு வந்துவிட்டதோ என்று சந்தேகம் வந்தது. ஒருவேளை, அப்படியும் இருக்க லாமே!

எனவே கவனத்துடன், மறுபடி யோசித்துப் பார்த்தாள்.

தனஞ்சயனின் பெரிய ப்ளாட்டுக்குள் போனதி லிருந்து, முதலில் அவனது கேலி, அவள் முகம் பார்த்து உடனே மாறி, உள்ளே அழைத்துச் சென்று உட்காரச் சொல்லிக் காபி கொடுத்தது, காபி குடித்த பிறகு அந்தப் பேச்சு...

இல்லையே. போட்டோ பற்றி, அவள் முதலில் சொல்லவே இல்லை. அதில் சந்தேகமே கிடையாதே!

அதே போலத் தனஞ்சயன் தான் 'மனிதன் உருவாக் கிய போட்டோவை மாற்ற முடியாதா என்று முதலில் சொன்னான் என்பதும் முழுக்க முழுக்க, நூறு சதவீத நிச்சயமே!

ஏற்கனவே, அவளும் கிட்டத்தட்ட அதே போலவே தந்தையிடம் பேசியிருந்ததால், அவனாக போட்டோ பற்றிச் சொன்னது கூட, அப்போது அவளுக்கு விசித்திர மாகத் தோன்றாமல் போயிருக்கிறது.

ஆனால் இப்போது?

நிரஞ்சனியின் நெஞ்சுக்குள் ஒரு நடுக்கம் உண்டாயிற்று.

காலின் கீழ் இருக்கும் பூமி, கண் முன்னே இருக்கும் பொருட்கள் எதுவுமே உண்மையில்லை, பொய் என்பது போல ஒரு பிரமை, ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது.

ஒளிவு மறைவற்ற ஒத்த மனம். வாழும் காலம் முழுவதற்கும் உறுதியான துணை என்று அவள் நம்பிய தனஞ்சயனுக்கு, அவளுடைய தாயைப் பற்றி, அவளே அறிந்திராத விவரங்கள் எல்லாம் தெரிந்திருக்கிறது!

தெரிந்தும், அவளிடம் ஒரு வார்த்தை சொன்னதில்லை! மறைத்திருக்கிறான்! இனி அவனிடம் எதை நம்புவது?

ஆனால்.. ஒருவேளை, அவனுக்குமே ரொம்பத் தெரியாதோ? ஏதோ எப்போதோ கேள்விப்பட்டது மட்டும் தானோ?

தனஞ்சயனை நம்பத் துடித்த மனது, இன்னும் தீவிரமாக யோசித்தது. தெளிவுபடுத்திக் கொள்ளத் துடித்தது.

மோடாவை இழுத்துப் போட்டு உட்கார்ந்து, அவ்வளவு கரிசனத்தோடு கேட்டவன், தாயைப் பற்றி சொன்னதும் எழுந்துவிட்டானே! குரலில் கூட மாற்றம் இருந்ததோ?

அந்த அம்மாவுக்காக எவ்வளவு வக்காலத்து வாங்கிப் பேசினான்? 'அந்த அம்மா' என்றதற்கே ஆத்திரப்பட்டானே!

அப்படியானால், அவளைப் பெற்றவளைப் பற்றித் தனஞ்சயனுக்கு கட்டாயமாக, ஓரளவேனும் நன்றாகத் தெரிந்திருக்கிறது!

ஆனால், என்னென்ன தெரியும்? எப்போதிருந்து தெரியும்?

என்ன.. என்ன என்று யோசிக்கும்போதே, இன்னோர் அதிர்ச்சி, அலை போல வந்து, அவளைக் குலுக்கியது.

முதலில் அவனாகத் தேடி வந்து, பேச முயன்றானே, அதுவே, அவளுடைய அந்தத் தாய்க்காகத்தான்!

அப்போதே, அவன் என்ன சொன்னான்?

அந்த முதல் சந்திப்பு, துல்லியமாக நிரஞ்சனிக்கு நினைவு வந்தது.

முன்பு பார்த்த நினைவு என்று அவன் சொன்னதும், ஆண்களின் வழக்கமான தூண்டில் பேச்சு என்று எண்ணி, அவள் பதில் கொடுத்ததும், உன் தாயைப் பார்த்திருப் பேன் என்றானே! சமாளிக்கிறான் என்று அவள் எண் ணியது, நிஜமாக இருந்திருக்கிறது.

'தாயார் நலம்' என்றதும் ஏமாற்றத்தோடு போனானே! அவளது மிரட்டலுக்குப் பயந்து என்று, அவள் எண்ணியதுதான் முழுத் தவறு!

பெற்றவள் கூடவே இருப்பதால், அவள் வேறு யாரோ என்று எண்ணிப் போயிருக்கிறான்!

தொடர்ந்து, நிரஞ்சனியிடம் வந்து அவன் பேசியது எல்லாமே, அவளுடைய 'அந்தத் தாய்'க்காகத்தான்!

'ஏதோ காரணமாக நீயே என்னை வெறுத்துவிட் டால்....' என்றானே ஏன்? அதுவும் அந்தத் தாயின் சம்பந்தமாகத்தானா?

ஒருவேளை, அந்தத் தாய் உயிரோடு இருந்து, அவன் அதை மறைத்து... அதற்காக வெறுப்பாளோ என்று எண்

ணிச் சொன்னானா... என்று யோசிக்கும் போதே, அப்படி இராது என்று நிரஞ்சனிக்குத் தோன்றிவிட்டது.

அப்படித் தாயார் உயிரோடு இருந்தால், தாயையும் மகளையும் சந்திக்க விடாமல் பிரித்து வைக்கும் கொடியவன், அவன் அல்ல! அப்படி இருக்க முடியாது! நிச்சயமாக அப்படி இருக்காது. இன்னும் நிச்சயமாக, தாய் இருப்பது தெரிந்ததும் திரும்பிப் போயிருக்க மாட்டான்.

இது வேறு என்னவோ! அது என்ன?

பெற்றவளைப் பற்றிய பிரச்சனை ஒரு பக்கம் இருக்க, அவள் காதல், உயிர் நேசம் என்று எண்ணி மகிழ்ந்தது, ஏதோ காரணத்துக்காகத் தனஞ்சயன் மேற்கொண்ட நடிப்போ என்று எழுந்த சந்தேகம், அவளை ரொம்பவே துடிக்க வைத்தது!

இவை அனைத்தையும், தாயைப் பற்றியும் தன்னைப் பற்றியும் அவள் மனதில் எழுந்துள்ள எண்ணற்ற கேள்விகள் அனைத்துக்கும் பதில் தெரிந்தவன், தனஞ்சயன் மட்டுமே.

நல்ல நாயகனாக, அவள் நம்பி வரித்த ஆண்மகன்!

கும்மிருட்டில் துழாவி, அவள் தவியாய்த் தவிக்கும் போது, வெளிச்சத்தை அவன் எப்படி மறைத்து வைக்கலாம்? நேசிப்பதாகச் சொல்லி, மணக்கவும் கேட்டுவிட்டு?

அவளுக்கு, அவன் பதில் சொல்லியே தீர வேண்டும்! அவனைக் கேள்வி கேட்கும் உரிமை, அவளுக்கு நிச்சயமாக இருக்கிறது!

மணி பன்னிரண்டு என்பதை நிரஞ்சனி பொருட்படுத்தவில்லை. அவளுக்கு உடனே விவரம் தெரிந்தாக வேண்டும், அவ்வளவே!

ஆனால், செல் 'ரீச்'சில் இல்லை என்று வந்தது. வீட்டு எண்ணில் முயன்றால், அது செய்தியைப் பதிவு பண்ணிக் கொள்ளச் சொன்னது.

என்ன இது? இந்த இரவில், தனஞ்சயன் எங்கே போனான்?

பலமுறை முயன்றுவிட்டு, அலுத்து சோர்ந்து படுக்கையில் விழுந்து, அப்படியே உறங்கிப் போனாள் நிரஞ்சனி.

அடுத்த இரண்டு நாட்களும் கூட, அவள் பலமுறை முயன்றும், தனஞ்சயனோடு தொடர்பு கொள்ள, அவளால் முடியாமலே போயிற்று.

வீட்டில் இருந்து முயன்றால், பாட்டிக்குப் பதில் சொல்ல முடியாது என்று, வேலை விஷயமாக என்று வீட்டை விட்டு வெளியே சென்று முயற்சித்துப் பார்த்தாள்.

ஏதோ சந்தேகம் தோன்ற, அவனது வீட்டுக்கே போய்ப் பார்த்தால், மெய்யாகவே, தனஞ்சயன் வீட்டில் இல்லை.

குறுகுறுத்த பார்வைகளை அலட்சியம் செய்து, அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது, ''முந்தாநாள் மதியத்துக்கு மேலே காரை எடுத்துக் கொண்டு, ஊருக்குக் கிளம்பி விட்டாரே! வர இரண்டு நாளாவது ஆகும் என்று, வாட்ச் மேனிடம் சொன்னாராம். உங்கள் கிட்டே சொல்லலியா'' என்று அவளிடமே விசாரித்தார்கள்.

''அவரை என்ன விஷயமாகப் பார்க்க வேண்டும்?'' என்று வினவியது, ஒரு ஜீன்ஸ்.

''யார் வந்து தேடியதாகச் சொல்லட்டும்?'' என்று ஜீன்சின் இரட்டை போலத் தோன்றிய இன்னொருத்தி, மறை முகமாக விவரம் கேட்டாள்.

சட்டென சுதாரித்து, நெற்றியில் தட்டி ''அடடா! ஊருக்குப் போவதாகச் சொன்னதை மறந்து போய்..

தயாசந்த் ஷோரூமுக்கான அழைப்பிதழ் விஷயமாகப் பேச வேண்டியிருந்தது... சரி சரி, நான் ஊருக்கே போன் போட்டுக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று விட்டு மேலே யாரும் எதுவும் கேட்குமுன் வேகமாகத் திரும்பி வந்து விட்டாள்.

காவலாள் அவளிடம், ஏற்கனவே இதையேதான் சொன்னான்.

ஆனால், அவளுக்குத்தான் அதில் நம்பிக்கை இல்லை. வீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லச் சொன்னானோ என்று சந்தேகம்!

சந்தேகம் என்று வந்துவிட்டால், என்னவெல்லாம் எண்ணத் தோன்றுகிறது?

ஆனால், நம்பும்போது, கண்களை இறுக மூடிக் கொள்வது? இடுக்கு வழியாகக் கூட எட்டிப் பார்ப்பதே இல்லை.

ஆனால் இதில் ஒரு விஷயம் தெளிவாக இருந்தது.

பொறுமையாக இருக்கும்படி, அவளிடம் அவன் சொன்ன இரண்டு நாட்கள்.

அதுவரை, அவள் கண்ணில், அவன் படப் போவது இல்லை!

அதற்குப் பிறகும், இன்றைய நிலையில் எதுவும் நிச்சயம் இல்லை.

ஆயினும், குறைந்தபட்சமாக, மறுநாள் மாலை வரை, அவள் பொறுத்துத்தான் ஆக வேண்டும்.

எப்போதும் போல நடந்து கொள்வதாகத்தான், நிரஞ்சனி நினைத்திருந்தாள்.

ஆனால், அன்றிரவு எல்லோரும் படுக்கப் போன பிறகு, மகள் அறைக்குள் கற்பகம் தனியே வந்து ''என்னம்மா? அம்மா நினைவாகவே இருக்கிறதா?'' என்று மெல்ல வினவவும் நிரஞ்சனி திடுக்கிட்டாள்.

எதையும் முகத்தில் காட்டிக் கொள்ளக் கூடாது என்று நினைத்து நடக்கவில்லை. கூடவே, நல்லவளான இந்தத் தாயையும் வருத்தியிருக்கிறாள்.

சிற்றன்னையை லேசாக அணைத்து ''நீங்கள் இருக்கும்போது, வேறு யார் நினைவும், எனக்கு எப்படி வரும், சித்தி?'' என்றாள் கொஞ்சுதலாக.

அதுவும், சின்னஞ்சிறு குழந்தையிலேயே என்னை உதறிவிட்டுப் போனவளை என்று நினைத்தபோதும், ஏனோ வாய்விட்டுச் சொல்ல வரவில்லை.

தனஞ்சயன், அவ்வளவு தூரம் அந்த அம்மாவுக்காகப் பரிந்தானே? ஒருவேளை அவளும் நல்லவளாக இருந்தால்?

எப்படியும், அன்னை இவள்தான் என்றாலும் மற்றவளைத் திட்டுவானேன்?

''இன்னும் பாலை குடிக்கவில்லையா?'' என்று மேஜையில் பார்த்து கேட்டுவிட்டு, ''அப்படியானால், அந்தப் பையன் விஷயமாக ஏதும் தகராறா?'' என்று வினவி மகளை மெய்யாகவே அதிர வைத்தாள் கற்பகம்.

''சித்தீ!''

''ஷ்! மெதுவாகப் பேசு! எப்படித் தெரியும் என்று இருக்கிறதா? உங்கள் செட்டின் அம்மாக்கள், எனக்கும் பழக்கம் தானே? உங்களுக்குள் நடப்பது, எங்களுக்கும் வரத்தானே, செய்யும்?''

''ஓ!'' என்று சிற்றன்னை சொன்னதை உள்வாங்கியவள் ''அப்படியானால், வேற மாப்பிள்ளை, ஏன் பார்த்தீர்கள்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

வரன் பார்த்த விவரம் கற்பகம் தெரிவித்தாள். ''முதலில், அது உன் பாட்டியின் யோசனை. இந்த வீட்டில் அதை மறுப்பது, யார்? கூடவே, நீயும் ஒன்றும் காட்டிக் கொள்ளாததால், ஒருவேளை வெறும் வதந்திதானோ என்று நினைத்தேன். உண்மை என்றால், கிட்டி முட்டி வரும் போது சொல்லாமல் இருக்க மாட்டாய் என்ற நிச்சயமும் இருந்தது'' என்றாள் அவள்.

தொடர்ந்து ''சொல்லும்மா. அது உண்மையா? அல்லது வதந்தியா?'' என்று கேட்டாள்.

கண் மூடித் திறந்தாள் நிரஞ்சனி. மெல்லத் தலையசைத்து ''வேண்டாம் சித்தி. நான் ரொம்பவும் குழம்பிப் போய் இருக்கிறேன். இப்போது என்னை எதுவும் கேளாதீர்கள். எனக்குத் தெளிவு வரும்போது, நானே சொல்லுகிறேன். அதுவரை விட்டு விடுங்கள்'' என்று முடித்து விட்டாள்.

மறுநாள் மாலை வரை என்று நிரஞ்சனி நினைத்திருக்க, சுமார் பத்து மணிக்கே, தனஞ்சயன் அவளைக் கூப்பிட்டான்.

''உன்னிடம் தனியே பேச வேண்டும். என் ப்ளாட்டுக்கு வருகிறாயா?'' என்று கேட்டான்.

அவளது கேள்விகளும் அவனுக்கு மட்டும்தான். எனவே, உடனே கிளம்பி அவனது இடத்துக்குச் சென்றாள்.

அவனது இடத்தை ஒட்டிய கார்ப் பார்க்கில், அவனது டயோட்டா தூசு படிந்து நின்று, அதன் சொந்தக்காரன் பயணம் செய்திருப்பதைப் பறைசாற்றியது.

கதவைத் திறந்து உள்ளே அழைத்தவனின் கண்களில் சற்றுக் களைப்புத் தெரிந்தபோதும், குளித்து உடை மாற்றியதாலோ என்னவோ, வழக்கமான துடிப்புடன் தான் காணப்பட்டான்.

''வாவா. உள்ளே வந்து உட்கார்'' என்று அழைத்தவன், ஏற்கனவே கலந்து ப்ளாஸ்கில் தயாராக வைத்திருந்த காபியை ஒரு கப்பில் ஊற்றி, அவள் முன் வைத்தான்.

அடுத்த கப்பில் தனக்கும் ஊற்றியவன், ''பயங்கர மாய்த் துப்பறியும் வேலையெல்லாம் நடந்தது போல? இங்கே வந்து என்னைத் தேடினாயாமே!'' என்று கேட்ட படி காபியுடன் தானும் அமர்ந்தான்.

''போட்டோ?''

வறண்டிருந்த தொண்டைக்கு காபி தேவையாகத் தான் இருந்தது. ஒரு மிடறு அருந்தித் தொண்டையை நனைத்துக் கொண்டு ''உங்களுக்கு முன்பே தெரியும்'' என்றாள் குற்றம் சாட்டும் குரலில்.

அவள் முகத்தைப் பார்த்து விட்டு ''ம்'' என்றான் அவன் ஒப்புதலாக.

என்ன சாதாரணமாகச் சொல்லுகிறான்!

''என்னிடம் ஏன் சொல்லவில்லை? சொல்லாமல் ஏன் மறைத்தீர்கள்?'' என்றாள் கோபத்தில் சுதி ஏற.

''அப்படி இல்லை ரஞ்சனி. பாதிக்கப்பட்டவர்கள், எப் போதோ இறந்து போனார்கள். இன்னொரு நல்ல பெண் மணி தாயாகக் கிடைத்திருக்கையில், பழசைக் கிளறி, உன் வீட்டில் பாதிப்பை ஏற்படுத்துவானேன் என்றுதான் பேசாதிருந்தேனே தவிர. மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் அல்ல'' என்றான் தனஞ்சயன் தணிவாக.

சொத்தென்று கோபம் மறைய, ''அப்படியானால் அவர்கள் இ.. இறந்தே விட்டார்களா? எப்.. எப்போது?'' என்று கேட்ட போது நிரஞ்சனியின் குரல் கம்மி விட்டிருந்தது.

''காபி ஆறிப் போகும். முதலில் அதைக் குடித்து முடி.''

அவன் சொல்லப் போகும் பதில் என்னவென்று, நிரஞ்சனிக்குப் புரிந்தது.

நினைவு தெரிந்ததில் இருந்தே, பெற்றவள் இறந்து விட்டாள் என்ற எண்ணத்திலேயே வளர்ந்தவள்தான். அறியாத தாயின் மறைவை இழப்பாக உணராதவளும் கூட.

ஆனால், இன்று அவளது இறப்பைப் பற்றிய வார்த்தைகளைப் பேசும்போது, நெஞ்சு கனத்தது.

அவன் சொன்னதற்காக ஒரு மடக்கு விழுங்கியவள், மீதிக் காபியோடு கப்பை வைத்துவிட்டாள், ''சொல்லுங்கள். எப்போது?''

''ரொம்பவும் முன்னதாகவே. உன் தந்தையைப் பிரிந்து சென்று ஓர் ஆண்டுக்கு உள்ளாகவே இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு, கொடிய ஆட்கொல்லி நோய் ஒன்று வந்திருந்தது!''

அவனை ஆழப் பார்த்து, ''நோய் எப்போது வந்தது?'' என்று கேட்டாள் அவள்.

ஒரு சிறு கண்டனப் பார்வையோடு 'தப்பும்மா' என்பது போலத் தலையசைத்தான் அவன்.

அவளது பார்வை தாழவும் ''குறைந்த பட்சமாக, உன் தந்தையை விட்டுப் பிரிவதற்கு நாலைந்து மாதங்களுக்கு முன்பாகவே, அவர்களை அந்த நோய் தாக்கியிருக்க

வேண்டும். பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்றாலும், முதலிலேயே சிகிச்சை செய்யத் தொடங்கி இருந்தால், இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கக் கூடும் என்பது, வைத்தியரின் கருத்து'' என்றான் தெளிவாக.

இப்போது, இவன் குற்றம் சாட்டுகிறானா?

ஆனால் அந்த போட்டோக்கள்? அந்தப் பழைய காதலன்?

பெரிதாக மறுக்கவில்லை என்று தந்தை சொன்னாரே!

மேலும் யாரும் விரட்டாமல் தானாகத்தானே போனார் கள்?

அத்தோடு, அந்தம்மா பெற்ற மகள், அவளுக்குத் தெரியாதது, இவனுக்குத் தெரிந்திருப்பது எப்படி?

எத்தனையோ கேள்விகள் மனதுள் முட்டி மோத, ''இப்போதாவது சொல்லுங்கள், என்ன நடந்தது?'' என்றவனிடம் கேட்டாள்.

''எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் தெரிந்தவரை சொல்லுகிறேன்'' என்று அன்று போலவே, ஒரு மோடாவை இழுத்துப் போட்டுக் கொண்டு தனஞ்சயன் அவள் எதிரே அமர்ந்தான்.

''தில்லைநாதன் ஒரு போட்டோகிராஃபர்.''

''ஓ!''

''ஆமாம். அந்த போட்டோக்களை எடுத்த, அதே போட்டோகிராஃபர்தான். ஸ்டூடியோ வாடகை கூட, ஒழுங்காகக் கொடுக்க முடியாத கஷ்ட ஜீவனம். இந்த நிலையில், மனைவி இரண்டாம் முறையாகக் கருவுற்றிருந் தாள். முதல் பிள்ளைக்கே செத்துப் பிழைத்ததாகச் சொல்லுவார்கள். சத்துக் கெட்ட நிலையில் உருவான

இரண்டாவது குழந்தையால், தாயின் உடல்நிலை இன்னும் மோசமாயிற்று. மருத்துவமனையிலேயே, படுக்கையில் வைத்து பராமரிக்க வேண்டிய நிலைமை! தேவை, ராஜ வைத்தியம்!

''சாப்பாட்டுக்கே சங்கடப்படும் தில்லைநாதன், இதற்கு எங்கே போவார்?

''இந்தக் கஷ்டத்தில் இருந்த அந்த போட்டோ கிராஃபர் தில்லைநாதனை, அந்த அம்மா எப்படி கண்டுபிடித்தார்களோ? ஏதேனும் துப்பறியும் நிறுவனத் தின் உதவியை நாடினார்களோ? தற்செயலாகத் தெரிந்து கொண்டார்களோ, அது தெரியாது.

''ஒருநாள், நடுத்தர வயதில் இருந்த ஒரு பெண், அந்த அம்மாள்தான், தில்லைநாதனைச் சந்தித்து, தனக் காக ஒரு வேலை செய்து தரச் சொன்னாள். கூலியாகப் பெரும் பணம் தருவதாகவும் சொன்னாள். அவள் தருவ தாகச் சொன்ன தொகையைக் கேட்டதும், தில்லைநாத னுக்கு மயக்கம் வந்தது.

''அந்தப் பணத்தை மருத்துவமனையில் கட்டினால், மனைவியும் குழந்தையும் பிழைப்பார்களே.

''அந்தப் பணத்துக்காக, ஓர் அழகிய பெண்ணின் படத்தையும், இன்னொருவன் படத்தையும் கொடுத்து, சில நெருக்கமான போஸ்களில் பல படங்கள் தயார் பண்ணி, அந்த படங்களைப் புகைப்படமாகவே ஒரு ரோல் எடுத்து, குன்னூர்ப் பக்கமாக உள்ள சிற்றூர் ஒன்றில் உள்ள ஒரே ஸ்டுடியோவில், டெவலப் பண்ணக் கொடுக்க வேண்டும்.

''இந்த வேலைக்குரிய கூலி எவ்வளவு அதிகமோ, அதே போல, விஷயம் வெளியே தெரிந்தால், தண்

டனையும் கிடைக்கும். குடும்பத்தையே அழித்து விடுவ தாக, அவள் சொன்னது வெறும் மிரட்டல் அல்ல என்பது, தில்லைநாதனுக்கு நிச்சயம்!

''தான் மறுத்தால், இன்னொருவனை வைத்து, அந்த அம்மாள் காரியத்தைச் சாதிக்கத்தான் போகிறாள். அதை, அவரே செய்தால் கட்டிய மனைவியும் பிறக்கப் போகும் குழந்தையும் பிழைப்பார்களே!

''தில்லைநாதன் சம்மதிக்கவும், அவருக்குத் தேவை யான பெரும் தொகையை, முன்பணமாகவே கொடுத்து விட்டாள், அந்தப் பெண். மனைவியை மருத்துவமனை யில் சேர்த்துவிட்டு, அவள் சொன்ன வேலையைச் செய்யத் தொடங்கினார் போட்டோகிராஃபர்.

''எதற்கும் இருக்கட்டும் என்று உபரியாக ஒரு செட் தயார் பண்ணிவிட்டு, அந்தப் பெண் சொன்னபடி, செய்து முடித்துவிட்டார்.''

''செய்தே முடித்துவிட்டாரா? ஐயையோ! தனா, அந்த படத்தில் இருந்த பெண்தான், என் அம்மாவா, தனா?'' என்று அகன்று விரிந்த கண்களில் தவிப்புடன் கேட்டாள் நிரஞ்சனி.

அவனது பதிலுக்காகக் காத்திராமல், ''ஐயோ என்ன அநியாயம்! என்ன மாதிரி குயுக்தி! தப்புத் தப்பாகப் பல படங்களை தயாரித்து, அவைகளைப் புகைப்படம் எடுத் தால், நேராக போட்டோ எடுத்தது போலத்தானே தோன் றும்? அன்றைய கால கட்டத்தில், சூதாகவே தோன்றாதே! ஒரு பெண்ணின் வாழ்வை இப்படி அழிப்பதா? இந்தப் பாவம், சும்மா விடுமா?'' என்று கொதிப்புடன் படபடத் தாள்.

''சும்மா விடவில்லை, ரஞ்சி'' என்றான் தனஞ்சயன் தாழ்ந்த குரலில். ''பாவம் செய்து சம்பாதித்த பணம்

அல்லவா? அந்தப் பணத்தை கட்டி, மருத்துவம் பார்த்ததால், வயிற்றுக் குழந்தை இறந்தே பிறந்தது. உடல்நிலை மோசமாகிக்கொண்டே வந்த மனைவியும் இறந்து போனாள். அதற்குள் வாங்கிய பணம் கிட்டத் தட்ட முழுதும் செலவாகிவிட, தில்லைநாதனுக்கு வயிற்றுப்பாட்டுக்கே சிரமமாகிப் போயிற்று.''

''போகட்டும், போகட்டும். செய்த கொடுமைக்குத் தண்டனை அனுபவித்துதானே ஆக வேண்டும்?'' என்றாள் நிரஞ்சனி ஆத்திரத்துடன்.

சில வினாடி அமைதியின் பின், தனஞ்சயன் மறுபடியும் தொடர்ந்தான்.

''தப்பான படம் தயார் பண்ணியதால் வாழ்வை இழந்த அந்த பெண்ணின் சாபமோ, அது பெரும் பாவமோ என்று தில்லைநாதன் கலங்குகையில், அடுத்து, அவருடைய தாயும், எலி கடித்து, அதுவே விஷமாகி இறக்க நேர்ந்தது!

''அந்தப் பெண்ணுக்குச் செய்த பாவத்தின் கூலியே என்று தில்லைநாதனுக்கு உறுதியாகிவிட்டது. இந்தப் பாவம், மகனையும் பீடித்து விடுமோ என்று பயம் வந்தது.

மனைவியுடைய தாய் தந்தையிடம் மூத்த பிள்ளையை ஒப்படைத்துவிட்டு, பிராயச்சித்தம் செய்வதற்காக, அந்தப் பெண்ணைத் தேடி அலைந்தார்.

''முதல் வேலையாகக் குன்னூர் பக்கம் போனால், அந்த போட்டோ கடை இப்போது ஒரு ஹோட்டலாக மாறியிருந்தது!

அந்தப் பெண்ணைப் பற்றிய வேறு எந்த விவரம் அறியவும் தில்லைநாதனுக்கு வழியற்றுப் போயிற்று.

''பெற்ற பிள்ளையைப் பார்த்தால் கூட, இந்தப் பாவம் அவனையும் பாதித்து விடுமோ என்ற பயத்தில், வடக்கே தூர தூரப் போய்ப் பரிதாப வாழ்க்கை வாழ்ந்து, அங்கேயே கடைசி மூச்சையும் விட்டார்...''

''ஐயோ!'' என்றாள் நிரஞ்சனி தன்னையறியாமல், ''பாவத்தின் கூலி மரணம்'' என்று எதிலோ படித்தேன், தனா. பணத்துக்காகத் தப்பு செய்துவிட்டு, என்ன வேதனைப்பட்டாரோ?

''ஆனால் தனா, தில்லைநாதன் வெறும் அம்புதானே? அவரது இன்றியமையாத தேவையை அறிந்து, அந்தப் பணத்தைக் கொடுத்து, அவரைப் பாவம் செய்யத் தூண்டிய அந்தப் பெண்ணல்லவா, பெரிய தண்டனை பெற வேண்டும்?'' என்று குமுறலோடு கேட்டாள்.

அந்த வினாடியில், இருவர் மனதிலும் ஓர் உருவம் தோன்றத்தான் செய்தது. ஆனால், உறுதியான சான்று இல்லாமல், ஒன்றும் சொல்லப் பிடிக்காமல், அது பற்றி எதுவும் கூறாதிருந்தனர்.

அரைகுறை ஆதாரத்தால், ஒரு வாழ்வு அழிந்ததை, அப்போதுதானே பேசி முடித்திருந்தார்கள்?

''அப்புறம் என் அம்மா என்ன ஆனார்கள், தனா?'' என்று அவனிடமே கேட்டாள் நிரஞ்சனி. ''எங்கே? எப்படி...'' என்றவளின் குரல் விக்கி, உடைந்தது.

என்னவோ, எல்லாமே அவனுக்குத்தான் தெரியும் என்பது போல ஒரு பிரமை! அவனும் ஏமாற்றாமல், ஓரளவு விவரம் தெரிவித்தான்.

அவளது 'என் அம்மா'வைத் தொடர்ந்து, அவனும் உன் தாயார் என்று குறிப்பிட்டான்.

''உங்கள் பண்ணை வீட்டிலிருந்து கிளம்பிய உன் தாயார், அவர்களது நோயை கண்டுபிடித்து வைத்திய ரிடம் முதலில் போயிருக்கிறார்கள். அங்கிருந்து, அவர்கள் வளர்ந்த கருணை இல்லத்துக்கே போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

அங்கே அவர்கள் வளர்ந்தபோது பார்த்தவர்கள், பிரியமானவர்கள், கை நீட்டி வரவேற்றார்கள். இறுதி வரை அங்கேதான்.''

மூடிய இமைகளின் வழியே நீர் வழிய, தாயின் கடைசி நாட்களைக் கற்பனையில் கண்டபடி, நிரஞ்சனி அசையாமல் வீற்றிருந்தாள்.

சிலை போல அமர்ந்திருந்தவளைப் பார்த்திருந்த தனஞ் சயனும், அவளது அடுத்த கேள்வியை எதிர்நோக்கிய வாறு, முகம் இறுகி உட்கார்ந்திருந்தான்.

நீர் பெருகுவது நிற்காதபோதும், லேசாகப் புருவம் சுருக்கியவாறு கண் திறந்த நிரஞ்சனி. அவனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டாள் ''பார்த்த மாதிரியே சொல்லுகிறீர் களே தனா, இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

அதற்குமேல் உட்கார்ந்திருக்க இயலாதவனைப் போல தனஞ்சயன் எழுந்துவிட்டான். உணர்ச்சியற்ற பார்வையால் அவளை நோக்கி ''இரண்டு நாள் முன்பு, இது பற்றி பேசும்போது 'நீயாக வெறுத்தால், அது வேறு விஷயம்' என்றேனே, உனக்கு நினைவிருக்கிறதா? அப்படி வெறுப்பதற்குரிய காரணம் இப்போது சொல்லப் போகிறேன். அந்தப் புகைப்படங்களைத் தயாரித்த போட்டோகிராஃபர் தில்லைநாதன், என் தந்தை!'' என்று தெரிவித்தான்.

தொடர்ந்து "இப்போது முடிவு உன் கையில்!" என்றான் ஒரு மரத்த குரலில்.

மெல்ல எழுந்து, அவனை வெறித்துப் பார்த்தாள் நிரஞ்சனி.

# 10

அவர்கள் இருவருக்குள்ளும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கும் என்று, நிரஞ்சனி நினைத்ததுதான். ஆனால், அது தந்தை மகன் உறவாக இருக்கக்கூடும் என்று, அவள் எதிர்பார்க்கவில்லை.

வாழ்வில் அடியோடு தோற்றுப்போன போட்டோ கிராஃபரும், தொழிலில் வெற்றிகளைக் குவிக்கும் தனஞ்சயனும்! எப்படி முடியும்?

அவனை வெறித்துப் பார்த்த நிரஞ்சனிக்கு, வேறு தோன்றியது.

"அப்படியானால், உங்கள் தந்தை செய்ததற்குப் பிராயச்சித்தமாகத்தான் என்னை மணக்க முடிவு செய்தீர்களா?" என்று அவனை நேராகப் பார்த்துக் கேட்டாள்.

திகைப்புற்று "என்ன உளறல் இது?" என்றான் அவன்.

"உளறல் என்ன? முதலில் இருந்தே, நீங்களாக என்னைத் தேடி வந்து பேச முயன்றதற்கே, இதுதானே காரணம்? அம்மா இருக்கிறாள் என்றதும் விலகிப் போனதும், சித்திதான் என்று அறிந்ததும், மீண்டும் வந்து பேசியதும்.. எனக்கும் யோசிக்கத் தெரியும், தனா!

''எனக்கு ஏதாவது பண உதவி தேவையாக இருந் திருந்தால், உங்கள் பிராயச்சித்தம், அப்படி முடிந்து போயிருக்கும்! அதெல்லாம் தேவை இல்லை என்று தெரியவும், இந்த வழியைக் கண்டு பிடித்திருக்கிறீர்கள்! அப்படித்தானே? அதுதானே உண்மை? நிஜத்தைச் சொல் லுங்கள்!'' என்று படபடப்புடன் பேசினாள் நிரஞ்சனி.

''உன் பேச்சு ஓரளவு உண்மைதான், நிரஞ்சனி. உன் அன்னையின் படத்துக்கும் உனக்கும் இருந்த முக ஒற்றுமைதான், முதலில் நான், உன்னிடம் வந்து பேசக் காரணம். அன்று விலகிப் போனதற்கும், அடுத்து வந்து பேசியதன் காரணமும் கூட, நீ சொன்னது போலத்தான்.

''ஆனால் அப்போதே ஓர் ஈர்ப்பு இருந்ததால்தான், அடிக்கடி உன் அருகில் வந்து நான் நின்றதே. அப்படி நின்றதால்தான், வீட்டில் இருப்பது, உன் அம்மா அல்ல, சித்தி என்று அறியவும் முடிந்தது. பிறகு பழகப் பழக...''என்று சொல்லிக் கொண்டே போனவன், அவள் பேசாமல் நிற்கவும், அவள் அருகில் சென்று, அவளை இறுக அணைத்தான்.

கைப்பிடிக்குள் அவளை நிறுத்தியபடியே ''சொல் லும்மா, அப்பாவின் பிழைக்கான பிராயச்சித்தமாகவே உன்னை மணக்க விரும்புவதாகத்தான், இன்னமும் தோன்றுகிறதா?'' என்று கேட்டான்.

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு, தன் பாரமே தாங்காதவள் போல், அவன் மீதே ஆறுதலாகச் சாய்ந்து கொண்டாள், நிரஞ்சனி.

சற்றுப் பொறுத்து, நிரஞ்சனியை சோபாவுக்கு அழைத்துச் சென்று அமர வைத்து, தானும் அருகமர்ந்து, அவளைத் தன் தோளிலேயே சாய்த்துக் கொண்டு, ''நாம் பேச வேண்டும், ரஞ்சிம்மா'' என்றான் அவன்.

சம்மதமாய் ''ம்ம்'' என்று நேராக நிமிர்ந்து உட்கார்ந்தாள், நிரஞ்சனி.

''ஏய், வாயால் பேசுவதற்கு, இப்படி விறைப்பாய் உட்கார வேண்டிய அவசியம் இல்லை, தெரியுமா?'' என்று அவளை மீண்டும் தன் கை வளைவுக்குள் இழுத்தான் தனஞ்சயன்.

மறுக்காமல் வசதியாக சாய்ந்து கொண்டு, ''முதலில் இதைச் சொல்லுங்கள், தனா. என் அம்மாவை கண்டு பிடிக்க முடியாமலேதான், உங்கள் அப்பா வடக்கே போனார். அப்புறம் எப்படி, அம்மா பற்றி, உங்களுக்கு இவ்வளவு... கிட்டத்தட்ட எல்லாமே தெரிந்தது?'' என்று வினவினாள் நிரஞ்சனி.

''அவரது கடைசி காலத்தில் தன்னைக் காண வருமாறு, அப்பா என்னைக் கூப்பிட்டார், ரஞ்சனி. அவர் என்னைத் தாத்தா பாட்டியிடம் கொண்டு தள்ளிவிட்டுப் போனதாக நினைத்திருந்ததால், பிடிக்காமல்தான் போனேன். ஆனால் பாதிப்பு என் வரை வந்துவிடுமோ என்று அப்பா அஞ்சியதை அறிந்தபோது, மனம் உருகி விட்டது.

''மகனாகச் செய்ய வேண்டியதைச் செய்து முடித்து விட்டு, அவர் எனக்கு எழுதி வைத்திருந்த கடிதம், படங்களோடு வீடு வந்தேன்.

''இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, தனி ஆளாக உன் அம்மாவைத் தேடுவது இயலாது என்று, துப்பறியும் நிறுவனம் ஒன்றிடம் பொறுப்பை ஒப்படைத்தேன். அம்மா மறைந்தது வரை, விவரம் கிடைத்தது. ஆனால், குடும்பம் பற்றி எதுவுமே தெரியவில்லை.

''அந்த ஆசிரமம் வரை போய்ப் பார்த்தும் பயனில்லை. வேறு தொடர்புக்கும் வழியில்லை என்று அலுப்பும் வெறுப்புமாக, அப்பா தந்ததை, அலமாரியில் பின்னே தள்ளி வைத்தேன்.

''இந்தத் தேடலின் பின், கிட்டத்தட்ட ஓர் ஆண்டு கழித்து, உன்னைப் பார்த்தேன். அப்படியே உன் அம்மா வின் அச்சு, நீ! அதனால்தான்...'' என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினான் அவன்.

''இப்போது நிறையப் புரிகிறது!'' என்றபடி அவன் தோளில், இன்னமும் வாகாகச் சாய்ந்து கொண்டாள் நிரஞ்சனி.

அவளது கூந்தலை மென்மையாக வருடியபடி, ''இன்னும் இருக்கிறது, ரஞ்சனி!'' என்றான் அவன்.

அந்தக் குரலில் அவள் நிமிர்ந்து பார்க்கவும், ''அன்று நீ வந்த போது இரண்டு நாள் பொறுக்கச் சொன்னேனே. ஆசிரமத்தில் முதலில் நான் விசாரிக்கப் போனபோது, 'இது கேட்க நீ யார், பிள்ளையா? உறவா?' என்று அவர் கள் கேட்டது, திடுமென அப்போது நினைவு வந்தது.

''அங்கே ஒருவேளை, உனக்கு ஏதேனும் இருக்குமோ என்ற எண்ணம், திடுமெனத் தோன்றியது. இப்போது போய், உன் படம் செல்லில் இருப்பது காட்டி, நாம் பரிமாறிய சில எஸ்எம்எஸ் காட்டி மணக்க போவதாகச் சொன்னதும், உன் அம்மா உனக்கு வைத்து விட்டுப் போன கடிதத்தின் ஜெராக்ஸ் எடுத்துக் கொடுத்தார்கள். அசலை, நீயே வந்து கேட்டால்தான் கொடுப்பார்களாம். படித்துப்பார்'' என்று ஒரு கடிதத்தைப் பாக்கெட்டில் இருந்து எடுத்து, அவளிடம் கொடுத்தான்.

நிரஞ்சனியின் உடலில் ஒரு நடுக்கம் ஓடியது.

தோன்றாத் துணை என்பது போல, அவளைத் தோளோடு லேசாக அணைத்து, அணைத்த கையாலேயே லேசாக வருடிக் கொடுத்தான் தனஞ்சயன்.

அப்போதும் சற்று நடுங்கிய கைகளால் கடிதத்தைப் பிரித்து? நிரஞ்சனி படிக்கத் தொடங்கினாள்.

''என் கண்ணே'' என்று கடிதம் தொடங்கியிருந்தது.

தாங்க முடியாதது போல கனத்த தலையை அவன் தோள் மீது சாய்த்துக் கொண்டு, மேலே படித்தாள் மகள்.

''என்றாகிலும், ஏதோ ஓர் ஆர்வத்தில் நீ என்னை தேடி வந்தால், இந்தக் கடிதத்தைப் படித்து, உன் தாய் குற்றமற்றவள் என்று தெரிந்துகொள், கண்மணி. அந்தப் படங்களுக்கும் எனக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. ஆனால், உன் தந்தை குற்றம் சாட்டியபோது, நான் அதிகம் மறுத்துப் பேசவில்லை. ஏன் தெரியுமா? என் நாட்கள் எண்ணப்பட்டு விட்டன என்று அப்போதே எனக்குத் தெரியும். என் முடிவின் பிறகு, என்னை நினைத்து நோகாமல், ஏங்காமல், இன்னொரு வாழ்வை, உன் அப்பா அமைத்துக் கொள்வார் அல்லவா? எப்படியும், உன் பாட்டி அமைத்துக் கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை. உன்னையும் மகனின் வாரிசு என்று ஏற்றுக் கொள்வார்கள். இந்தச் சிறு வயதில், என் கண்ணே, உனக்கும் என் பிரிவு பழகிவிடும். இந்த சதியும் நல்லதே செய்ததாக ஏற்றுக் கொண்டேன். உன் நினைவே, இறுதிவரை எனக்குப் போதும், கண்மணி.

''இப்போதும், எப்போதும் உன் நன்மையையே நாடும், உன் அம்மா?'' என்று கடிதம் முடிந்திருந்தது.

''தனா..'' என்ற கதறலோடு, அவன் மடியிலேயே விழுந்து, குமுறிக் குமுறி அழுதுவிட்டாள் அவள்.

சற்றுநேரம் அவளை அழவிட்டு விட்டு, ஆறுதலாக முதுகைத் தட்டிக் கொடுத்து, மெல்லத் தேற்றி, எழுப்பி, முகம் கழுவி வரச் செய்தான்.

முகம் கழுவிவிட்டு வந்தால், அடுத்த கப் காபி தயா ராக இருந்தது.

''சர்வ ரோக நிவாரணி. உற்சாகம் தரும் ஊக்க பானம்! முன்பு பாதி கூடக் குடிக்காமல் வீணாக்கினாய் அல் லவா? தண்டனையாக, இப்போது சொட்டு விடாமல் குடித்து முடிக்க வேண்டும்'' என்று வேடிக்கை போல மிரட்டிக் குடிக்கச் செய்தான்.

சூடான பானம் உள்ளே போனதும், அழுகை அடி யோடு நின்று போனது.

என்னவெல்லாம் யோசித்து, எப்படி அவளைப் பார்த்துக் கொள்ளுகிறான்!

விரிந்த விழிகளின் பார்வையை உணர்ந்த 'என்ன' என்பது போலப் புருவம் உயர்த்திக் கேட்டான் தனஞ்சயன்.

''இப்படி உணர்ச்சி வசப்படுவேன் என்றுதான் தனி யாகப் பேச, இங்கே வரச் சொன்னீர்களா?''

''அதற்காக மட்டுமல்ல'' என்று அருகில் வந்து, அவள் முகத்தை ஏந்தி, நெற்றியில் முத்தமிட்டு, ''இந்த மாதிரி முத்தாய்ப்பு வைக்கவும் முடியும் அல்லவா?'' என்று முறுவலித்தான் அவன்.

''கூடவே, இன்னும் கொஞ்சம் அதிக உரிமை கிடைக் கக்கூடுமோ, என்ற ஆசை வேறு!'' என்று அவன் கண்

ணால் சிரிக்கவும், குறும்பு புரிந்து கூட நகைத்த போது, அவள் முழுமையாக இயல்புக்குத் திரும்பியிருந்தாள்.

காலிக் கப்புகளை, அவளே எடுத்துச் சென்று சமையல் அறையில் வைத்துவிட்டு வந்து, அவன் அருகே அமர்ந் தாள்.

''இவ்வளவு பெரிய சதியைச் சும்மா விட முடியாது, தனா. இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு பொய் நிஜமாக்கப்பட்டிருக்கிறது. இதனால், எத்தனை பேருக் குப் பாதிப்பு தெரியுமா? இப்போது சிவாவை வேறு.. தனா, சிவாவையும் கூப்பிட்டுக் கொள்வோம். எந்த முடிவையும், அவனுடனும் கலந்தே எடுக்கலாம்'' என்று செல்லை எடுத்தாள்.

''ஆனால், அவனுக்கு நம் விஷயம் தெரியுமா, ரஞ்சி?'' என்று தனஞ்சயன் சந்தேகப்பட்ட போது, ''ஊகித்திருப் பான்'' என்றாள் நிரஞ்சனி ஒரு நிச்சயத்தோடு.

''மற்றபடி, நான் சொல்லும் இடத்துக்கெல்லாம் கூட்டிப் போய் விடுவானா? நாங்கள் தப்பானவர்கள் அல்ல என்ற எண்ணம், எங்கள் இருவருக்குமே உண்டு. அப்பா, சித்திக்கும் கூட...''

அவள் எதிர்பார்த்தது போலவே, சிவநந்தன், அழைத்த உடனேயே வந்துவிட்டான். ''இங்கேயே வந்து உட் கார்ந்து கொண்டு, என்னையும் வேறு கூப்பிடுகிறாயா? தைரியம்தான்!'' என்று கிண்டலடித்த போதும், உட னேயே முகம் மாறி, ''என்னக்கா விஷயம்?'' என்று கவ னத்துடன் கேட்டான்.

அதிகம் குறுக்கிடாமலே முழுக் கதையையும் கேட்டு முடித்தவன், தமக்கைக்கும் மேலாகக் கொதித்துப் போனான்.

''இதைச் சும்மா விடக் கூடாது, அத்... ஓ, இப்போதே அத்தான் என்று கூப்பிடக் கூடாதோ? சரி, இனியும் சும்மா இருக்க முடியாது, தனா, சார்.

''செய்வதையும் செய்துவிட்டு, என்னவோ, தான்தான் ஒழுக்கத்தின் திருவுரு மாதிரி, வீட்டில் அத்தனை பேரையும், என்னமாக வதைக்கிறார்கள், தெரியுமா? திருப்பிக் கொடுக்க வேண்டாம்?

''அதை விட முக்கியமாக, இவ்வளவு பெரிய தப்புச் செய்தவர்கள், தண்டனையே இல்லாமல் தப்பக் கூடாது, சார்!'' என்றான் ஆவேசமாய்.

''ஆனால், இவர்கள்தான் என்று சொல்வதற்கு, நம்மிடம் ஆதாரம் இல்லையே! இதைச் செய்யச் சொன்னது, ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி என்பதற்கு மேல், என் தந்தைக்கும் எதுவும் தெரியவில்லை. விலாசம், விவரம் ஒன்றும் கிடையாது. பணத்தை ரூபாய் நோட்டுக்களாகவே கொடுத்திருக்கிறார்கள். வெளியே சொன்னால், நிர்மூலம் செய்து விடுவதாக மிரட்டவும், அப்பா அப்படியே அடங்கி விட்டார்.''

''அவருக்கு, மனைவியும் குழந்தையும் பிழைத்து விடக் கிடைத்த வாய்ப்பு வீணாகி விடக் கூடாது என்பது தான் முக்கியமாகப் பட்டிருக்கும்'' என்று நிரஞ்சனி முந்திக் கொண்டு காரணம் சொன்னது, அவனுக்கு இதமாக இருந்தது.

''ஆனால் உன் பாட்டியாகத்தான் இருக்க முடியும் என்றாலும், அவர்கள்தான் என்று நம்மால் நிரூபிக்க வழியில்லை'' என்றான் தனஞ்சயன்.

''ஏதாவது இருக்கும், தனா சார். ஆதாரத்தைக் கண்டு பிடிப்போம். அல்லது, உண்டு பண்ணுவோம்'' என்றான்

சிவநந்தன் வேகத்தோடு. ''அதற்குத்தான், நமக்கு உலகத்திலேயே சிறந்த வழிகாட்டி இருக்கிறார்களே!''

''இதற்குத்தான் நீ வர வேண்டும் என்று நினைத்தேன், நந்து!'' என்றாள் தமக்கை பாராட்டுதலாக.

அடுத்தபடியாக மூவருமாகக் குருபரனிடம் போனார்கள். அவரது அலுவலகத்தின் தனியறையில் அமர்ந்து பேசினார்கள். விவரங்களை, விளக்கமாகச் சொன்னார்கள்.

சற்று நேரம் திகைத்து அமர்ந்திருந்தவருக்கும், ஒவ்வொன்றாகப் பலதும் நினைவு வந்தன.

முதலாவதாகக் குன்னூர் பண்ணைக்கு மனைவியை அழைத்துக் கொண்டு போகச் சொன்னதே, அன்னைதான்!

நிறைய போட்டோ எடு என்று இரண்டு பிலிம் ரோல் வாங்கிக் கொடுத்து அனுப்பியது, கடைசியாக ''பாப்பா போட்டோவையாவது அனுப்பு, எனக்குப் பார்க்கத் துடிக்கிறது'' என்று போன் செய்து தாயார் வற்புறுத்தியதும் நினைவு வரவே ''ஐயோ!'' என்று தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார் அவர்.

பண்ணை இருந்த கிராமத்தில் உள்ள போட்டோ ஸ்டூடியோ, அது மட்டுமே. படம் எடுத்த ரோலை டெவலப் செய்து பிரிண்ட் போடுவது என்றால், அங்கே போய்த்தானே ஆக வேண்டும்? அப்போது சரசாவை வைத்துத் தயாரிக்கப்பட்ட படங்களும், அவர் கண்ணில் கட்டாயம் படும்.

விளம்பரத்துக்கு என்று, பணம் கொடுத்துப் படங்களை வாங்கியவன், சும்மா பூட்டி வைக்க மாட்டான்!

''ஐயோ, சரசா, சரசா! உனக்கு அநியாயம் பண்ணி, விரட்டி விட்டேனே'' என்று குருபரன் சற்று நேரம் வாய் விட்டே புலம்பினார்!

அவளது நோய் பற்றி அறிந்தபோது, ''கூட இருந்து பணிவிடை புரிய வேண்டிய சமயம், தனித்துத் தவிக்க விட்டேனே'' என்று, கண்ணீர் விட்டுக் கதறினார்!

நோய் இருந்ததால், அம்மாவாகத்தான் போனார்கள், கடைசி நாட்களில் ஆசிரமத்தில், நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள் என்றெல்லாம் சொல்லிப் பிள்ளைகள் அவரைத் தேற்றும்படி ஆயிற்று.

எல்லாவற்றுக்கும் சிகரம் பெற்ற தாயின் பச்சைத் துரோகம்தான், அவரை ரொம்பவும் நோகடித்துவிட்டது.

சரசாவின் கேவலமான நடத்தை என்று இந்த ஒன் றையே சொல்லிச் சொல்லி, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, தாயார் அவரை எத்தனை முறை, கூனிக் குறுக வைத்திருப்பாள்!

அதுவும், பொய்யென்று மற்ற எவரையும் விட, நன் றாகத் தெரிந்தவள்!

அந்தப் பொய்யை அரங்கேற்றியவளே, அவள்தானே? தெரியாமல் எப்படிப் போகும்?

தாயார் சர்வாதிகாரி, வீட்டில் உள்ள எல்லோரும், தனக்கென்று தனி விருப்பமே இல்லாமல், அவளுக்குப் பணிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள் என்று மட்டும்தான், அதுவரை அவர் எண்ணியிருந்தார்.

தந்தை சிறு வயதில் இறந்து, தொழிலை ஏற்று நடத்தி, அவரையும் நல்லபடியாக வளர்க்க நேர்ந்த கட்டாயத்தின் விளைவு என்று, அதற்கு ஒரு நியாயமும் கற்பித் திருந்தவர் அவர்.

ஆனால், சதி பண்ணியேனும் தனக்குப் பிடிக்காதவர்களை அழிக்கும் கொடுமைக்காரி, அவரைப் பெற்றவள் என்று அவர் நினைத்ததே கிடையாது!

ஆனாலும், இது என்ன குரூரம்? எவ்வளவு வக்கிரம்!

அவராவது, தாயை மீறினார், தண்டிக்கப்பட வேண்டியவர் என்று, பெயரளவேனும் ஒரு காரணம் சொல்லலாம்! மகனைத் தூண்டியவள் என்று, அந்த வெறுப்பையும் ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்தலாம்.

ஆனால், இந்தப் பச்சைப் பிள்ளைகள்? ஒரு பொய்யை மெய்யாக்கி, அதைக் காரணம் காட்டி, அவர்களையும் வதைத்தாளே! மன்னிக்கவே முடியாத குற்றம்!

ஆனால், பாட்டியிடம் நேரடியாக கேட்டே ஆக வேண்டும் என்று சிவநந்தன் குதித்தபோது, அவர் தயங்கினார்.

''என்னப்பா தயக்கம்? அவர்களுடைய சிம்மாசனத்தில் வைத்தே பாட்டியை பிடிக்க வேண்டும்!'' என்றான் மகன் பிடிவாதமாக.

''அதுதானப்பா பிரச்சனை!'' என்ற குருபரன், மகளைக் கலக்கத்துடன் பார்த்தார். ''அங்கே கற்பகமும் இருப்பாளே!'' என்றார் கவலையுடன்.

இதுபற்றி, நிரஞ்சனியே, தந்தையிடம் ஒரு தரம் பேசியிருக்கிறாள். ஆனால், இப்போது கற்பகத்தை பற்றி, அவள் இன்னமும் அதிகம் அறிந்திருந்தாள்.

எனவே தந்தையை நோக்கி ''சித்தியைப் பற்றிய கவலை வேண்டாம்ப்பா. அவர்கள், ராமாயணத்து சுமித்திரை மாதிரி. சரியான விதமாகவே புரிந்து கொள்வார்கள். சரியாகச் சொல்வதானால், அவர்களே சரியான யோசனை கூடச் சொல்வார்கள். எதற்கும் அவர்களையும் இங்கே வரவழைப்போம்'' என்றாள்.

எல்லாம் கேட்ட கற்பகமும் பெரியவளிடம் நேரடி மோதலைத்தான் ஆதரித்தாள். ''எல்லோருக்கும் உண்மை தெரியும், அவர்கள் கண்டபடி பேசுவதை, இனியும் யாரும் பொறுத்திருக்க மாட்டார்கள் என்பதை, உங்கள் அம்மா உணர வேண்டும் குரு'' என்றவள், தனஞ்சயனைப் பார்த்து, ''மகிழ்ச்சியும் மரியாதையுமாக வரவேற்கப்பட வேண்டியவர். களேபரத்துக்குள், வீட்டுக்கு வாருங்கள் என வேண்டியிருக்கிறது'' என்று முறுவலித்தாள்.

''இந்தக் களேபரத்துக்குள், வரவேற்பை நினைவு வைத்துச் செய்வதே பெரிய விஷயம், அத்தை'' என்றான் அவன் இலகுவாக.

''அத்தையா? சந்தடி சாக்கில், இப்படி உள்ளே வந்தாயிற்றாக்கும்?'' என்று சிவா கேலி செய்ய, மன இறுக்கம், எல்லோருக்கும் சற்றுத் தளர்ந்தது.

''கற்பகம் சொன்னாலும், நான் சொன்னாலும், எல்லாம் ஒன்றுதான்'' என்று குருபரன் அவசரமாகக் கூறிய விதத்தில், அந்த நேரத்திலும், எல்லோர் முகங்களிலும் புன்னகை அரும்பியது!

எல்லோரும் சேர்ந்தே வீட்டுக்குப் போனார்கள்.

பாட்டியின் குரூரம் தெரிந்த பிறகு, அவளால் செய்ய முடியாதது என்று எதை நினைக்கவும், அந்த மகளுக்குத் தைரியம் இல்லை. எந்த அளவுக்கு இறங்கிப் பழி வாங்குவாளோ!

பாட்டியிடம், தந்தையின் தலையாட்டல்களை நினைக்கையில், தொழிலில் அவரது நிலை என்ன ஆகுமோ? என்ற அச்சம் அவளுக்கு வந்தது.

செல்லும்போது கிடைத்த ஒரு சிறு இடைவெளியில், தந்தையின் அருகில் சென்று, நிரஞ்சனி தன் கவலையை வெளிப்படுத்தினாள்.

''அப்பா பாட்டியின் கோபத்தால், உங்களுக்கு அலுவலகத்தில் பிரச்சனை வருமாப்பா?'' என்று மெல்ல வினவினாள்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லைம்மா'' என்றார் தந்தை அசிரத்தையாகவே.

''இரண்டு மூன்று ஆண்டுகளாகவே, நிர்வாகம் முழு வதையும் நான்தானே பார்க்கிறேன். அத்தோடு பாட்டி பொறுப்பேற்று நடத்தி, வளர்த்திருந்தாலும், தொடங் கியது என் அப்பாதானே? ஒரே மகனான எனக்கு உரிமையில்லை என்று பாட்டியாலும் சொல்ல கூடச் சொல்ல முடியாது. கவலைப்படாதே'' என்று மகளைத் தேற்றி, நிம்மதி அடையச் செய்தார், தந்தை.

வீட்டினர் நாலு பேரும் அவளிடம் கேளாமல் சேர்ந்து வெளியே சுற்றியிருக்கிறார்கள் என்று தோன்றவும், கூட ஒருவன் தனஞ்சயன் இருப்பதைப் பொருட்படுத்தாமல், தையல்நாயகி கத்தலானாள்.

''என்னடா, வீட்டை போட்டு விட்டு, எல்லோருமாக எங்கே சுற்றப் போனீர்கள்? இதென்ன, வீடா? சத்திரமா? அவரவர் விருப்பம் போல வருவதும் போவதுமாக இருப்பதைப் பார்க்கும்போது, பஜனை மடம் போல அல்லவா தோன்றுகிறது! சுண்டலுக்காகப் பஜனை மடத்துக்குப் போகிற மாதிரி சாப்பாட்டுக்காக, இங்கே வந்தீர்கள் போல. இந்த மாதிரி ஊரைச் சுற்றி கெட்டலை வதற்கு, நான் விட மாட்டேன். இந்தத் தையல்நாயகிக்கு என்று ஒரு கௌரவம் உண்டு...'' என்று குரலை ஏற்றிக்

கொண்டே போகவும் ''போதும்!'' என்று பொறுக்க மாட்டாமல் எல்லோருமே குறுக்கிட்டனர்.

சேர்ந்து வந்த எதிர்ப்பில் ஒரு கணம் திகைத்தாலும், ''என்ன, எல்லோரும் சேர்ந்து கோரஸ் பாடுகிறீர்கள்? அதுவும் என்னை எதிர்த்து? தொலைத்துவிடுவேன்., யார் என்று நினைப்பு? என்ன கற்பகம், உனக்கும் நிலைமை மறந்துவிட்டதா?'' என்று அத்தனை பேரிலும் பலவீனமானவள் என்று அவள் கருதியவளைப் பார்த்து அதட்டினாள்.

ஆனால், அந்தப் பலவீனம் தலையசைத்து ''போதும் அத்தை, எங்கள் எல்லோருக்கும் உண்மை தெரியும்'' என்று அமைதியாகவே கூறியது, பெரியவளுக்கு சற்று பெரிய அதிர்ச்சியே.

அடங்கிப் பழக்கம் இல்லாதவள் கத்தத்தானே செய்வாள்?

ஆனால், அதை எதிர்பார்த்தே வந்திருந்ததால், ஆள் மாற்றி ஆள், தையல்நாயகியின் சதியைப் பிட்டு பிட்டு வைத்தனர்.

இந்தப் பேச்சில் கலந்து கொள்ளாமல், ஒரு சோபாவில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தனஞ்சயனுக்கு, அத்தனை பேருக்கும் அவள் ஈடு கொடுப்பதை காண ஆச்சரியமாக இருந்தது.

குறைந்த பட்சமாக, எழுபது வயதை ஒட்டியே இருக்க வேண்டும். ஆனாலும், என்ன குரல்? என்ன தெளிவான பேச்சு!

பூஞ்சையான தந்தையின் நினைவு அவனுக்கு வந்தது. இந்த அம்மாளை எதிர்த்து, முன்னே வந்து

நிற்கக் கூட, அவரால் முடிந்திராது. ஒரே [illegible] ஊதித் தள்ளப்பட்டிருப்பார்!

அப்போதே, தகப்பனார் இன்னும் கொஞ்சம் முயன்று பார்த்திருக்கலாமே என்று, தனஞ்சயனின் அடி மனதில் இருந்த குறை, அப்போது மறைந்தது!

நெருங்கிய உறவுகள் அத்தனை பேரும் சேர்ந்து குற்றம் சாட்டிய குற்றங்கள் அத்தனையையும், தையல்நாயகி பிடிவாதமாக மறுத்தாளே தவிர, ஒரு சிறு கலக்கம் கூட, அவள் காட்டவே இல்லை!

இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று, முன் யோசனையோடு அதைக் கூடத் திட்டமிட்டு, அந்த அம்மாள் பயிற்சி பண்ணி வைத்திருக்கிறாள் என்று தனஞ்சயனுக்கு நிச்சயமாகத் தோன்றியது.

ஒரு கட்டத்தில், மேலே என்ன பேசுவது என்று எல்லோரும் திகைத்தபோது, ''இவர் யார் தெரிகிறதா?'' என்று தனஞ்சயனை சுட்டிக் காட்டினான் சிவநந்தன்.

''கண்ட நாயை எல்லாம் நான் எதற்கு...'' என்று தொடங்கிய தையல்நாயகியின் அகந்தைப் பேச்சைப் ''போதும்... வாயை மூடுங்கள்'' என்று அவளுக்கு மேல் கத்தி, நிறுத்திவிட்டு ''உங்கள் குற்றங்களுக்கு, நேரடிச் சான்று! போட்டோகிராஃபர் தில்லைநாதருடைய மகன். விளையாடுவதற்குத் தந்தை வாங்கிக் கொடுத்திருந்த சின்னக் கேமிரா மூலம் உங்களுக்குத் தெரியாமல், உங்கள் இருவரையும் படம் பிடித்து வைத்திருக்கிறார், சின்னப்பிள்ளை. வேடிக்கையாகப் பிடித்ததுதான். ஆனால் உங்களுக்கு வேட்டு! இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டான் பேரன்.

''வேறு வழி இல்லாவிட்டால், இப்படி ஒரு போடு போடப் போகிறேன். மறந்தும், இமையைக் கூடத் தட்டி விடாதீர்கள். எங்கள் பாட்டி கண்டுபிடித்து விடுவார்கள்'' என்று வருங்கால மைத்துனன் முன்னமேயே எச்சரித் திருந்ததால், தனஞ்சயனும் தயாராகத்தான் இருந்தான்.

பெரியவளை வெறித்துப் பார்த்தவன், அசையக் கூட இல்லை!

அவனும் பல பேரைப் பார்த்துப் பழகித் தொழிலைப் பிறர் உயர்வாக மதிக்கும் அளவுக்கு வளர்த்திருப் பவன்தானே?

அந்த வினாடியில் காற்றுப் போன பலூனாகச் சொத் தென்று தளர்ந்தாலும், உடனேயே நிமிர்ந்து, தையல் நாயகி கத்தத் தொடங்கிவிட்டாள். ''என்ன தைரியம்! ஒரு போட்டோ எடுக்கிற பயலுடைய பிள்ளை. இந்த வீட்டுக்குள் வந்து, சோபாவில்...''

''போதும்..!'' என்று சிவா கையை ஓங்கிய வேகத்தில், அடித்தே விடுவானோ என்று, எல்லோருமே அதிர்ந்து போயினர்.

தையல்நாயகி கூட, அந்தப் பயத்தில்தான் வாயை மூடியிருக்க வேண்டும்!

என்ன பிழை செய்திருந்தபோதும், மரியாதை தரப்பட வேண்டிய மூத்த உறவாயிற்றே என்று குருபரன் ஏதோ சொல்ல வாயைத் திறக்கும்போதே, ஓங்கிய கையை இறக்கியபடி, அவருடைய மகன் பேசினான்.

எச்சரிப்பது போலக் கையைக் காட்டி ''போதும். அவரை பற்றி உங்கள் சாக்கடை வாயைத் திறந்து, ஒரு வார்த்தை குறைவாகப் பேசக்கூடாது. அவரை யார்

என்று நினைத்தீர்கள்? பெரிய தொழிலதிபர். அவர்தான் நம் நீருவை மணந்து கொள்ளப் போகிறார்.'' என்று அறிவித்தான் அவன்.

அத்தோடு விடாமல், ''அது மட்டுமல்ல. உங்கள் பொய்க்கதையை உடைத்து, உலகத்துக்கு உண்மையை அறிவிக்கப் போகிறவரும் கூட! நீங்கள் என்ன மறுத் தாலும், இனி அது செல்லாதும்மா, செல்லாது!'' என்று அவளைப் போலவே எக்களிப்புக் காட்டி வேறு கூறவும், தையல்நாயகி தன்னை மறந்தாள்.

''ஆமாம்டா. பொய்தான் சொன்னேன். பொய்க் கதை தான் கட்டினேன். அப்படித்தான் செய்வேன்!'' என்று கிரீச்சிட்டாள். ''ஒன்றுமில்லாத ஓர் அனாதைப் பெண்... அவள் இந்தத் தையல்நாயகிக்கு மருமகள் ஆவதா? அதுவும் என் மகனையே எனக்கு எதிராகத் திருப்பி, மணந்தவளை எப்படி மன்னிப்பது? பிள்ளை என் மகனுடையது. இந்தத் தையல்நாயகியுடைய பேரக் குழந்தை. அதை வைத்துக் கொண்டு அவளை விரட்டி விட வேண்டும் என்று அன்றே, அவள் கருவுற்றது தெரிந்ததுமே திட்டமிட்டேன், செய்தேன்! என்னை மீறி, என் குடும்பத்தில் ஒன்று நடப்பதா? நடக்க விடுவேனா? நடத்திய நாயை விரட்டியடித்தேன். அது என் இஷ்டம்! அதற்காக உங்களால் என்னடா செய்ய முடியும்? இந்த வீட்டை விட்டு விரட்ட முடியுமா? முடியாதே! இது, உன் அப்பனுடைய தாத்தா காலத்தில் வாங்கியது. சகல விதமான உரிமைகளோடு, நான் இங்கேயே, இப்படியே தான் இருப்பேன். உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று சவால் விட்டவள், எல்லோரை

யும் அலட்சியமாகப் பார்த்துவிட்டு, அவளது அறையை நோக்கிச் சென்றாள்.

சொத்தென்று சோபாவில் விழுந்தான் சிவநந்தன்

''இவ்வளவு அநியாயம் பண்ணியிருக்கிறார்கள்! இவர்களுக்கு மட்டும் தண்டனையே கிடையாதா?'' என்று ஆத்திரத்துடன் குமுறினான்.

தன் அருகே அமருமாறு நிரஞ்சனிக்கு சைகை செய்து விட்டு,

''வீட்டில் அத்தனை பேரும் வெறுப்பாக இருப்பதே, தண்டனைதானே?'' என்றான் தனஞ்சயன்.

''கிடையவே கிடையாது!'' என்றாள், தனஞ்சயனின் பக்கத்தில் போய் உட்கார்ந்த நிரஞ்சனி. ''கொஞ்சமாவது பாவம் உள்ளவர்கள் என்றால், நாங்கள் எல்லோரும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாலே, வருத்தம் வரும். இங்கே கொத்திக் குதறத்தானே, உறவே! வயதான வர்கள். உணவு மற்றதில் குறை கிறை வைக்கவும் நமக்கு மனம் வராது... எப்படியும் சித்தியால், அது முடியாது!'' என்றாள்.

''ஆனால் அப்படிக் கொடூரமாகத் திட்டம் போட்டு, அதைச் செயல்படுத்தவும் செய்தார்கள் எனும்போது, அதுவும் அதற்காக வருத்தப்படக் கூட இல்லை என்றால், கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருப்பது, அவர்கள் பெற்ற மகன், எனக்குக் கூட, ஒரு மாதிரிதான் இருக் கிறது'' என்றார் குருபரனும்.

''வழி இருக்கிறது'' என்றாள் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த கற்பகம்.

எல்லோரும் ஆவலாகப் பார்க்கவும், ''ஒருவரைக் கடுமைப் பேசி, வேதனைப்படுத்துவது, அவர்களோ டேயே போகட்டும். இதைச் செய்யாமல் இருந்தோ மில்லையே என்று நினைத்து, அவர்கள் உள்ளூர மறுக வேண்டும். அதுதான் அத்தைக்கு உரிய தண்டனை. அதை நாம் செய்து விடலாம்!'' என்றாள் அவள் உறுதி யோடு.

''எப்படி? எப்படி?'' என்று, எல்லோரும் ஆவலமாகக் கேட்கவும், ''சொல்கிறேன்'' என்று தனஞ்சயனைப் பார்த்து, ''அந்த படங்களில் கொஞ்சம் உங்களிடம் இருப்ப தாகச் சொன்னீர்கள், அவை வேண்டுமே'' என்று கேட் டாள்.

அடுத்து நிரஞ்சனியிடம் திரும்பி ''பெரிய வேலை உன்னதுதான், கண்ணும்மா'' என்று கூறினாள்.

சரியாக ஒரு வாரம் கழித்து, வழக்கம்போல ஒன்பது மணியளவில், கீழிறங்கி வந்து, தன் சிம்மாசனத்தில் அமர்ந்து நிமிர்ந்து பார்த்த தையல்நாயகி, திடுக்கிட்டுத் திகைத்துப் போனாள்!

அவளது பார்வை படும்விதமாக பெரிதாக்கி மாட்டப் பட்டிருந்த படத்தில் இருந்தது, அவளுடைய வேண்டாத மூத்த மருமகள், அவளைப்பார்த்துச் சிரித்துக் கொண டிருந்தாள்.

''ஏ..ய்!'' என்ற அவளது அலறலை எதிர்பார்த்து கொண்டிருந்த குடும்பத்தினர் எல்லோருமே விரைவாக அங்கே வந்து சேர்ந்தனர்.

''என்ன இது? குணம் கெட்ட ஓர் அனாதைப் பெண் ணின் படம் இந்த வீட்டிலா? முதலில் இதைக் கழற்றித் தூக்கி எறி!'' என்று ஆணைகள் பறந்தன.

ஆனால், யாருமே, படத்தின் பக்கம் செல்லவே இல்லை.

கற்பகத்தின் கையசைவில் பணியாட்கள் பின்னடித்துச் சென்றுவிட், அவள் பேசினாள் ''அத்தை, இது, இந்த வீட்டு மூத்த மருமகளின் படம். தெய்வமாகிவிட்ட அவர் களுக்கு உரிய இடமாக, இங்கே எல்லா அறைகளிலுமே மாட்டி வைத்திருக்கிறேன். இங்கேயே இருந்து பிள்ளை கள், பேரப் பிள்ளைகள் என்று வழி வழியாக வரப்போகும் வாரிசுகளை, சுமங்கலித் தெய்வமாய் இருந்து ஆசீர் வதித்துக் கொண்டே இருப்பார்கள். இன்றைய வீட்டுத் தலைவியான என் முடிவு இது. எல்லோரும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். சுத்தம் பண்ணக்கூடப் படங்களைத் தொடக்கூடாது என்று வேலையாட்களிடம் கண்டிப் பாகச் சொல்லிவிட்டேன். யார் என்ன சொன்னாலும், படங்களின் கிட்டே கூட யாரும் போக மாட்டார்கள். நீங்கள் கூடப் பாருங்கள், இந்த அறைக்கே வெளிச்சம் போட்ட மாதிரி, எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்!''

''சே!'' என்று தன் வழக்கமான இடத்துக்குப் போய் அமர்ந்த தையல்நாயகிக்கு சில நிமிஷங்களுக்கு மேல், அங்கே உட்கார முடியவில்லை ''என் உணவை என் அறைக்கே அனுப்பு!'' என்றுவிட்டு எழுந்து போய்விட் டாள்.

''ஐயோ! உங்கள் ஐடியா பிரமாதம், சித்தி! அம்மா படத்தை, நிமிர்ந்து பார்க்க முடியாமல், பாட்டி இப்படி ஓடி விட்டார்களே! கடைசிவரை, எனக்கு சந்தேகமாகவே இருந்தது'' என்றாள் நிரஞ்சனி வியப்புடன்.

''தோற்றுப்போன வெறுப்பும்மா. வெற்றி, தோல்வி யாகி, கடைசியில் இறந்தவளிடம் தோற்றதை அவர்கள்

அல்லவா, படம் பறை சாற்றுகிறது! ஆனால், படம் ஏன் நீரு, இப்படி இருக்கிறது? எல்லாப் படங்களிலும், அந்தக் கற்பனை ஆளுக்குப் பதிலாக அப்பா படத்தை வைக்கச் சொன்னேனே!'' என்று கேட்டாள் கற்பகம்.

''சித்தீ!'' என்று அவளை இறுக அணைத்தாள் நிரஞ்சனி, ''தண்டனை பாட்டிக்குத்தான் அவசியமே தவிர உங்களுக்கு இல்லை சித்தி. உங்களுக்குப் பெரிய மனது பொறுத்துக் கொள்வீர்கள் என்றாலும், அப்பாவை அப்படி நிலையில் பார்த்துக் கொண்டே இருக்கிற துன்பம், இவ்வளவு நல்ல நீங்கள் அனுபவிக்கக் கூடாது சித்தி! அதனால்தான் படங்களை இப்படிப் போடச் சொன்னேன்'' என்றாள் பெண்.

கண்களில் நீருடன் ''என் கண்ணே!'' என்று மகளை அணைத்துக் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள் கற்பகம்.

தனஞ்சயனின் லேசான தொண்டைக் கமறல், இரு பெண்களையும் நடப்புக்குக் கொண்டு வந்தது.

ஒரு வெட்க நகையுடன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''உட்காருங்கள் மாப்பிள்ளை. இதோ ஜூஸ் போட்டு எடுத்து வருகிறேன். நீ பேசிக் கொண்டிரும்மா'' என்று விட்டு, கற்பகம் உள்ளே சென்றாள்.

''ஜூஸ் போ..ட்டு எடுத்து வருகிறார்களாமா? இங்கிதம் தெரிந்த மாமியார் தான்'' என்று, நிரஞ்சனியை அருகே இழுத்து அமர வைத்துக் கொண்டு, அவன் கேட்டான்.

''என்ன மேடம். என் இடத்தைத் தாராளமாக அடுத்தவர்களுக்குக் கொடுக்கிறீர்கள்? ம்?'' என்று மிரட்டுவது போலக் கேட்டான்.

''என்ன சார், மிரட்டுகிறீர்கள்? அதற்கெல்லாம், இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன தெரியுமா?'' என்றாள் அவள்.

''பத்த்...து நாட்கள்...!'' என்றான் அவன் ஏக்கமாக.

''பத்தே... நாட்கள்ப்பா!'' என்று நகைத்தாள் அவள்.

விழிகளைச் சுழற்றி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுச் சட்டென அவளை அணைத்து முத்தமிட்டு, அவன் ''எத்தனை நாட்கள்?'' என்று கேட்டான்.

''பத்த்...து நாட்கள்ப்பா!'' என்று அவனைப் போலவே அவளும் கூற, இருவரும் இணைந்து நகைத்த ஒலி, அந்த வீடெங்கும் பரவியது.


வெண்ணிலவு
நீ எனக்கு
ரமணிசந்திரன்